# திருக்கோயில்

"என்கடன் பணி செய்து கிடப்பதே"

CONNEMARA PUBLIC LIBRARY
12 JUL 1973
MADRAS



வரதராசப் பெருமாள்
காஞ்சிபுரம்.

மாலை 11] கீலக - மார்கழி - ஜனவரி, 1969 [மணி 4

சென்னை அரசாங்க அறநிலையப்



உள்ளாட்சித்துறை அமைச்சர் மாண்புமிகு திரு. மா. முத்துச்சாமி B.A., B.T., அவர்கள் திருவாவடுதுறை ஆதீனத்திற்கு வருகை தந்தபோது, ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களிடம், கலந்து உரையாடி மகிழும் காட்சி ((13—12—68)

## பொருளடக்கம்


1. ‘நாதனுர் ஆடும் நடம்’
2. ‘கனகமன்றில் அனகநாடகன்’
3. ஒட்டக் கூத்தர்
4. அபிராமி அந்தாதி
5. திருமெழுகுப் புறம்
6. சடங்குகளும் அவற்றின் இலட்சியமும்
7. உயிரிலக்கணம்
8. மெய்ந்நூல்களின் பிழிவு
9. மகாபாரதம்
10. தென்றமிழ்ப் பயன்
11. வேதப் பயனும் சைவம்
12. இறைவனின் எளிவரும் இயல்பு
13. ஸ்ரீராமாயண ரசப்பிரவாகம்
14. ‘தொழுதால் ஆம்’
15. ‘தோட்டிமை உடைய தொண்டர்’
16. மாணிக்கவாசகரும் திருக்கழுக்குன்றமும்


## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

ஆண்டுச் சந்தா ரூ. 10/-

தனி இதழ் விலை ரூ. ஒன்று

‘திருக்கோயில்’ இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள் “திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34” என்னும் முகவரிக்கு ரூபா பத்து அனுப்பி, எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்கள் ஆகச் சேர்ந்து கொள்ளலாம்.

அல்லது, அவ்வவ் வட்டார அறநிலைய உதவி ஆணையாளர்களின் அலுவலகங்களிலும், மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல், இதழ்கள் தவறுமற் சேர்தற்கு மிகவும் இன்றியமையாதது.

—ஆசிரியர்.

திருக்கோயில்
திங்கள் வெளியீடு
மாலை 11] கீலக - மார்கழி - ஜனவரி, 1969 [மணி 4

# நாதனர் ஆடும் நடம்

**முன்னுரை :**

எல்லாம் வல்ல இறைவன், தனக்கென ஓர் உருவும், ஒரு பெயரும் உடையவன் அல்லன். ஆயினும், நம் பொருட்டு, எம் பெருமான் பல உருவமும், பல பெயரும் கொண்டு விளங்கி அருள்கின்ருன். அங்ஙனம், சிவபெருமான் உயிர்களின் பொருட்டுக் கொண்டருளிய திருவுருவங்கள் பலவற்றுள், நடராச வடிவம் மிகவும் சிறந்து திகழ்வதொன்று.

நடராச வடிவம் நலங்கள் பலவும் நிறைந்தது; பழமையும் பெருமையும் வாய்ந்தது; தமிழ் நாட்டின் தனிப்பெரும் கலையியற் செல்வமாகக் கவினுற்றுப் புகழோங்கிப் பொலிவது! நடராசத் திருவுருவம் இடம் பெருத கோயில் எதுவும் இல்லை. எல்லாச் சைவக் கோயில்களிலும் நடராசத் திருவுருவம் சிறப்புற வைத்துப் போற்றி வழிபடப்பெற்று வருகின்றது.

நடராசப் பெருமானிடத்தும், அப்பெருமானின் திருவுருவச் சிறப்பிலும், சைவத் தமிழ்ச் சான்றேர்கள் எல்லோருமே மிகவும் ஈடுபட்டுத் திளைத்து இன்புறுகின்றனர். அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர், இராமலிங்க அடிகள் போன்ற சான்றேர்கள் அனைவரும், நடராசப் பெருமானிடத்தில் பெரிதும் ஈடுபட்டுப் பரவித் திளைத்து மகிழ்ந்துள்ளனர். சிலப்பதிகாரம், கலித்தொகை போன்ற பழம்பெரும் சங்க காலப் பனுவல்களிலும், நடராசப் பெருமானைப் பற்றிய புகழுரைகள் காணப் பெறுகின்றன.

**தத்துவ நுட்பங்கள் :**

நடராச வடிவம் கலைநலம் சிறந்தது; கவர்ச்சி மிக்குத் திகழ்வது! அதன் ஒவ்வொரு பகுதியும் கவின்மிக்குப் பல தத்துவ நுட்பங்களை உள்ளடக்கிக் கொண்டு விளங்குகின்றது.

அத்திருவுருவம் பரந்த திருமுக மண்டலம், பனித்த சடை, தரித்த கங்கை, இளம் பிறை, குனித்த புருவம், நெற்றிக் கண், கொவ்வைச் செவ்வாய், குமிண் சிரிப்பு, நீலகண்டம், பால் வெண்நீறு, ஒரு கையில் உடுக்கை, ஒரு கையில் நெருப்பு, ஒன்று அமைத்த கரம், மற்றென்று வீசிய கரம், புலித்தோல் ஆடை, பாம்பு அணிகள், எடுத்த திருவடி, ஊன்றிய திருவடி ஆகிய பலவற்றைக் கொண்டு, அழகுற மிளிர்கின்றது.

(1) **பரந்த திருமுக மண்டலம் :** இறைவனின் தலைமை நிலையும் எல்லையில்லா

அழகும், இனிய தண்ணளித்திறனும் உணர்த்துகின்றது.

(2) பனித்த சடை: ‘நுண்சிகை ஞான மாம்’ எனத் திருமூலர், திருமந்திரம் கூறு மாறு ஞானச் சிறப்பையும், ‘சைவம் விட் டிட்ட சடைகளும்’ எனத் திருவிசைப் பாடல் கூறுதற்கேற்பச் சிவநெறிக்குரிய தவ வொழுக்கச் சிறப்பையும், குறிக் கின்றது.

(3) கங்கையைத் தரித்தல்: ‘நில்லாத நீர் சடைமேல் நிற்பித்தான்’ என அப்பர் பாடுதல் போல, இறைவனது பேராற்றலை யும், வேகங் கெடுத்தாளும் வித்தகத்தை யும் விளக்குகின்றது.

(4) பிறையணிதல்: தன்னைச் சரண் அடைந்தவர்களைத் தாங்கித் தாழ்வு நீக்கிப் பாதுகாக்கும் வள்ளல் என்று அறிவிக் கின்றது.

(5) குனித்த புருவம்: புருவத்தை வளைத்தல் நெறித்தல் முதலியன, பரதக் கலையில் வல்லவர்கள் தம் குறிப்புக்களை உணர்த்தும் மெய்ப்பாட்டு வகைகள் ஆகும். தன்பாற் போந்து குறையிரந்து முறையிடும் அடியார்களின் விண்ணப் பங்களைக் கூர்ந்து நோக்கி ஊன்றிக் கேட்டருளும் கருணைத் திறம் காட்டும்.

(6) குமிண் சிரிப்பு: தன்பக்கல் போந்து, அடைக்கலம் புகுபவர்களை அரு ளுடன் வரவேற்று, அவர்கள் செய்த பிழைகளை மன்னித்து, அவர்களுக்கு வாழ் வளித்து மகிழ்ச்சி விளைவிக்கும் மாட்சிமை யுணர்த்தும்.

சென்று தொழுமின்கள் தில்லையுள்
சிற்றம்பலத்து நட்டம்,
என்று வந்தாய்? என்னும்
எம்பெருமான்றன் திருக்குறிப்பே

(7) பவளமேனி: பவளம்போற் சிவந்த மேனி, தீவண்ணன் ஆகிய இறைவன் நெருப்புப் போல்பவன் என்று நினைப்பிக் கும். நெருப்பானது தன்பால் எய்தும் பொருள்களை எல்லாம் தூய்மைப்படுத்திப் புனிதம் உறுவிக்கும். அதுபோல இறை வனும் தன்பால் அன்பு செய்வார் மாசுகளை யெல்லாம் போக்கித் தூய்மையாக்கி அருள்புரிதலைப் புலப்படுத்தும்.

(8) பால் வெண் நீறு: எல்லாப் பொருள்களும் அழிந்து, இறுதியில் நீறு ஆகும். நீறு மற்றொன்றாக மாறி அழி யாது. ஆதலின், திருநீறு அழிவிலாத் தன்மையையும், தூய இயல்பினையும் காட்டும். இறைவன் “தொழுதெழுவார் வினைவளம் நீறெழ நீறு அணிகின்றான்.” அவன் “செங்கிற மேனியில் வெண்ணீறு” அணியும் கோலம், எவர் நெஞ்சையும் கவர்ந்து பிணிக்கவல்ல பெற்றிமையினைத் தெற்றெனத் தெருட்டும்.

(9) நெற்றிக் கண்: “நுதல்விழி நாட் டத்து இறையோன்” “நெற்றித் தனிக் கண் ஒருத்தன்” “மத்தகஞ் சேர்தனி நோக் கினன்” “கண்ணுதலான்” என்று சான் றோர்கள் போற்றும் நிலையிற் சிவபிரானுக் குரிய சிறப்பு அடையாளம்.

(10) நீலகண்டம்: ‘விண்ணோர் அமுது உண்டும் சாவ, ஒருவரும் உண்ணாத நஞ்சு உண்டும், இருந்து அருள் செய்யும் பெருந்தகை ஆகிய, இறைவனின் நயத் தக்க நனிநாகரிக நலனைப் புலப்படுத்தும்.

(11) உடுக்கை: ‘எண்டோள் வீசி நின் றாடும் பிரான்’ என்றவாறு நடராச வடி வத்திற்கு எட்டும், அதற்கும் மேற்பட்டும் கைகள் அமைக்கப்படுதல் உண்டு. எனி னும், பொதுவாக நான்கு கைகள் எங்கும் காணப்படும். அவற்றில் வலக்கை ஒன்றில், உடுக்கை (டமருகம்) ஏந்தி யிருப்பது, ஒலியை எழுப்பி அணுத்துகள்களைத் திரட்டி உலகப் பொருள்களைப் படைக் கும் நோக்குடன், இறைவன் பரநாதத்தைத் தோற்றுவிக்கும் பான்மையினைத் தெளி விப்பது.

(12) நெருப்பு: உலகுயிர்களைப் படைத்த இறைவன், அவைகள் பிறந் தும் இறந்தும் துயருற்று வருந்தும் இளைப்பினை நீக்கும் பொருட்டுச் செய்யும்

அழித்தற் றொழிலுக்கு அடையாளம். "அழிப்பு இளைப்பு ஆற்றல்" என்பது சித்தியார். இடக்கை ஒன்றில் நெருப்பு இருக்கும்.

**(13) அமைத்த கை :** இதனை 'அபய கரம்' எனவும் வழங்குவர். 'நீவிர் அஞ்சற்க! யாம் நும்மைக் காக்கின்றோம்' எனத் தன் அடியவர்களுக்கு ஆறுதல் கூறித் தேற்றும் நிலை ஆதலின், இவ் வலக்கை காத்தற் றொழிலைக் காட்டும்.

**(14) வீசிய கரம் :** இவ் இடக்கை யானையின் துதிக்கையினைப் போன்று நீண்டு வளைந்து திகழ்தலின் 'கஜஹஸ்தம்' எனவும் வழங்கும். இக் கையின் ஒரு விரல் தூக்கிய திருவடியைக் காட்டிக் கொண்டிருக்கும். 'இந்தத் திருவடியை நம்பித்தொழுக! இஃது உம்மை ஈடேற்றும்' என்பது கருத்து. இக் கருத்தினைக் குமரகுருபரர் பின்வரும் பாடலிற் குறிப்பிட்டிருத்தல் காணலாம்.

"கூடும் கதி; ஒருகாற்கும்
பிட்டாற் போது' மென
நாடும் அபிநயத்தை
நண்ணிற்றல்!—ஓடியகட்
காதனுர் காண ஒரு
கால்காட்டிக் கையமைத்து
நாதனுர் ஆடும் நடம்"

**(15) எடுத்த திருவடி :** இஃது இறைவனின் இடது திருவடியாகும். எனவே அஃது அம்மையின் பகுதிக்கு உரியது. அம்மை அருளே உருவமாகத் திகழ்பவள். "அருளது சத்தியாகும் அரன்தனக்கு" என்பது சாத்திரம். "துன்பக் கடலிடைத் தோணித்தொழில் பூண்டு தொண்டர் தம்மை இன்பக்கரை முகந்து ஏற்றும் திறத்தன" என அப்பர் தேவாரம் அறிவிக்குமாறுபோல, பிறவிக் கடலில் விழுந்து தத்தளிக்கும் உயிர்களை அக்கடலினின்று எடுத்து மீட்டுக் காப்பாற்றும் அருளற் றொழிலுக்கு உரியது.

'தில்லையுட் சிற்றம்பலத்து நட்டம்
ஆட எடுத்திட்ட பாதம் அன்றோ,
நம்மை ஆட்கொண்டதே!"
—திருநாவுக்கரசர்.

**(16) ஊன்றிய திருவடி :** இஃது இறைவனின் வலக்கால்; ஆண் பகுதிக்கு உரியது. இது முயலகன் என்பவனை மிதித்து அடக்கும் வகையில், அவன் மீது ஊன்றிய நிலையில் அமைந்திருக்கும். நன்கு மிதித்து நசுக்கி விடாமலும், மிதியாமலே விட்டு விடாமலும், மெல்லென இறைவன் முயலகன்மீது நிற்கின்றான். இந்நிலைமை மலத்தை முழுதாக அழித்து விடாமலும், மலத்தால் உயிர்கள் பெரிதும் வருந்தாமலும், வினைப்பயன்களை உயிர்கள் நுகரச் செய்ய இறைவன் இயற்றும் மறைத்தற் றொழிலைக் குறிக்கும்.

"தோற்றம் துடியதனில்;
தோயும் திதி அமைப்பில்;
சாற்றியிடும் அங்கியிலே
சங்காரம்;—ஊற்றமாய்
ஊன்றும் மலர்ப்பதத்தில்
உற்றதிரோ தம்;முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு"

**(17) முயலகன் :** இவனைப் பூதம் குறள் அசுரன் அபஸ்மாரன் முதலிய பெயர்களால் நூல்கள் வழங்கும். முயலகன் ஆணவமலத்திற்கு அறிகுறி. ஆணவமலம் என்றும் அழிவதில்லை. அதுபோலவே முயலகனும் இறைவன் திருவடிக்கீழ் என்றும் விளங்குகின்றான். இறைவனுக்குப் படிநிலையாய் அமைந்து உதவுதல் போல, முயலகன் காணப்படுகின்றான். அதுபோல ஆணவமலமும் உயிர்களின் இறையின்ப நுகர்ச்சிக்கு ஓராற்றாற் காரணமாகின்றது. "இத்தை விளைவித்தல் மலம்" என்பது காண்க. "மாயாதே தன்சத்தி மாய்ந்து" முத்திநிலையில் உயிர்களின்பால் ஆணவமலம் அடங்கிக் கிடப்பதுபோல, முயலகனும் இறைவனின் திருவடிக்கீழ் "மாயாதே தன் சத்திமாய்ந்து" கிடக்கின்றான் என்க.

**(18) தெற்கு நோக்குதல் :** எல்லாத் திருக்கோயில்களிலும் நடராசப் பெருமானின் திருவுருவம் தெற்கு நோக்கியே அமைக்கப்பட்டிருத்தல் காணலாம். 'நம்பினவர்க்கு நடராசன் நம்பாதவர்க்கு எமராசன்' என வழங்கும் பழமொழிக்கு

ஏற்ப, இறைவன் தன்னை வழிபடும் அடியவர்கட்குத் தெற்கே யிருந்துவரும் எமராசனல் யாதொரு துன்பமும் நேராமற் காத்தற் பொருட்டே, தெற்கு நோக்கி ஆடுகின்ருன் என்பர் பெரியோர். திருவிளையாடற் புராணம் இயற்றியருளிய பரஞ்சோதி முனிவர், செந்தமிழ் மொழியின் மீதும், தென்றற் காற்றின் மீதும் உள்ள விருப்பம் காரணமாகத் தெற்கு நோக்கி இறைவன் நடனம் புரிகின்ருன் என்று, குறிப்பிட்டுள்ளார்.

"கடுக் கவின்பெறு கண்டனும்
தென்றிசை நோக்கி
அடுக்க வந்து உவந்து ஆடுவான்
ஆடலின் இளைப்பு
விடுக்க, ஆரமென் கால்திரு
முகத்திடை வீசி
மடுக்க வும்,தமிழ் திருச்செவி
மாந்தவும் அன்ருே?"

—பரஞ்சோதியார்.

"அடிப் பதுமத்து ஒன்று எடுத்துத்
தென்பால் முகமாக நின்று
நடிப்பதும் அத்தன்மையாம்
நமனர்இது நாடுமினே"

—குமரகுருபரர்.

**(19) மாதொரு பாகம் நோக்குதல்:** நடராச வடிவம் அமைக்கும் சிற்பக் கலைஞர்கள், அதன் முகமானது சற்றுச் சாய்ந்து நிற்கும் சிவகாமி அம்மையை நோக்கி ஆடுவது போலத் திருவுருவம் அமைப்பார்கள். இறைவன் அங்ஙனம் அம்பிகையை நோக்கி ஆடுதலைச் சேக்கிழார் சுவாமிகளும்,

"மாதொரு பாகம் நோக்கி
மன்னுசிற் றம்பலத்தே
ஆதியும் முடிவும் இல்லா
அற்புதத் தனிக்கூத் தாடும்
நாதனர் கழல்கள்..............."

—பெரிய புராணம்.

என அருளிச் செய்திருக்கக் காண்கின்ருேம். இங்ஙனம், அம்பிகையை நோக்கியே இறைவன் திருநடம் புரியும் இயல்பு குறித்துக் குமர குருபரர் அழகுற விளக்கி அருள்கின்ருர். குழந்தையின் குடர், மருந்தைச் செறிக்கும் ஆற்றல் உடையதன்று என உணர்ந்து, ஒரு தாயானவள் அம் மருந்தினைத் தான் உண்டு, அம் மருந்தின் பயனைத் தன் பாலின் வழியாக அக் குழந்தை பெறும்படி செய்து, அதன் நோய் நீங்குமாறு செய்வித்தல் போல, அம்பிகை நடராசப் பெருமானின் திருநடனத்தைத் தான் தரிசித்து, அதன் பயனை உயிர்கள் அடையும்படி செய்விக்கின்ருள்.

"பாலுண் குழவி பசுங்குடர் பொருதென
நோயுண் மருந்து தாய் உண் டாங்கு,
மன்னுயிர்த் தொகுதிக்கு இன்னருள் கிடைப்ப
வையம் ஈன் றளித்த தெய்வக் கற்பின்
அருள்சூற் கொண்ட ஐயரித் தடங்கண்
திருமாண் சாயல் திருந்திழை காணச்
சிற்சபை பொலியத் திருநடம் புரியும்
அற்புதக் கூத்தன்............"

—குமர குருபரர்.

**அறிஞர்களின் புகழுரை:**

இங்ஙனம் பண்டைப் பெரு நூல்களும் பெரியோர்களும் மட்டுமேயன்றி, இன்றைய உலகிற் புகழோங்கிய கலைஞர்களும், அறிஞர்களும் கூடக் கண்டு வியந்து மகிழ்ந்து போற்றிப் புகழும் வண்ணம், நடராச வடிவம் சிறந்துயர்ந்து திகழுகின்றது. "என் அத்தன் ஆடல் கண்டு இன்புற்றதால் இவ்விருநிலமே" எனத் திருநாவுக்கரசர் பாடுதற்கு ஏற்ப, இன்றைய உலகம் முழுவதுமே நடராச வடிவின் நலத்தினை நயந்தினிது பாராட்டி, வியந்து பெரிதும் இன்புற்று நிற்கின்றது எனலாம்.

(1) உலகப் புகழ்பெற்ற கலையியற் பேரறிஞர் ஆகிய திரு. ஆனந்தகுமார சுவாமி அவர்கள், "நடராச வடிவின் நலங்கள் அளப்பரியன. இத்தகையதொரு சிறந்த வடிவத்தினை, இந்நாளில் எத்தகைய பெருங் கலைஞனும்கூட, கருதியுணர்ந்து படைத்தல் இயலாது. இது வெறும் கவிதை யன்று. அறிவியல் நலமும் அமைந்தது. இத் திருவுருவம் பக்தர்களுக்கும், பாமரர்களுக்கும், விஞ்ஞானிகளுக்கும், மெய்ஞ்ஞானிகளுக்கும் எல்லாம், பெருவியப்பையும் பேரீடு பாட்டையும் விளைவித்து மகிழ்வித்து வருகின்றது. காலமும் இடமும் கடந்து, எல்லா நாடு மொழி சமயம் சார்ந்த மக்களாலும் போற்றப்படத் தக்கதாய்த் திகழ்கின்றது. இத்தகைய அரும்பெருஞ் சிறப்புக்கள் மிக்க இத்திருவுருவத்தினை, முதன் முதற் கருதிப் படைத்து உதவிய அருட்பெருஞ் சான்ருேர்கள் ஆகிய கலைஞர்களின் நுண்மாண்

நுழைபுலம் சாலவும் வியந்து போற்றுதற் குரியது. எனவே, எத்தனையோ பல தலை முறைகளாக நடராச வடிவம் மக்களின் உள்ளங்களை யெல்லாம் கவர்ந்து நின்று, வழிபடப்பெற்று வருதலில் வியப்பொன்று மில்லை. எவ்வளவோ ஐயப்பாடுகள் கொள் ளுவதிலும், எத்துணையோ பல குறைபாடு களைக் காண்பதிலுமே பழகிப் பயின்றுள்ள நாமும்கூட, நடராசரை வழிபட்டுத்தான் வருகின்றோம்! நடராச வடிவம் கலைநலம் சிறந்து கவர்ச்சி மிக்குத் திகழ்வது. அதன் ஒவ்வொரு பகுதியும் கவின்மிக்குப் பல தத்துவ நுட்பங்களைத் உள்ளடக்கிக் கொண்டு, ஒளிவிட்டு விளங்குகின்றது."

(2) உலக முதல்வனின் உருவ வெளிப் பாடே நடராச வடிவம். அருவநிலையில் உள்ள பரம்பொருள், உருவநிலையிற் கட் புலனாகும் வண்ணம் குறைவிலா நிறை வாக அமைந்த திருவுருவமே, நடராசர் ஆவர். இலயம், தொழில், இயக்கம் என் பனவற்றை அவர் குறிக்கின்றார். கடவுள் ஒரு படைப்பியற் கலைஞர்." எனப் பேரறிஞர் திரு. எஸ். இராதாகிருஷ்ணன் அவர்கள் கூறுகின்றார்.

(3) "நடராச வடிவம் பற்றிய கருத் துருவாக்கம், இந்திய மக்களின் பேரறி வின் பெருவிளைவாய்ப் பல நலங்கள் பொதிந்து ஒளிர்வதாகும். கலையியலும், அறிவியலும், தத்துவமும், சமயமும் ஒருங்கே கலந்து இயைந்ததன் பயன்தான், அத்திருவுருவம்! உண்மை என்பது வேற் றுமையில் ஒற்றுமை காண்பதே யாகுமா யின், நடராச வடிவத்தைக் காட்டிலும், ஒற்றுமையும், வேற்றுமையும் ஒருங்கே கலந்த சிறந்த நல்ல இணைப்பு, வேறு எது வுமே இல்லை. எல்லாக் காலமும் இடமும், எல்லா இயக்கமும், முடக்கமும், அவரிடத் திலேயே அடங்கிக் கிடக்கின்றன." என்று திரு. எஸ். வி. இராமமூர்த்தி என்னும் சீரிய அறிஞர் இயம்புகிறார்.

(4) சுவாமி விவேகானந்தர் அவர் களின் மாணவர்கள் பலருள் தலைசிறந்த ஒருவரும், 'பிரபுத்த பாரதம்' என்னும் ஆங்கில இதழின் ஆசிரியருமாக விளங்கி யிருந்த திரு. பி. ஆர். இராசம் ஐயர் என் னும் பெருந்தகையார், "மனித வடிவில் அமைந்த கடவுளின் திருவடிவங்கள் அனைத்திலும் இதுகாறும் மனிதன் அறிந் தனவற்றுள், நடராச வடிவமே மிகவும் சிறந்த தொன்றாகும். ஏனைப் பிற தலங் களில் எல்லாம் எழுந்தருளச் செய்யப் பெற்றுள்ள நடராசர் திருவுருவப் படிமை கள் எல்லாவற்றிற்கும், மூலமுதற்படிமை யாகத் திகழ்வதாய்ச் சிதம்பரத்தில் விளங் கும் நடராசர் திருவுருவப் படிவமே, நாம் அறிந்தனவற்றுள் மிகவும் தலைசிறந்த தாய்ப் பெரிதும் உள்ளெழுச்சி இன்ப உணர்வினை ஊட்டுந் தகையதாகும். வெறும் கலை நோக்கு ஒன்று மட்டுமே கொண்டு ஆராய்ந்தாலும் கூட, மிகவும் திருத்தமான உயிர்த் தன்மையுடைய, கவர்ச்சி நிறைந்த இத் திருவுருவினைப் போன்று, வேறொரு படிமத்தினைக் காண் டல் அரிது" எனக் கட்டுரைத்துப் போற்று கின்றார்.

## திருநடனச் சிறப்பு

இறைவன் கலைகளின் முதல்வன்; கலை யுருவினன்; கலைகள் அவனிடமிருந்தே தோன்றுகின்றன. இறைவன் ஒரு சிறந்த பெருங் கலைஞன் என்பதையே நடராச வடிவம் நலமுற உணர்த்துகின்றது. "மனிதன் பேசத் தொடங்கும் முன்னரே பாடத்தலைப் பட்டான்; பாடுவதற்கும் முன் னரே ஆடக்கற்றுக் கொண்டுவிட்டான்" என ஆராய்ச்சியாளர்கள் கூறுவர். அம் முறையில் நோக்கினால், எல்லாவகைக் கலைகளுக்கும் முற்பட்டுப் பழமையும் பெரு மையும் முதன்மையும் மிக்கதாக விளங் கும் கலை, நடனக் கலையே என்பது தெளி வாம்.

இத்தகைய நடனக் கலையின் தெய்வ மாக அமைந்து, அண்ட வெளியினையே நடன மேடையாகக் கொண்டு, தானே காண்பவனும் நடிப்பவனுமாக நின்று, பல வேறு வகையான, நடனத் திறங்களை இறைவன் செய்தருளுகின்றான். "ஆட்டு வித்தால் ஆரொருவர் ஆடாதாரே" என்ற படி, வானவெளியில் சுழலும் கோள்களும் (Planets), மீன்களும் (Stars) முதலிய அண்டகோடிகள் யாவும், அசைவுற்று இயங்கும் பொருட்டு, இறைவன் தான் அசைந்து யாவற்றையும் ஒருங்கே இயக்கு விக்கின்றான்.

மேலும், தில்லைச் சிதம்பரத்தில் இறைவன் இத் திரு நடனம் இயற்றுதற்குக் காரணம், அஃது இவ்வுலகின் நடுவிடமாக இருத்தலேயாம்.

விண்ணுக்கும் மேல், வியன்
பாத லக்கீழ், விரிநீர் உடுத்த
மண்ணுக்கு நாப்பண் நயந்து,
தென் தில்லை நின்றோன்"
—திருக்கோவையார்.

என மாணிக்கவாசகர் கூறுகின்றார். இவ்வாறே திருமந்திரம், கோயிற் புராணம், திருவாதவூரடிகள் புரணம் முதலியனவும் கூறுதல் காணலாம்.

**சைவ சித்தாந்தம் :**

நடராச வடிவம் பற்றிய பல தத்துவ நுட்பங்களைக் குறித்துச் சைவ சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கனுள் ஒன்றும், திருவதிகை மனவாசகங்கடந்தார் என்பவர் இயற்றியதும் ஆகிய "உண்மை விளக்கம்" என்னும் உயரிய நூல், பின்வருமாறு அழகுற உணர்த்துகின்றது.

(1) இறைவனின் உடுக்கையால் **ஆக்கல்;** அமைந்த கையாற் **காத்தல்;** ஏந்திய நெருப்பினால் **அழித்தல்;** ஊன்றிய திருவடியால் **மறைத்தல்** (திரோபவம்); எடுத்த திருவடியால் **அருளல்** (முத்தி, அனுக்கிகம்), ஆகிய ஐந்து தொழில்கள் நடைபெறுகின்றன.

(2) இறைவன் தனது துடியைக் கொட்டுவதால் ஆன்மாக்களின் மாயையினை உதறுகின்றான்; ஏந்திய நெருப்பினாற் கன்மமலத்தினைச் சுடுகின்றான்; ஊன்றிய திருவடியால் ஆணவ மலத்தினை அழுத்தித் தேய்விக்கின்றான்; தூக்கிய திருவடியால் உயிர்களைப் பிறவிக் கடலினின்று எடுக்கின்றான்; அபயகரத்தால் உயிர்களை இன்பக் கடலில் திளைக்கச் செய்கின்றான்;இத்தகையதிருநடனத்தைக் கண்டு விரும்பித் தொழுபவர்களுக்குப் பிறவித் துயர் இல்லாமல் நீங்கும்.

"மாயை தனைஉதறி,
வல்வினையைச் சுட்டு, மலம்
சாய அமுக்கி, அருள்
தான் எடுத்து,—நேயத்தால்
ஆனந்த வாரிதியில்
ஆன்மாவைத் தான் அழுத்தல்
தான்எந்தை யார்
பரதம் தான்."

(3) இறைவன் ஐந்தொழிற் திருக்கூத்து இயற்றுங்கால், அவனது திருமேனி ஐந்தெழுத்தினாலேயே அமைகின்றது. இறைவன் 'மந்திர சொரூபி' யாதலின், அவன்றன் திருவுருவம் திருவைந்தெழுத்து மந்திரத்தினாலேயே அமைவதாகின்றது. திருவடியில் **ந;** வயிற்றில் **ம;** தோளில் **சி;** முகத்தில் **வ;** திரு முடியில் **ய.** இவ்வமைப்பு 'தூலபஞ்சாக்கரம்' எனவும், 'இலயாங்கம்' எனவும் கூறப்படும்.

ஆடும் படிகேள்!நல் அம்பலத்தான். ஐயனே!
நாடும் திருவடியி லேநகரம்;—கூடும்
மகரம் உதரம்; வளர்தோள்சிகரம்;
பகருமுகம் வா;முடியப் பார்.

(4) இனி 'சிவயநம' என்பது சூக்கும பஞ்சாக்கரம் என வழங்கும். அது நடராச வடிவத்தில் பின்வருமாறு அமைந்து விளங்குகின்றது; துடியில் **சி;** வீசும் கரத்தில் **வ;** அபயகரத்தில் **ய;** ஏந்துகின்ற நெருப்பில் **ந;** அடிக்கீழ் முயலகனில் **ம.** இவ்வமைப்பு 'போகாங்கம்' எனப்படும்.

சேர்க்கும் துடிசிகரம்; சிக்கனவா வீசுகரம்;
ஆர்க்கும் யகரம் அபயகரம்;—பார்க்கில் [இறைக்கு
அங்கி நகரம்; அடிக்கீழ் முயலகனார்
தங்கும் மகரம் அது தான்.

(5) பிற திருவுருவங்களிற் போலத் தனியே பிரித்தெடுக்கக் கூடிய நிலையில் இல்லாமல், நடராச வடிவத்திற் பிரிவற இயைந்து கூடியே இருக்கின்ற திருவாசியானது, பிரணவம் ஆகிய ஓங்காரத்தையும், இத் திருவாசியின் சுடர்கள் 51 எழுத்துக்களையும் சுட்டுகின்றன.

**அண்டமும் பிண்டமும் :**

இனி வேறு பலவும் ஈண்டு எண்ணியுணர்வதற்கு உரியனவாக உள்ளன. உலகம் ஆகிய அண்டம் (Macrocosm) அமைந்திருக்குமாறுபோலவே, நம் உடம்பு ஆகிய பிண்டமும் (Microcosm) அமைந்துள்ளது. இறைவன் அண்ட வெளியில் திரு நடனம் புரிதல் போலவே, நம் உடம்பினுள்ளே பிண்டத்தின் கண்ணும் நடனம் புரிந்தருள்கின்றான். அண்டவெளி நடனம் தில்லைச் சிதம்பரத்தில் நிகழ்கின்றது. பிண்டத்தினுள் உடம்பின் கண்ணே

நிகழும் நடனம் நம்முடைய இருதயத்தில் நடைபெறுகின்றது. அண்டத்துக்குச் சிதம்பரம் போலப், பிண்டத்துக்கு இருதயம் ஆகிய நெஞ்சப்பை (Heart) இலங்குகின்றது. இருதயத்தின் அசைவும் இயக்கமும் நின்று விட்டால் உடல் செயலற்றுப் பிணம் ஆகும். அவ்வாறே தில்லைச் சிதம்பரத்தில் இறைவனின் திரு நடனம் நிகழாதொழியின், அண்டங்கள் எல்லாம் அசைவற்று இயங்காமல் நின்று அழிந்தொழிந்து போகும். அணுக்களும் அண்டகோடிகளும் தத்தம் நிலையினும் நெறியினும் ஆடி அசைந்து, முறையே இயங்கிக் கொண்டு இருப்பதற்குரிய, மூலமுதற் காரணம், நடராசப் பெருமானின் ஆடலும் அருளியக்கமுமேயாகும்.

## முடிவுரை :

இங்ஙனமெல்லாம் 'சிந்திப்பரியன, சிந்திப்பவர்க்குச் சிறந்து செந்தேன் முந்திப் பொழிவன' என்னும் நிலையில், பற்பல உயர்ந்த தத்துவ நுட்பங்களை யுணர்த்தி நிற்கும் நடராச வடிவத்தின் மாட்சிமையை அளவிட்டு உரைப்பதரிது

"உலகமே உருவம் ஆக,
யோனிகள் உறுப்ப தாக,
இலகுபேர் இச்சா ஞானக்
கிரியையுட் கரணம் ஆக,
அலகிலா உயிர்ப்புலன்கட்கு
அறிவினை ஆக்கி, ஐந்து
நலமிகு தொழில்க ளோடும்
நாடகம் நடிப்பன் நாதன்!"

—சிவஞான சித்தியார்.

என அருள்நந்தி சிவாசாரியர் கூறுமாறு போல, உலகமே உருவமாகவும், பலவகைப் பிறப்பு வகைகளே உறுப்பாகவும், இச்சை ஞானம் கிரியை என்பனவே உட்கருவிகள் ஆகவும் கொண்டு, ஆருயிர்களுக்கெல்லாம் அறிவினை நெறிமுறையே வளருமாறு செய்து, ஐந்தொழில்களை இயற்றி வரும் அருட்பெருந் தெய்வம்ஆகிய நடராசப் பெருமானின் திருவடிகளை, இடைவிடாது அன்புடன் வழிபட்டு நாம் அனைவரும் நலம்பலவும் பெற்று உய்வோமாக!

—ஆசிரியர்.

---

(1) "No artist of today, however great, could more exactly or more wisely create an image of that Energy which science must postulate behind all phenomena. This is poetry, but nevertheless, the truest science."

—**Dr. Ananda Coomaraswamy,**

Siddhanta Diphika, vol. XIII.

(2) "Nataraja is the manifestation of the Lord of the Cosmos. He is the perfect image of becoming as distinct from being. He symbolizes rhythm, action, movement. God is a creator-artist."

—**Dr. S. Radhakrishnan,**

Occasional Speeches and Writings P. 13.

(3) "The conception of Nataraja is the most comprehensive conception of Indian intellect. It is a synthesis of art and science, philosophy and religion. If reality is unity in diversity there is no finer synthesis of unity and diversity than Nataraja. In him are compressed all spaces, all times, all the flow of life and all the immobility of existence."

—**Sir. S. V. Ramamurthy,**

Science and Spirit, P. 106

(4) "Of all the anthropomorphic representations of the deity, yet known to man, that of Nataraja is one of the very best and the image at Chidambaram, which is the prototype of all similar image elsewhere is certainly one of the most inspiring figures that we have known. Even considered as purely a work of art, there are few images more faultless, more ife-like and more charming."

—**B. R. Rajam Iyer,**

Rambles in Vedanta, P. 511

# கனகமன்றில் அனகநாடகன்

**முன்னுரை :**

மேலை நாட்டு இல்லற வாழ்வின் இயல்பு பற்றிப் பலவகையான நகைச்சுவை உரைகளை அறிஞர்கள் குறிப்பிடுவதுண்டு. அவைகள் பலவற்றுள், 'உன்னுடைய குழந்தைகளும், என்னுடைய குழந்தைகளும், நம்முடைய குழந்தைகளோடு சண்டையிட்டுக் கொள்கின்றனர்'* என்று ஒரு மனைவி தன் கணவனிடம் தெரிவிப்பதாக அமைந்த சொற்றொடர் ஒன்று, அடிக்கடி அறிஞர்களால் கூறப்படும்.

இதன்கண் 'என்னுடைய குழந்தைகள்' என்று மனைவி கூறுவதனால், அவள் இதற்கு முன்பு வேறொருவரை மணந்து குழந்தைகள் பெற்றிருந்தாள் என்று தெரிகின்றது. 'உன்னுடைய குழந்தைகள்' என்றதனால் கணவன் இதற்குமுன்பு வேறொருத்தியை மணந்து குழந்தைகள் பெற்றிருந்தான் என்று புரிகின்றது. 'நம்முடைய குழந்தைகள்' என்றதனால், முன்பு ஒருவனுக்கு மனைவியாய் இருந்தவளும், முன்பு ஒருத்திக்குக் கணவனாக இருந்தவனும் ஆகிய இவ்விருவரும், தம்முள் கணவனும் மனைவியுமாகப் புதிதாக மறுவலும் மணந்துகொண்டு, மற்றும் பல குழந்தைகளைப் பெற்றுள்ளனர் என்று புலப்படுகின்றது.

**உறவுமுறைச்சிக்கல் :**

இவ்வாற்றால், மேலை நாட்டுக்குடும்ப வாழ்வின் இயல்பு எத்தகையதென்று நாம் ஒருவாறு அறிதல் கூடும். இத்தகைய குடும்பவாழ்வின் இயல்பினால், அந்நாடுகளில் மிகவும் சிக்கலான பலவகை உறவு முறைகளும், நம்மனோர்க்கு மனக் குழப்பம் விளைக்கத்தக்க வகையில், அமைவது உண்டு. அதனை விளக்குதற்குப் பின்வருமாறு வழங்கும் 'உறவு முறை பற்றிய சிக்கற் புதிர்' ஒன்றை இனியதோர் எடுத்துக்காட்டாகக் கூறலாம் :—

'என் தந்தையே எனக்கு மருமகன் ஆகின்றார்; என் வளர்ப்புப் பெண்ணே எனக்குத் தாய் ஆகின்றாள்; என் சகோதரனே எனக்குப் பேரனாகின்றான்; என் மனைவியே எனக்குப் பாட்டி ஆகின்றாள்; நானே எனக்குப் பாட்டன் ஆகின்றேன்; இஃது எங்ஙனம் இயலும் என்று உங்களுக்குப் புரிகின்றதா? கூறுகின்றேன் கேளுங்கள்'

'வயது வந்த ஒருமகள் உள்ள விதவையை, நான் மணந்துகொண்டேன். என் தந்தையார், என் மனைவியின் அந்த மகளைக் காதலித்து மணந்துகொண்டார். இதனால் என் தந்தையாரே எனக்கு மருமகன் ஆனார். என் வளர்ப்புப்பெண் எனக்குத் தாய் ஆனாள். எவ்வாறு எனின், அவள் என்தந்தையின் மனைவியன்றோ?'

'என் தந்தையின் மனைவி, ஒரு மகனுக்குத் தாயானாள். அவன் எனக்குச் சகோதரன் முறை. அதே சமயத்தில், அவன் எனக்குப் பேரனும் ஆவான். ஏனெனில், அவன் என் பெண்ணின் மகனல்லனோ?'

'இங்ஙனமே என் மனைவி, எனக்குப் பாட்டி ஆயினாள். எவ்வாறெனில், அவள் என் அன்னையின் அன்னை. நான் என் மனைவியின் கணவன்; அதே சமயத்தில் பேரன். ஒருவனுடைய பாட்டியின் கணவன் பாட்டன் ஆதலால், நானே எனக்குப் பாட்டன் ஆகின்றேன்.'

* "Your children and my children are quarrelling with our children"

### சிவபிரானும் உமாதேவியும்:

இத்தகைய சுவைமிக்க 'உறவுமுறைச் சிக்கற் புதிர்' ஒன்றைக் குமர குருபர அடிகள் தாமும், ஓரிடத்திற் குறிப்பிடுகின்ருர். சிவபெருமானுக்கு உமாதேவியார் மனைவியாகத் திகழ்கின்ருள் என்றே நாம் பொதுவாக அறிவோம். ஆனல் குமர குருபரரோ, சிவபெருமானுக்கு உமையம்மை மனைவி மட்டும் அல்லள், பெற்றெடுத்த தாயாகவும் பிறங்குகின்ருள். அம்மட்டுமோ! தங்கையாகவும் திகழ்கின்ருள். இனி ஒருவகையில் மகளாகவும் விளங்குகின்ருள் என்கின்ருர்.

இது என்ன புதுமை? இங்ஙனமும் உண்டோ? என்று நாம் தயங்குகின்ரேம். உறவு நிலை ஒன்றற்கொன்று முரண்பட்டு நிற்கின்றதே, இஃது எவ்வாறு பொருந்தும்? என்று எண்ணி, நாம் மனக்குழப்பமும் கொள்கின்ரேம்.

### குமரகுருபரர் விளக்கம்:

குமரகுருபரரோ, 'இதில் என்ன முரண்பாடு இருக்கின்றது. நான் உள்ளதைத் தானே கூறுகின்றேன். உண்மையைக் கூறினல் மனக்குழப்பம் எதற்கு?' என வினவி, பின்வருமாறு தாம் புகன்ற புதிரை விடுவிக்கின்ருர்:

'அருள்அது சத்தி ஆகும் அரன் தனக்கு' என்றபடி, சிவபெருமான் தனது திருவருளையே சக்தியாகக் கொள்கிருர். திருவருள் ஆகிய சக்தியை ஒரு பெண்ணுக உருவகம் செய்து உரைத்தல் கவிதைமரபு. நாம் நம்கையினல் எல்லாத் தொழில்களையும் செய்கின்ரேம்; அது போல, இறைவனும் தனது திருவருட் சத்தியாகிய நங்கையினல், ஆக்கல் அளித்தல் முதலிய ஐந்தொழில்களைச் செய்கின்ருன். 'நம்கையினல் நாம் அனைத்தும் செய்தாற் போல் நாடு அனைத்தும் நங்கையினற் செய்தளிப்பான் நாயகன்' என்பது திருக்களிற்றுப் படியார். இங்ஙனம், இறைவன் ஐந்தொழில் இயற்றுதற்குத் திருவருளாகிய சத்தியே நங்கையாக அமைந்து நற்றுணை புரிதலின், உமாதேவி எனப்படும் அச்சத்தி, சிவபிரானுக்கு மனைவிமுறை ஆகின்ருள்.

இம்மட்டோ! உலகத் தோற்றத்திற்கும் இயக்கத்திற்கும் அடிப்படையாக உள்ள நிலம் முதல் நாதம் ஈருகிய முப்பத்தாறு தத்துவங்களும் தோன்றும் முறையை விளக்குங்கால், சிவ தத்துவத்தினின்று சத்தி தத்துவமும், சத்தி தத்துவத்தினின்று சதாசிவ தத்துவமும் தோன்றுகின்றன என்று நூல்கள் கூறுகின்றன. அதன்படி, சிவதத்துவத்தினின்று சத்தி தத்துவம் தோன்றுதலால் **மகள்** ஆகவும்; சிவதத்துவம் தோன்றிய பின்னர்ச் சத்தி தத்துவம் தோன்றுதலால், **தங்கையாகவும்**, சிவபிரானுக்கு உமாதேவி திகழ்கின்ருள்.

சத்தி தத்துவத்தினின்று பின்னர்ச் சதாசிவ தத்துவம் தோன்றுவதாகச் சாத்திர நூல்கள் கூறுதலால், மற்றும் ஒருவகையில் உமாதேவி சிவபிரானுக்குத் **தாய்** ஆகவும் விளங்குகின்ருள்.

இங்ஙனம், தத்துவத் தோற்ற நுட்பத்தினைத் தகவுற உணர்ந்தால், உமாதேவி சிவபிரானுக்கு மனைவி மட்டும் அல்லள்; தாயாகவும், தங்கையாகவும், மகளாகவும் கூட அமைந்து விளங்குகின்ருள் என்பதில் ஐயமும் உண்டோ? எனச் செவ்விதின் விளக்கியருள்கின்ருர் குமரகுருபரர்!

ஒருத்தியே ஒருவனுக்கு மகளாகவும்—தங்கையாகவும்—தாயாகவும் — மனைவியாகவும் விளங்குவது உண்டோ? இங்ஙனமும் ஓர் உறவுமுறை இருத்தல் இயல்போ? என நாம் வியந்து ஐயுற்று வினவினல், அதற்கும் குமரகுருபரர் அமைதியாகப் பின்வருமாறு விடை விளக்கம் கூறுகின்ருர்.

### கூத்தாடி:

நாடகமேடை ஏறி நடிக்கப் புகும் நடிகர்கள், தமக்கு அவ்வப்போது தரப்பெறும்

பாகங்களை ஏற்று, அவற்றிற்குப் பொருந்த வேடம் பூண்டு நடிப்பதே அன்றி, வெறும் நாடகத்தில் வரும் உறவு முரண்பாடுகள் குறித்துக் கவலை கொள்வரோ? கூத்தாடிக்கு உறவும் இல்லை, முறையும் இல்லை என்னும் பழமொழியினை நீர் கேட்டதில்லையோ? சிவபிரானும் ஒரு கூத்தாடி தானே! தில்லையிற் பொன்னம்பலத்தில் நடனம் ஆடும் அக்கூத்தனுக்கு, ஒருத்தியே மனைவி—தாய்—தங்கை—மகள் என மாறிமாறி வேடம்பூண்டு, நடிப்பில் துணை புரிவது இயல்புதானே ? இதன்கண் பொருந்தாமை யாது உள்ளது? என நம்மை வினவிக் குறுநகை புரிந்தருள் கின்றார் குமரகுருபரர் !

### சித்தாந்த நூல்கள் :

அப்போதும், நாம் சிந்தை கலங்கித் திகைத்து நிற்றலை நோக்கும் குமரகுருபர அடிகள், மேலும் விளக்க முற்படுகின்றார் : சிவபிரானுக்கு உமாதேவி மனைவியும் தாயும் தங்கையும் மகளும் ஆக விளங்குகின்றாள் என்று, யாமே ஏதோ புதிதாகப் புனைந்துகட்டிக் கூறுவதாக, நீவிர் நினைத்தல் வேண்டா. எத்துணையோ பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட திருமூலர், மாணிக்கவாசகர், அருள் நந்தி சிவம் போன்ற சைவசித்தாந்த சமயப் பெருஞ் சான்றோர்களும், மேலே கூறிய கருத்தை அழகுற வெளியிட்டுள்ளனர் என்கின்றார்.

வாயும் மனமும் கடந்த மனோன்மணி
பேயும் கணமும் பெரிதுடைப் பெண்பிள்ளை
ஆயும் அறிவும் கடந்த அரனுக்குத்
தாயும் மகளும் நல்தாரமும் ஆமே.

—திருமந்திரம் (1)

மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்நகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடைய ஆரமுது எங்கள் அப்பன்
எம்பெருமான் இமவான் மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்தகப்பன்
தமையன்எம் ஐயன் தாள்கள்பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கைநல்லீர்
பொற்றிருச் சுண்ணம் இடித்தும் நாமே.

—திருவாசகம் (2)

தவளத்த நீறுஅணியும் தடந்தோள்
அண்ணல், தன்னொருபால்
அவள்அத்தனும்; மகனும்; தில்லையான்
அன்று உரித்தது அன்ன
கவளத்த யானை கடிந்தார் கரத்த
கண்ணார் தழையும்
துவளத் தவகுனவோ சுரும்பார்
குழல் தூமொழியே.

—திருக்கோவையார் (3)

சிவம்சத்தி தன்னை ஈன்றும்,
சத்திதான் சிவத்தை ஈன்றும்,
உவந்திரு வரும் புணர்ந்திங்கு
உலகுயிர் எல்லாம் ஈன்றும்,
பவன்பிரம சாரி யாகும் ;
பால்மொழி கன்னி யாகும்;
தவந்தரும் ஞானத் தோர்க்குஇத்
தன்மைதான் தெரியுமன்றே.

—சிவஞான சித்தியார். (4)

எனவரும் திருப்பாடல்கள் பலவும், மேலே யாம் கூறிய கருத்தை அரண் செய்து, வலியுறுத்தி நிற்றல் காண்மின்கள், எனக் கூறும் குமரகுருபரர், மேலும் ஒரு புதுமையைப் புலப்படுத்தி அருள்கின்றார்.

### பிரமசாரியும் கன்னியும் :

சிவபிரானும் தேவியும், உலகுயிர்களை எல்லாம் உவந்து ஈன்றெடுத்த தாய் தந்தையரே ஆயினும், சிவபிரான் பிரம சாரியாகவே திகழ்கின்றார்; அம்பிகையோ கன்னியாகவே விளங்குகின்றாள். இவ் வியத்தகு புதுமைச் செய்தியை, அருள் நந்தி சிவாசாரியார்,

பவன் பிரமசாரி ஆகும்;
பான்மொழி கன்னி ஆகும்.

எனக் கூறியருளுதல் காண்மின்கள். பிரமசாரியாகவும் கன்னியாகவும் இருந்தே இறைவனும் இறைவியும், உலகுயிர்களை எல்லாம் உவப்புறப் பெற்றெடுத்தனர் என்பது, ஒரு விந்தைச் செய்தியேபோலத் தோன்றும். ஆயினும் ‘விச்சதின்றியே

விளைவு செய்யும் இந்திரஞால வித்தகன்' (Magician) ஆகிய அக்கூத்தாடி, எதனைத்தான் செய்யமாட்டான்? அவனுக்கு அரியது ஒன்றும் உண்டோ?' என வினவிச், செந்தமிழ்ச் சிவநலம் சான்ற குமரகுருபரர், நம் ஐயத்தை அகற்றித் தெருட்டியருள்கின்றார்.

சிதம்பரச் செய்யுட் கோவை :

குமரகுருபர அடிகள் இயற்றியருளிய 'சிதம்பரச் செய்யுட் கோவை' என்னும் சிறப்புமிக்க செந்தமிழ்ச் செய்யுளியல் நூலில்,

> கனகமார் கவின்செய் மன்றில்
> அனக நாடகற்கு எம் அன்னை
> மனைவிதாய் தங்கை மகள்'

எனவரும் அரிய இனிய சிறிய செய்யுள், இன்னோரனைய பல சிறந்த கருத்துக்களைத் தோற்றுவித்து, நம்மையெல்லாம் மகிழ்வுறுத்துகின்றது. சொற்பொருள் நலனும் கற்பனை வளனும், துதைந்து செறிந்த இவ்வினிய செய்யுளை எண்ணுந்தொறும், நம் உள்ளம் கழிபேருவகை எய்திக் களிதுளும்பி நிற்கின்றது.

முடிவுரை :

குமரகுருபர அடிகளாரின் திருவுளக் குறிப்பின் வழியே, கனகமன்றில் ஆடும் அனகநாடகனை, நாம் அனைவரும் போற்றிப் புகழ்ந்து, நலம்பலவும் பெற்று உய்ய முயலுவோமாக.

—ஆசிரியர்.

---

## பாவை மாநாடுகள்

| | | |
|---|---|---|
| சிவகாசி விசுவநாத சுவாமி கோயில் | ... | 27—12—68 |
| பச்சாம்பேட்டை இராமலிங்கேசுவரர் கோயில் | ... | 29—12—68 |
| கீழ்வேளூர்க் கேடிலியப்பர் கோயில் | ... | 29—12—68 |
| சாத்தூர் வேங்கடாசலபதி கோயில் | ... | 30—12—68 |
| கும்பகோணம் ஆதிகும்பேசுவரர் கோயில் | ... | 1—1—69 |
| சமயபுரம் மாரியம்மன் கோயில் | ... | 2—1—69 |
| தஞ்சைப் பெருவுடையார் கோயில் | ... | 2—1—69 |
| திருப்பாதிரிப்புலியூர் பாடலேசுவரர் கோயில் | ... | 4—1—69 |
| அம்பல் பிரமபுரீசுவரர் கோயில் | ... | 5—1—69 |
| திருமங்கலம் சாமவேதீசுவரர் கோயில் | ... | 5—1—69 |
| சிக்கல் வெண்ணெய்ப் பெருமான் அடிகள் கோயில் | ... | 5—1—69 |
| திருவானைக்கா சம்புகேசுவரர் கோயில் | ... | 5—1—69 |
| திருநெல்வேலி நகரத் திருக்கோயில்கள் | ... | 6—1—69 |
| ஆண்டார் குப்பம் பாலசுப்பிரமணியர் கோயில் | ... | 6—1—69 |
| திருத்துறைப்பூண்டி பிறவி மருந்தீசுவரர் கோயில் | ... | 7—1—69 |
| காஞ்சிபுரம் குமரக்கோட்டம் | ... | 7—1—69 |
| ஸ்ரீவில்லிபுத்தூர் நாச்சியார் கோயில் | ... | 7—1—69 |
| திண்டிவனம் லட்சுமி நரசிம்மசுவாமி கோயில் | ... | 11—1—69 |
| சென்னை ஏகாம்பரேசுவரர் கோயில் | ... | 12—1—69 |

# ஒட்டக் கூத்தர்

**முன்னுரை :**

தமிழகத்தில் வாழ்ந்திருந்த சிறந்த பெருங்கவிஞர்களின் வரிசையில், ஒட்டக் கூத்தர் ஒருவர். கூத்தர் என்பது, இவரு டைய இயற்பெயர். இது தில்லை நடராசப் பெருமானுக்கு உரிய பெயர். "தில்லைப் பயில் கூத்தன்" என மணிவாசகர் ஆங் காங்கே குறிப்பிடுதல் காணலாம். இவ ரைக் கூத்தமுதலியார் எனவும் நூல்கள் வழங்கும். ஒட்டம் (பந்தயம்) வைத்துப் பாடுதலில் வல்ல பெருங் கவிஞராகத் திகழ்ந்தமையின், இவருக்கு ஒட்டக் கூத்தர் என்னும் காரணச் சிறப்புப் பெயர் வழங்கு வதாயிற்று.

கவிதை இயற்றும் திறனில் பேராற்றல் மிக்குத் திகழ்ந்ததனால் கவிராட்சசர் என் றும், கவிஞர்கள் பலரும் போற்றும் தலைமைப்பாடு வாய்ந்து விளங்கியதனால் கவிச்சக்கரவர்த்தி என்றும், சோழ அரசர் கள்பாற் காளம் என்னும் விருது பெற்ற மையாற் காளக்கவி என்றும், வடமொழி தென்மொழிகளிலும் மற்றும் பல்வேறு கலை களிலும் நல்ல தேர்ச்சியுற்றிருந்தமையாற் சர்வக்ஞ கவி என்றும், இவர் பல சிறப்புப் பெயர்கள் பெற்றிருந்தார். இவர்தம் கவி தைகள், சொற்செறிவும் பொருட்செறிவும் அமைந்து மிக்க மிடுக்கான நடையுடை யனவாதலின், இவருக்குக் கௌடப் புலவர் எனவும் ஒரு பெயர் உண்டு.

இவர் விக்கிரம சோழன் (கி. பி. 1118—1133), இரண்டாம் குலோத்துங்கன் (கி. பி. 1133—1150), இரண்டாம் இராசராசன் (கி. பி. 1146—1163) என்னும் மூன்று சோழப் பேரரசர்களின் காலத்தும் வாழ்ந் திருந்தவர்; அவர்களின் அவைக் களப் புலவராக விளங்கியவர். அவர்களாற் பெரிதும் மதித்துப் போற்றப் பெற்றவர்.

**புகழ்ச்சிப் பாடல் :**

ஒரு சமயம் இரண்டாம் குலோத்துங் கனின் அவைக் களத்திற்குச் சென்ற இவர், அவ்வரசனைச் சிறப்பித்து,

"ஏதேனும் குறையுற்றவர்கள் தமது குறை யைத் தெரிவித்துத் தீர்த்துக் கொள்ளுவதற்காகத் தனது அரண்மனையின் வாயிலிற் கட்டப் பெற் றுள்ள ஆராய்ச்சி மணியின் நாக்கானது, யாருக் கும் எந்தக் குறையும் நேராமையினால், அசைக்கப் பெருமலே கிடக்கும்படி, உலகத்தை யெல்லாம் தனது அருளறம் பூண்ட ஆட்சியாகிய வெண் கொற்றக் குடையின் நிழலின்கண் இன்புற்றுத் தங்கியிருக்குமாறு செய்த அரசர் பெருமான்"

என்னும் கருத்து அமைய,

"ஆடும் கடைமணி நா அசையாமல்
அகிலம் எங்கும்
நீடும் குடையில் தரித்த பிரான்..."

எனத் தொடங்கி ஒரு பாடலைப் பாட முற் பட்டார். தனது ஆசிரியர் ஒட்டக்கூத்தர் தன்னைப் பலகாற் பெரிதும் புகழ்ந்து பாடிக் கொண்டிருத்தலைத் தனது பணிவுடைமை காரணமாக விரும்பாத குலோத்துங்க சோழன், தன்னை அவர் புகழ்ந்து பாட முற் படும் பாடலையே, தான் அவரைப் புகழ்ந்து பாடும் முறையில் மாற்றி அமைத்து, தனக்கு அவர்பால் உள்ள மிக்க மதிப் பினையும் பெரும் பக்தியினையும் புலப் படுத்த விரும்பினான். ஆதலின், உடனே அவர் பாடியதனையே அடியொற்றித் தொடர்ந்தான்.

"...என்று என்னை வாழ்த்தி, நாள்தோறும் புதிய புதிய சொற்பொருட் சுவை நலங்கள் அமையுமாறு பாடுகின்ற, கவிஞர் பெருமான் ஆகிய ஒட்டக் கூத்தரின் திருவடித் தாமரைகளை, அன்புடன் தனது தலையின்கண் சூடிக்கொள்ளுகின்ற குலோத் துங்க சோழன் என்று உலகத்தார் என்னைக் கூறுவார்கள்"

என்னும் சிறந்த இனிய கருத்து அமையும் படி,

"...என்று, நித்தம் நவம்
பாடும் கவிஞர் பிரான் ஒட்டக் கூத்தன்
பதாம்புயத்தைச்
சூடும் குலோத்துங்க சோழன் என்றே
எனைச் சொல்லுவரே"

என்று பாடி முடித்தான்.

இவ்வரலாற்று நிகழ்ச்சியினால், குலோத் துங்க சோழனின் குணச் சிறப்பும், அவன் தனது ஆசிரியரும் அவைக்களப் புலவரும் ஆகிய ஒட்டக்கூத்தர் பாற் கொண்டிருந்த பேரன்பும் பெருமதிப்பும் இனைய என்று உணரலாம்.

## தனிச் சிறப்பு :

தமிழ் நாட்டில் வாழ்ந்திருந்த சிறந்த பெருங் கவிஞர்கள் பலரும் தமக்கென ஒவ்வொரு துறையில், தனிச் சிறப்பும் தேர்ச்சியும் பெற்றிருந்தனர். வெண்பாப் பாடுதலில் வல்லவர் **புகழேந்திப் புலவர்**; பரணி என்னும் நூலைப் பாடுதலில் தேர்ச்சிமிக்கவர் **செயங்கொண்டார்**; விருத் தம் என்னும் செய்யுள் வகைகளைக் கை யாளுவதில் ஒப்புயர்வற்றவர் **கம்பர்**; கலம் பகம் பாடுதலில் இணையற்றவர்கள் **இரட் டைப் புலவர்**; வசைபாடுதலில் வல்லமை வாய்ந்தவர் **காளமேகம்**; சந்தப் பாடல் களைத் தகவுறப் பாடும் திறமை மிக்கவர் **படிக்காசுப் புலவர்**. இங்ஙனம், இவர்களைப் போன்ற நிலையில், கோவை உலா அந் தாதி என்னும் செந்தமிழ்ப் பனுவல்களைச் சிறப்புறப் பாடுதலில் தேர்ச்சி மிக்கவர், ஒட்டக்கூத்தரே யாவர். இதனைப் பின் வரும் தனிப் பாடற் செய்யுள் கொண்டு இனிது தெளியலாம்.

வெண்பாவிற் புகழேந்தி; பரணிக்குஓர்
செயங்கொண்டான்; விருத்தம் என்னும்
ஒண்பாவிற்கு உயர்கம்பன்; கோவை உலா
அந்தாதிக்கு ஒட்டக் கூத்தன்;
கண்பாய கலம்பகத்திற்கு இரட்டையர்கள்;
வசைபாடக் காள மேகம்;
பண்பாகப் பகர்சந்தம் படிக்காசர்
அலால்ஒருவர் பாடொ ணாதே

—பலபட்டடைச் சொக்கநாதப் புலவர்.

## திருநெய்த்தானம்:

ஒட்டக் கூத்தரின் கவிதைச் சிறப்பினை யுணர்த்த ஒரே ஒரு பாடலை மட்டும் ஈண்டு எடுத்துக் காட்டுதல் சாலும். அது தனிப் பாடற்றிரட்டு என்னும் நூலில் வருவது. திருநெய்த்தானம் என்னும் தலத்திலுள்ள சிவபெருமானைப் பற்றியது. இவ்வுலக வாழ்வின் நிலையாமையினை எடுத்துக் கூறி இறைவழிபாட்டினை வலியுறுத்துவது.

"விக்கல் எடுத்து வலிமை தளர்ந்து, உயிர் உடலைக் கடந்து போய்விட்டால் உறவினர்கள் சுடுகாட்டிற் பிணத்தை நெருப்பிட்டுச் சுட்டுவிட்டு ஊர்க்குள்போய் விடுவர். இத்தகைய இயல்பையுடைய உடம்பில் ஆசை வைத்து, செல்வத்தைத் தேடி வீட்டிற் கொண்டுபோய் வைக்கின்ற மக்களே! தாம் அணிந்திருக்கும் அக்கு மாலை அசையவும், பூதகணங்கள் ஒருங்கு கூடிக் களிப்பினாற் கூத்தாடவும், தமது சடை முடியிற் சூழ்ந்துள்ள கங்கையாறு அலைதுளும்பவும், தம் திருக்கையில் ஏந்தி யிருக்கும் வெப்பமான நெருப்பு கொழுந்து விட்டு எரியவும், காதில் அணிந்திருக்கும் குண்டலங்கள் நெகிழ்ந்து அசையவும், சுடுகாட்டில் நடனம் செய்கின்ற, பெருமை பொருந்திய நெய்த்தானம் என்னும் தலத் தில் எழுந்தருளியுள்ள சிவபெருமானை வழிபட்டு, நிலைபேறான, வீட்டின்பத்தை எய்தி உய்வீர்களாக!" என்பது, பின்வரும் அப்பாடலின் பொருள்.

"விக்கா உக்கு ஆவித் தாவிப்போய்
விட்டால் நட்டார் சுட்டு ஊர்புக்கார்;
இக்காயத்து ஆசைப்பாடு உற்றே
இல்தேடிப்போய் வைப்பீர் நிற்பீர்!
அக்கு ஆடப் பேய் தொக்கு ஆடச் சூழ்
அப்பு ஆடத் தீவெப்பு ஆடப் பூண்
நெக்கு ஆட அக்கானத்து ஆடு அப்பேர்
நெய்த்தா னத்தானைச் சேவித்தே"

**மலரி வரும் கூத்தன் :**

ஒட்டக் கூத்தரின் கவிதைகள் ஓசை நயம் மிக்குச் செவிக்கு இனிமை செய்பவை; திருத்தமான கருத்தும், கலைநலச் செம்மையும் செறிந்தவை; கற்பவர்களின் உள்ளத்திற் கவினுறப் பதிந்து நிற்பவை; நினைத்தொறும் எல்லையில்லா இன்பம் விளைவிப்பவை. இவ்வாற்றாற் கூத்தருடைய வாக்கும், மாதர்தம் நோக்கும் (கண்களும்), தம்முள் ஒத்த இயல்புடையவை. மகளிரின் கண்களும் சென்று செவியளக்கும் தன்மையன; செந்நிறமுடையன; சிந்தையுள்ளே நின்றுஅளவில் இன்பம் நிறைப்பன. இப்பண்புகள், ஒட்டக் கூத்தரின் வாக்காகிய கவிதைகளிலும் இயைந்து காணப்படும், எனப் பின்வரும் தண்டியலங்காரச் செய்யுள் ஒன்று தகவுறச் சாற்றுகின்றது.

சென்று செவியளக்கும்
செம்மையவாய்ச் சிந்தையுள்ளே
நின்றளவில் இன்பம்
நிறைப்பவற்றுள்—ஒன்று
மலர் இவரும்
கூந்தலார் மாதர்நோக்கு,
ஒன்று மலரிவரும்
கூத்தன்தன் வாக்கு.

இச் செய்யுள், ஒட்டக்கூத்தர் தோன்றிய ஊர் மலரி என்று குறிப்பிடுவதுடன், அவ்வூரின் பெயரைச் சிலேடை நயம் அமைய, 'மலரி+வரும் கூத்தன்' எனவும், "மலர்+இவரும் கூந்தலார்' எனவும் வழங்கியுள்ள சதுரப்பாடு பெரிதும் மகிழத் தக்கது. 'மலரி' என்பது திருச்சிராப் பள்ளிக்கு அணித்தேயுள்ள திருவெறும்பியூர் என்னும் தலத்திற்குரிய பெயராதலைக் கல்வெட்டுக்கள் உணர்த்துகின்றன.

திருவெறும்பியூரிற் பிறந்த ஒட்டக் கூத்தர், சீர்காழி, திரிபுவனை முதலிய தலங்களிலும் சில சில காலம் வதிந்ததாகத் தெரிகின்றது. இந்நாளில் தஞ்சை மாவட்டத்தில் பூந்தோட்டம் இருப்புப் பாதை நிலையத்திற்கு அருகே அரசில் ஆற்றங்கரையில் உள்ள கூத்தநல்லூர் (கூத்தனூர்) என்பது, இவருக்கு மேற் குறித்த சோழ வேந்தர்கள் மூவருள், ஒருவரால், முற்றூட்டாக அளிக்கப் பெற்றது. தமது பிற்கால வாழ்க்கையின் பெரும் பகுதியை ஒட்டக்கூத்தர் இவ்வூரிலேயே கழித்தனராதல் வேண்டும். அங்கே இப்போதும் நல்ல நிலையில் உள்ள கலைமகளின் திருக்கோயில், இவர் அமைத்ததேயாகும்.

"ஆக்கம் பெருக்கும் மடந்தை வாழியே!
ஆற்றங் கரைச் சொற் கிழத்தி வாழியே!
கோக்கும் தமிழ்க்கொத் தனைத்தும் வாழியே
கூத்தன் கவிச்சக்ர வர்த்தி வாழியே"

எனவரும் தக்கயாகப் பரணிப் பாடலில், "ஆற்றங் கரைச் சொற்கிழத்தி" எனக் குறிக்கப்படுபவள், இன்றும் கூத்தனூர்க் கோயிலில் உள்ள கலைமகளே ஆவள் என்பது, இங்கு நாம் அறிந்து மகிழ்தற்கு உரியது. ஒட்டக்கூத்தரை நாம் நேரிற் கண்டு மகிழ இயலாவிட்டாலும், அவர் அமைத்தருளிய கோயிலையேனும் நாம் கண்டு மகிழலாம் அன்றோ!

**போலிக் கதைகள் :**

ஒட்டக் கூத்தரைப் பற்றிப் பொருந்தாத பல பொய்க் கதைகள் புனையப்பட்டு, அவர் தம் அரும்பெறற் புலமைக்கும், அளப்பரும் பெருமைக்கும் மாசுகள் கற்பிக்கின்றன. கம்பர் 'தியாகவிநோதன்' என்னும் சிறப்புப் பெயர் கொண்ட மூன்றும் குலோத்துங்கன் (கி. பி. 1178—1216) காலத்தவர். புகழேந்திப் புலவர் மாறவர்மன் குலசேகர பாண்டியன் (கி.பி. 1268—1286) காலத்தவர். கம்பரும், புகழேந்திப் புலவரும், ஒட்டக்கூத்தருக்குப் பின்னர்த் தோன்றி வாழ்ந்து வந்தவர்கள் என்பது, தக்க சான்றுகளின் வாயிலாகத் தெளியப் பட்டிருத்தலின், அவ்விருவரோடு தொடர்பு படுத்தி, ஒட்டக்கூத்தரை இழிவு படுத்தும் முறையிற் புனையப் பெற்றுள்ள போலிக் கதைகள், அறிஞர்களால் வெறுத்து ஒதுக்கப்பட்டதக்கனவேயாகும்.

ஒட்டக் கூத்தர் என்னும் புலவர் பெருந்தகை, விக்கிரம சோழன் - இரண்டாம் குலோத்துங்கன்-இரண்டாம் இராசராசன் என்னும் சோழப் பேரரசர்கள் மதித்து, வணங்கிப் போற்றத் தக்க நிலையில் விளங்கியவர். அரும்பாக்கிழான் மணவிற் கூத்தன் காலிங்கராயன், திருச் சிற்றம்பல

முடையான் பெருமாள்நம்பி, புதுவைக் காங்கேயன், திரிபுவனத்துச் சோமன் முதலிய பெருமக்கள், பலருடைய மதிப் புக்கும் போற்றுதலுக்கும் கூட உரியவ ராகத் திகழ்ந்திருந்தார். நெற்குன்றவாண முதலியார், நம்பிகாளியார் என்னும் புல வர்கள், இவர்பாற் பெருநட்புரிமை பூண்டி ருந்தனர். கலிங்கத்துப் பரணியைத் "தென்றமிழ்த் தெய்வப் பரணி" என்றும், "பாடற் பெரும்பரணி" என்றும்; அதனைப் பாடிய செயங்கொண்டார் என்னும் புல வரைத் "தேடற்கு அரும் கவி; கவிச் சக்ர வர்த்தி" என்றும் புகழ்ந்து பாடுகின்றார். இதனால், பிற புலவர்களையும், அவர்தம் நூல்களையும் புகழ்ந்து, பாராட்டும் பெருந் தகைமையுடையவர் ஒட்டக்கூத்தர் என் பது புலனாகின்றது. இத்தகைய உத்தம குணமுடைய ஒரு பெருஞ் சான்றோரை, இழிந்த பொறாமைக் குணமுடையவர் என்று, பொருத்தமற்ற போலிக் கதை களைப் புனைந்து இகழ்தல், கழுவாய் இல் லாப் பழியும் பாவமுமே பயப்பதாகும்.

**பண்பு நலங்கள் :**

தமிழில் உள்ள தண்டியலங்காரம் என் னும் இலக்கண நூலை இயற்றியவரும், தக்கயாகப் பரணிக்கு உரைவகுத்தவரும் ஆகிய இருவரும், இவர்தம் அரும்பெறல் மாணவர்களே யாவர். இவ்வாற்றால், மாணவர் பலரைப் பயிற்றிப் பேணிப் புரந் தருளிய மாட்சிமையும், இவர்க்கு உரித் தாதலை நாம் உன்னியுணர்ந்து மகிழலாம்.

விக்கிரம சோழன், இவருக்கு யானை கொடி காளம் முதலிய பரிசுகளை வழங் கிச் சிறப்பித்தபோது, இவர் பாடியருளிய பாடல்கள் இவர்தம் பணிவுடைமையாகிய குணத்தினை யுணர்த்துகின்றன.

"இடுக்கட் புண்படு
நிரப்புக் கொண்டுழன்று
இரக்கச் சென்றஇன்று
எனக்குச் சிங்களம்
திடுக்குற்று அஞ்சும்வெஞ்
சினத்துச் செம்பியன்
திருக்கைப் பங்கயம்
சிறக்கத் தந்தன;
படுக்கக் கம்பளம்;
பரக்கக் குங்குமம்;
பதிக்கக் கங்கணம்;
பரிக்கக் குஞ்சரம்;
கடுக்கக் குண்டலம்;
கலிக்கச் சங்கினம்;
கவிக்குப் பஞ்சரம்;
கவிக்கத் தொங்கலே."

"பத்துக்கொண் டனதிக்கும்
பதறிப் போய் முடியப்
பைம்பொற் றூர்கைசிந்தப்
பகிரண்டத் திடையே
மத்துக்கொண் டமுதத்தைக்
கடையாழித் திருமால்
வடிவாகிப் புவிகைக்கொண்
டருள்மான பரணா!
முத்துப்பந் தரில்நிற்கும்
குருளைக்கும், சினவேல்
முருகற்கும், பொதியக்கோ
முனிவற்கும், பதுமக்
கொத்தற்கும், சடிலக்கொந்
தளருக்கும், அல்லால்
கூழைத்தண் டமிழுக்கேன்
கொடியும் காளமுமே!"

இப் பாடல்களால், ஒட்டக் கூத்தரின் ஒப்புயர்வற்ற புலமையை வியந்து போற் றிப் பரிசளித்துச் சிறப்பித்த விக்கிரம சோழனின் வள்ளன்மையும், "இச் சிறப்பு கள் எல்லாம் திருஞான சம்பந்தர், முருகன், சிவபிரான் முதலியவர்கட்கேயன்றோ உரி யன! என்னுடைய கூழைத் தமிழுக்குக் கொடியும் காளமும் எற்றுக்கு?" என்று பணிவுடைமை தோன்றப் பாடிய ஒட்டக் கூத்தரின் பெருந்தகைமையும், புலனாதல் காணலாம்.

ஒட்டக்கூத்தர் கல்வி என்னும் பல்கடல் கடந்தவர்; புலவர்கள் பிறர் சிலர் போல, வறுமையில் மறுகி யுழன்றவர் அல்லர்; பேரரசரும் மதித்து வணங்கிப் போற்றத் தகுந்த நிலையிற் பிறங்கியவர்; செல்வ வளம் பெற்றுத் திகழ்ந்தவர்; மாணவர் பலரைப் பேணிப் புரந்தவர்; செய்ந்நன்றி மறவாத இயல்பினர்; சிவபிரான் திருவடி மறவாத சிந்தையும் சீலமும் உடையவர். தக்க

யாகப் பரணி, மூவருலா, ஈட்டியெழுபது, குலோத்துங்கன் பிள்ளைத் தமிழ், அரும்பைத் தொள்ளாயிரம், காங்கேயன் நாலாயிரக்கோவை என்னும் நூல்களை இயற்றியவர்.

## முடிவுரை :

இவர் இயற்றிய நூல்களுள் சமயத் துறையில் தக்கயாகப் பரணியும், வரலாற்றுத் துறையில் மூவருலாவும், சிறப்புடையனவாக அறிஞர்களாற் போற்றப் பெற்று விளங்கி வருகின்றன. தக்கயாகப் பரணியின்கண்,

''வருகதை தெய்வமகள்
என்மருமகள் வள்ளிவதுவை
மனமகிழ் பிள்ளைமுருகன்,
மதுரையில் வெல்லும் இனிய
தொருகதை சொல்லு;
தவள ஒளிவிரி செவ்விமுளரி
ஒளிதிகழ் அல்லிகமழும்
ஒருமனை வல்லி''

என அம்பிகை கலைமகளை நோக்கித் 'திருஞானசம்பந்தர் மதுரையிற் பெற்ற வரலாற்றைச் சொல்லுக' எனப் பணித்ததாகவும், அதற்கேற்பக் கலைமகள் அம்பிகைக்குத் திருஞானசம்பந்தர் நிகழ்த்திய அருட்செயல்களை விரித்துரைத்ததாகவும், ஒட்டக்கூத்தர் பாடியிருக்கும் திறம், அவர்க்குத் திருஞான சம்பந்தர் திறத்தும், அவர்தம் தேவாரப் பாடல்களிலும் இருந்த எல்லையற்ற ஈடுபாடும் பக்தியும் புலப்படுத்துகின்றது. திருஞானசம்பந்தரை இவர் முருகனின் அவதாரம் என்றே கருதிச் சிறப்பித்துப் போற்றியுள்ளார். இவர்தம் அளப்பரும் புலமையும், அருங்கவித் திறனும், அரசறிய வீற்றிருந்த வாழ்வும், சிவநெறிப் பற்றும், செந்தமிழ் ஆர்வமும், உலகியலுணர்வும் பிறவும், நம்மனோர் அனைவரும் நயந்து உணர்ந்து போற்றத் தகுவன ஆகும்.

—ஆசிரியர்.

''கல்விக்கு அரசு; கவிராச
சிங்கம்; கலைச்சலதி;
வெல்விக்கும் வேற்கைநற் சோழர்க்கு
உயிர்த்துணை; மெய்ம்மைநெறி
புல்விக்கும் சொற்போர்ப் புலி;
புலவர் ஏறு; பூங்கமலச்
செல்விக்குச் சேய்; ஒட்டக் கூத்தர்
சிறப்பெலாம் செப்பரிதே''

[காஞ்சிபுரம் கச்சபேசுவரர் கோயிலில் நிகழ்ந்த ஒட்டக் கூத்தர் விழாவில், சீலத்திரு ஞானப் பிரகாச தேசிக பரமா சாரிய சுவாமிகள் அவர்கள் தலைமையில், நிகழ்த்திய சொற்பொழிவினைத் தழுவியது. —ஆசிரியர்]

---

## கோயில் நிகழ்ச்சிகள்

| | | |
|---|---|---|
| திருச்சாய்க்காடு : | இயற்பகை நாயனார் திருவிழா | 24—12—68 முதல் 28—12—68 |
| இராமநாதபுரம் : | ஆதிசொக்கநாதப்பெருமாள் கோயிலில் திருப்புல்லாணித் தலவரலாறு வெளியீட்டு விழா | 30—12—68 |
| திருத்தணிகை : | சுப்பிரமணிய சுவாமி கோயிலில் திருப்புகழ் மணி மண்டபத்திறப்பு விழா, திருப்புகழ்த் திருப்படித் திருவிழா. | 31—12—68 |
| சுசீந்திரம் : | திருவாதிரைத் திருவிழா, தேவாரபாராயணம். | 1—1—69 |
| திருவான்மியூர் : | திருவாதிரைத் திருவிழா. | 2—3—69 |
| வழுவூர் : | யானை உரித்தபிரான் கோயில், திருவாதிரை விழா. | 2—1—69 |
| தருமபுரஆதீனம் : | ஸ்ரீஆனந்த பரவசர் குருபூசை விழா | 6—1—69 |
| இராமேசுவரம் : | தை அமாவாசைப் பெருவிழா. | 17—1—69 |

# அபிராமி அந்தாதி

(மூலமும் உரையும்)

சொல்லும் பொருளும் எனநட மாடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடி யே!நின் புதுமலர்த்தாள்
அல்லும் பகலும் தொழும்அவர்க் கேஅழி யாஅரசும்
செல்லும் தவநெறி யும்சிவ லோகமும் சித்திக்குமே.

(பொழிப்புரை) திருநடனம் புரிகின்ற துணைவர் ஆகிய சிவபெருமானுடன், சொல்லும் பொருளும் போலப் பிரிவற இயைந்து தழுவிநிற்கின்ற, இயற்கை நறு மணம் வீசும் பூங்கொடியைப் போன்ற, அபிராமியம்மையே! நின்னுடைய புதிய மலர் போன்ற திருவடிகளை இரவிலும் பகலிலும் மறவாமல், இடைவிடாது வழிபடுகின்ற வர்கட்கு மட்டுமே, அழிவு இல்லாத அரச இன்பமும், தடையின்றி நடைபெறும் தவ வொழுக்கமும், சிவலோகப் பேறும் எளிதிற் கைகூடும்.

(குறிப்புரை) அம்மையும் அப்பனும் - சத்தியும் சிவமும் - தம்முள் ஒருவரை ஒருவர் பிரிவின்றி விரவி நிற்பர் ஆதலின், அத்தகைய பிரிவற்ற பெருநிலைக்கு மிகப் பொருத்தமாகச் சொல்லையும் பொருளையும் உவமை கூறினர். சொல்வேறு, சொல் குறிக்கும் பொருள்வேறு, ஆயினும் 'சொல்வந்து எழலும் பொருள் தோன்றும்' தொடர்புரிமையால், அவை ஒன்றிஒன்று பிரிவிலாப் பெற்றியன. அதுபோலவே, சிவம்வேறு, சத்திவேறு ஆயினும், தாதான்மிய சம்பந்தத்தால் இரண்டும் பிரிவிலாப் பெற்றியிற் பிறங்குவன. ஆதலின் ''சொல்லும் பொருளும் எனப் புல்லும் பூங்கொடியே'' என்றார். அம்பிகையின் மெல்லியல்பைக் குறிக்கக் 'கொடி' என்றும், அழகை யுணர்த் தப் 'பூங்கொடி' என்றும், அருள் நலச் சிறப்பை விளக்கப் 'பரிமளப் பூங்கொடி' என்றும் விதந்து ஓதினர். அம்பிகையின் திருவடிகள் 'புதுமலர்த்தாள்' எனப் போற்றப் பெற் றன. இடையறவு இன்றி அயரா அன்பில் தியானித்துப் பணியும் அடியவர்களை 'அல் லும் பகலும் தொழுமவர்' எனக் குறிப்பிட்டார். நிலையற்ற அரச வாழ்விற் பிரிக்க 'அழியா அரசு' என்றார். இம்மையில் அழியா அரசும், மறுமையில் சிவலோகமும், இவை யிரண்டிற்கும் அடிப்படையான தவப்பயனும், எளிதாகவும் முழுதாகவும் கிடைக்கும் என்பார் 'சித்திக்கும்' என்றார். (28)

சித்தியும் சித்தி தரும்தெய்வ மாகித் திகழும்பரா
சத்தியும் சத்தி தழைக்கும் சிவமும் தவம்முயல்வார்
முத்தியும் முத்திக்கு வித்தும்வித் தாகி முளைத்தெழுந்த
புத்தியும் புத்தியின் உள்ளே புரக்கும் புரத்தையன்றே.

(பொழிப்புரை) அணிமா முதலிய எட்டுவகைப் பேறுகளும், அந்தப் பேறுகளைத் தருகின்ற தெய்வம் ஆகி விளங்குகின்ற பராசக்தியும், அப்பராசக்தி வெளிப்பட்டுத் தழைப்பதற்கு இடம் ஆகிய பரசிவமும், அப் பரசிவத்தை நோக்கிச் சரியை கிரியை

யோகம் முதலிய தவங்களை முயன்று செய்பவர்கள் அடைகின்ற வீடுபேறும், அவ் வீடுபேற்றுக்குரிய திருவருள் ஆகிய விதையினின்று கிளர்ந்து வளர்ந்த சிவஞானமும், ஆகிய அனைத்துமாக விளங்குபவள், உயிர்களின் அறிவினுக்குள்ளே கலந்து நின்று பாதுகாத்தருளும் திரிபுர சுந்தரி ஆகிய அபிராமியம்மையே ஆவள்.

(குறிப்புரை) சித்திகள் எட்டு என்பது 'அட்டமா சித்தி அணைதரு காளத்தி' எனவரும் தேவாரப் பாடலால் உணரப்பெறும். அவைகள் முறையே அணிமா மகிமா கரிமா இலகிமா பிராத்தி பிராகாமியம் ஈசத்துவம் வசித்துவம் என்பனவாகும். உயிர் தொறும் அணுவிற்கு அணுவாய் நுணுகி உறைதல் அணிமா. எல்லாப் பொருள்களின் உள்ளும் புறம்பும் நிறைந்து நிற்றல் மகிமா. மலைபோன்ற பெருவடிவம் பெற்றிருப் பினும் அணுவைப் போன்று சுமையின்றி இலகுவாக இருத்தல் இலகிமா. பரமாணு வடிவமாக நுணுகியிருப்பினும் மலை போன்று கனமாக இருத்தல் கரிமா. தான் நினைத்த எல்லா இடங்களுக்கும் நினைத்த அளவிலேயே சென்றடையும் திறம் பெறுதல் பிராத்தி. தான் விரும்பும் இன்பங்களை யெல்லாம் இருந்த இடத்தில் வருவித்து நுகர்தல் பிராகாமியம். தேவரும் பிறர் எவரும் பணிந்து ஏவல்கேட்ப இறைவனைப் போல முத்தொழிலும் செய்ய வல்லவனாதல் ஈசத்துவம். தேவர் முனிவர் அசுரர் மனிதர் பறவைகள் விலங்குகள் முதலிய உயிர்களையெல்லாம் தன் வயமாக்கிக் கொண்டு இயக்கும்திறம் உடையவனாதல் வசித்துவம். அம்பிகை நாம் எய்தும் எல்லா நலங்களுக் கும் காரணமாதலை வியந்து புகழ்ந்தபடி. 'புரத்தை' என்பது புரம் என்னும் சொல் லடியாகப் பிறந்த பெண்பாற் பெயர். ஐகாரம் முன்னிலை ஒருமை விகுதி. 'புரத்தி' எனினும் ஆம். மூவுலகங்களுக்கும் தலைவியாகிய திரிபுரசுந்தரி என்பது கருத்து. (29)

அன்றே தடுத்தென்னை ஆண்டுகொண்டாய்; கொண்டது அல்லவென்கை
நன்றே உனக்கினி? நான்என் செயினும், நடுக்கடலுள்
சென்றே விழினும், கரையேற் றுகைநின் திருவுளமே;
ஒன்றே! பலவுரு வே! அரு வே!என் உமையவளே.

(பொழிப்புரை) ஒப்பற்ற பொருளாக விளங்குபவளே! பல திருவுருவங்களைக் கொண்டவளே! உருவம் கடந்த அருவநிலையில் திகழ்பவளே! எனக்குத் தாயாக உள்ள உமாதேவியே! மிகப் பழங்காலத்திலேயே என்னை நீ பிற புன்னெறிகளிற் செல்லாமல் விலக்கி ஆளாகக் கொண்டு விட்டாய்; அங்ஙனம் நீ என்னை ஆளாகக் கொண்டருளியதனை, இப்பொழுது இல்லை என்று சொல்லுதல், உன் பெருந்தகை மைக்கு அழகாகுமா? நான் என்ன குற்றம் செய்தாலும், நான் கடலின் நடுவிடத் திற்குப் போய் விழுந்தாலும்கூட, என்னைக் கரையேறச் செய்து காப்பாற்றுதல் நின் னுடைய திருவுள்ளத்தின் பொறுப்பேயாகும்.

(குறிப்புரை) ஆண்டுகொண்டதனாலும், ஆளப் பெற்றதனாலும், அம்பிகைக்கும் தமக்கும் இடையேயுள்ள உரிமைத் தொடர்புகளை வலியுறுத்த "அன்றே தடுத்து என்னை ஆண்டு கொண்டாய்" என்றார். தாம் விரும்பி முயலாதிருக்கவும், அம்பிகை தானே வலிந்து வந்து ஆட்கொண்ட திறத்தினை வலியுறுத்த 'யான் ஆட்கொளப் பெற்றேன்' என்னாமல், 'என்னை ஆண்டு கொண்டாய்' என்றார். வலிந்து ஆண்டு கொண்ட அருளின் மாட்சிமை 'தடுத்து' என்றதனாற் புலனாகின்றது. அன்றே - மிகப் பழங்காலத்திலேயே; நெஞ்சறி சுட்டு எனினுமாம். அம்பிகையால் ஆட்கொள்ளப் பெற்ற வழியும், ஒரோவழி வாதனாமலம் வந்து தாக்குதலின், "கொண்டது அல்ல என்கை நன்றே உனக்கு" என நைந்துருகி நயந்து வினவினார். கடல் என்றது பிறவியையும், கரை என்றது வீடுபேற்றையும் குறித்து நின்றன. ஆண்டுகொண்ட

அருட்டிறத்தினல், தாம் எத்தகைய குற்றங்கள் செய்யினும், தம்மைக் காத்தருளும் பொறுப்பும் கடமையும் அம்பிகைக்கே யுரியன என்பார் "நான் என்செயினும், நடுக் கடலுள் சென்றே விழினும், கரை ஏற்றுகை நின் திருவுளமே" என்று வலியுறுத்தினர். "அன்றே என்றன் ஆவியும் உடலும் உடைமை எல்லாமும் கொண்டிலையோ ! இன்று ஓர் இடையூறு எனக்கு உண்டோ !" எனவரும் திருவாசகம் இங்குச் சிந்திக்கத் தக்கது. (30)

உமையும் உமையொரு பாகனும் ஏக வுருவில்வந்திங்
கெமையும் தமக்கன்பு செய்யவைத் தார்; இனி எண்ணுதற்குச்
சமையங் களுமில்லை ஈன்றெடுப் பாள்ஒரு தாயுமில்லை;
அமையும் அமையுறு தோளியர் மேல்வைத்த ஆசையுமே.

(பொழிப்புரை) உமாதேவியும், உமாதேவியை இடப்பக்கம் ஆகிய ஒரு பக்கத்திலேயுடைய சிவபெருமானும், அம்மையப்பர் (அர்த்த நாரீசுவரர்) என்னும் ஒரு திருவுருவங்கொண்டு எழுந்தருளிவந்து, இவ்வுலகத்தில் ஒரு தகுதியும் இல்லாத என் போன்ருரையும், தம் இடத்தில் அன்பு செய்யும்படி மேலான நிலையில் இருத்தினர். ஆதலின் இனிமேல் யான் ஆராய்வதற்குரிய சமயங்களும் இல்லை. என்னைப் பெற்று வளர்ப்பவள் ஆகிய தாயும் இல்லை. மூங்கிலைப் போன்ற தோள்களையுடைய பெண்கள்மீது யான் கொண்டிருந்த ஆவலும் இனி எனக்கு வேண்டுவதில்லை.

(குறிப்புரை) அடியார்கட்கு அருட்பேறு நிகழும்போது சத்தியும் சிவமும், அம்மையும் அப்பனும், 'மாதியலும் பாதியர்' என்றபடி வருவர் என்பது 'தோடுடைய செவியன்' 'தோலும் துகிலும் குழையும் சுருள்தோடும்' முதலிய அருள்மொழிகளால் உணரப்பெறும். ஆதலின் 'உமையும் உமை ஒருபாகமும் ஏக உருவில் வந்து' என்ருர். "இரும்புதரும் மனத்தேனை ஈர்த்து ஈர்த்து என் என்பு உருக்கிக் கரும்புதரு சுவை எனக்குக் காட்டினை" என மணிவாசகர் அருளிச் செய்தவாறு போல, அவ்வன்பு இன்னதென்றறியாத தம் திறத்தும், இறைவனும் இறைவியும் இன்னருள் புரிந்தனர் என்பார் "எமையும் தமக்கு அன்பு செய்ய வைத்தார்" என்ருர். தமது இயல்பான இழிதகவு பற்றி உம்மையும், அன்புசெய்ய வைக்கப் பெற்ற பெருமிதம் குறித்துப் பன்மையும் அமைய 'எமை+உம்' என்று சுட்டிக்கொண்டார். 'செய்யா கூறிக் கிளத்தல் எய்யாதாகின்று எம் சிறு செந்நாவே" என்பதன் உரைநுட்பம் இங்கு உணர்ந்து மகிழத்தக்கது. இறையருட்பேறு வாய்க்கப்பெற்ற தாம், சமய நூல் ஆராய்ச்சித் துறைகளிற் புகுந்து உண்மைகாணும் முயற்சியில் இனி ஈடுபட்டு வருந்த வேண்டுவதில்லை எனவும், இனிமேல் தமக்குப் பிறப்பு எதுவும் வினைவழி நேர்தற்குக் காரணம் இல்லை எனவும், துணிந்து தெளிந்து கூறுவார், "இனி எண்ணுதற்குச் சமயங்களும் இல்லை; ஈன்றெடுப்பாள் ஒரு தாயும் இல்லை" என்ருர். இறைவனைப் பெண்பயில் உருவமொடு நினைந்து தொழுவார்க்குப் பெண்மயல் அகன்ருெழியும் ஆதலின், "அமையுறு தோளியர்மேல் வைத்த ஆசையும் அமையும்" என்ருர். அமைதல் - வேண்டாது ஒழிதல்; "கற்பனவும் இனி அமையும்" என்புழிப்போல. (31)

ஆசைக் கடலில் அகப்பட்டு அருளற்ற அந்தகன்கைப்
பாசத்தில் அல்லற் படஇருந் தேனை,நின் பாதமென்னும்
வாசக் கமலம் தலைமேல் வலியவைத் தாண்டுகொண்ட
நேசத்தை என்சொல்லுவேன்? ஈசர் பாகத்து நேரிழையே!

(பொழிப்புரை) இறைவனின் இடப் பக்கத்தில் வீற்றிருக்கின்ற, நுண்ணிய வேலைப்பாடுடைய அணிகலன்களைத் தரித்த அபிராமியம்மையே! பலதிற ஆசைகள்

ஆகிய எல்லையற்ற பெருங்கடலில் விழுந்து அகப்பட்டுக் கொண்டு, இரக்கம் சிறிதும் இல்லாத கூற்றுவனின் கையில் உள்ள பாசக் கயிற்றினற் கட்டுண்டு, பெரிதும் துன்பப்பட இருந்த என்னை, நீ நின்னுடைய திருவடி என்கின்ற மணம் பொருந்திய தாமரைமலரை, என்னுடைய தலையின்மீது வலிந்துவந்து சூட்டி, ஆளாகக் கொண்டு விட்ட அருளின் பெருக்கை, என்னென்று சொல்லிப் புகழ்வேன் ?

(குறிப்புரை) 'ஆசைக்கோர் அளவில்லை' ஆதலின் 'ஆசைக்கடல்' எனப்பட்டது. பொருள்களை நுகருந்தோறும், விறகில் இட்ட தழல்போல் முறுகுவது அல்லது, ஆசை தணியாமையின் 'அகப்பட்ட' என்றார். இளையர் முதியர் செல்வர் வறியர் உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்றெல்லாம் கருதிச் சிறிதெனினும் இரக்கம் காட்டாத கொடியவன் ஆகலின் 'அருள்அற்ற அந்தகன்' என்றார். அந்தகன் - அந்தத்தைச் செய்பவன்; விதிவழி நடாத்துதலால் கண்ணோட்டம் புரியாத குருடன் எனினுமாம். அம்பிகை ஆண்டு கொள்ளாமற் போயிருந்தால் தாம் கூற்றுவனின் கையிற்பட்டுத் துன்புற நேர்ந்திருக்கும். ஆதலின் 'அந்தகன் கைப்பாசத்தில் அல்லற்பட இருந்தேன்' என்றார். திருவடியின் சிறப்பைப் 'பாதம் எனும் வாசக்கமலம்' எனப் புகழ்ந்தார். அம்பிகை ஆண்டு கொண்ட அருளின் சிறப்பைக் கூறுவார், "பாதம் தலைமேல் வலிய வைத்து ஆண்டுகொண்ட நேசம்' என்றார். நேசம் - தலையளி; சிறந்த பேரருட்டிறன். அதனை அளந்தறிந்து புகழ்ந்துரைக்கச் சிறிதும் இயலாமைபற்றி 'என் சொல்லுவேன்' எனக் குறிப்பிட்டார். (32)

—ஆசிரியர்.

## செய்திச் சுருக்கம்

**மயூரவாகன சேவன விழா :** அருட்டிரு பாம்பன் குமரகுருதாச அடிகளார் நிறுவிய மகாதேசோ மண்டலத்தின் சார்பில், அடிகளார் நடாத்தி வந்த மயூரவாகன சேவன விழா (45-ஆம்ஆண்டு), 20, 21—12—68தேதிவெள்ளிசனிக்கிழமைகளில் சென்னைத்திருவான்மியூரில்சுவாமிகளின் திருக்கோயிலில் மிகவும் சிறப்புற நடைபெற்றது. வித்வான் பி. மா. சோமசுந்தர முதலியார், திருப்புகழ்ச் சதுரர் சே. த. இராமலிங்கம் பிள்ளை, B.A.,L.T., திருமுருக கிருபானந்தவாரியார், சைவப் பெரியார் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை, 'திருக்கோயில்' ஆசிரியர் திரு. ந. ரா. முருகவேள் M.A., M.O.L., பேராசிரியர் திரு. பாலூர் கண்ணப்ப முதலியார், M.A., B.O.L., மகாவித்வான் பண்டித திரு. வி. நடேசனார், B.A.,J.P., வித்வான் அம்பை இரா. சங்கரனார், வரகூர் திரு. முத்துக்குமார சுவாமி, திரு. பிடில். எம். சண்முக சுந்தரம் முதலிய பெருமக்கள் பலர் கலந்துகொண்டனர். கந்த கோட்டம் அருணகிரிநாதர் சபையார், திருப்புகழ் திருமுறைகள் முதலியன பாராயணம் செய்தனர். சிறப்பு வழிபாடுகளும் அடியார்க்கு அமுதளிப்பும் பிறவும் நன்கினிது நடைபெற்றன. மகாதேசோ மண்டலத்தின் செயலாளர் திரு. தி. தி. குப்புசாமிச் செட்டியார் அவர்களும், திரு. கிருட்டினசாமி முதலியார், திரு. ந. செயராமன் முதலிய பெரியோர்களும், விழா நலமுற நிகழ்தற்குப் பெருந்தொண்டுகள் புரிந்தனர். பெருந்திரளாக முருகன் அடியார்கள் பலர் குடும்பத்துடன் வந்திருந்து வழிபட்டு மகிழ்ந்தனர்.

— ஆசிரியர்.

PUBLIC LIBRARY
12 JUL 1973
MADRAS



அபிராமி அம்மை,

திருக்கடவூர்.

# திருமெழுக்குப் புறம்

(திரு. மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள், சென்னை)

திருக்கோயில்களில் நாள்தோறும் திருமெழுக்கிட்டுக் கோமயம் கோசலம் தெளித்துத் தூய்மைப்படுத்துவது வழக்கம். இதற்குத் திருமெழுக்குஇடுதல் (மெழுகுதல்) என்று பெயர். திருமெழுக்குத் தொண்டினைச் சிலர் பக்தியின் பொருட்டு இலவசமாகச் செய்வர். இந்தத் தொண்டு நடைபெறுவதன் பொருட்டுச் செல்வந்தர் சிலர் நிலம் அல்லது பொருள் தானம் செய்வதும் உண்டு. இவ்விதத் தானத்துக்குத் திருமெழுக்குப்புறம் என்பது பெயர்.

திருநாவுக்கரசு சுவாமிகளின் திருத்தமக்கையாரான திலகவதியார், திருவதிகை வீரட்டானக் கோவிலில் திருமெழுக்குத் திருத்தொண்டினைச் செய்துவந்தார். அவர் பக்திகாரணமாக ஊதியத்தை விரும்பாமல், தாமாகவே இத்திருத்தொண்டினை நாள்தோறும் செய்துவந்தார்.

"புலர்வதன்முன் திருவலகு
பணிமாறிப் புனிறகன்ற
நலமலி ஆன் சாணத்தால்
நன்குதிரு மெழுக்கிட்டு
மலர்கொய்து கொடுவந்து
மாலைகளும் தொடுத்தமைத்துப்
பலர்புகழும் பண்பினால்
திருப்பணிகள் பலசெய்தார்."

என்றும்,

"சீரடியார் திருவலகும் திருமெழுக்கும்
தோண்டியும் கொண்டு
ஆறணிந்தார் கோயிலினுள்
அடைந்தவரைக் கொடுபுக்கார்"

என்றும், பெரியபுராணம் இச்செய்தியைக் கூறுகிறது.

திலகவதியாரைப் போல எல்லோரும் இந்தத் திருத்தொண்டினை இலவசமாகச் செய்வார்கள் என்று எதிர்பார்க்கமுடியாது. திருமெழுக்கிடும் திருத்தொண்டினைச் செய்வதற்கென்று கோவில்களில் நிபந்தங்கள் செய்யப்பட்டிருந்தன. அதற்குத் திருமெழுக்குப்புறம் என்பது பெயர். திருமெழுக்குத் தொண்டினைச் செய்கிறவர்களுக்குக் காசுகொடுக்காமல் அதற்குப் பதிலாக நெல் கொடுப்பது அக்காலத்து வழக்கம். அதன்பொருட்டு நிலங்கள் தானம் செய்யப்பட்டிருந்தன. அந்த நிலங்களில் விளையும் நெல்லைத் திருமெழுக்கிடுவோருக்குக் கொடுப்பது வழக்கம். இந்தச் செய்தியைச் சாசனங்களிலிருந்து அறிகிறோம். அந்தச் சாசனங்கள் சிலவற்றைக் காட்டுவோம்.

தஞ்சாவூர் மாவட்டம், மாயூரம் தாலூகா, குற்றாலம் என்னும் ஊரில் உள்ள சிவன் கோவில் சாசனம். இந்தக் கோயிலுக்குச் சொன்னவாறறிவார் கோயில் என்பது பழைய பெயர். இப்போது, உக்தவேதீஸ்வரர் கோவில் என்று பெயர் கூறப்படுகிறது. உத்தம சோழனின் தாயாரான செம்பியன்மாதேவியார் என்னும் அரசியார் இந்தக் கோவிலுக்குப் பலகட்டளைகளை அமைத்திருக்கிறார். அக்கட்டளைகளில் ஒன்று திருமெழுக்குப்புறம். "திருமுற்றம் திருவலகிட்டுத் திருமெழுக்கிடுவார் மூவர்க்கு நிசதம் நெல்லுக் குறுணி நானாழியாக ஓராட்டைக்கு நெல்லு நாற்பத்தைங் கலத்துக்கு நிலன் காலே அரைமா அரைக்காணி" (1) என்று இந்தச் சாசனப்பகுதி கூறுகிறது.

தஞ்சை மாவட்டம் மாயூரம் தாலூகா திருமணஞ்சேரிகோயில். இதற்குப் பழைய

பெயர் திருக்கற்றளி மகாதேவர் கோயில் என்பது. இப்போதைய பெயர் உத்வாக நாத சுவாமி கோயில் என்பது. இந்தக் கோயிலுக்கும் செம்பியன் மாதேவியார் நிபந்தங்களைச் செய்திருக்கிறார் என்பதை இங்குள்ள சாசனம் கூறுகிறது. இங்குக் கோயிலில் திருமெழுக்கிடுவார் இருவர் நிய மிக்கப்பட்டிருந்தனர். (2)

தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் தாலுகா திருக்கோடிகா. இவ்வூர் இப்போது திருக்கோடிகாவல் என்று கூறப்படுகிறது. திருக்கோடிகாவுக்குக் கண்ண மங்கலம் என்னும் பெயரும் இருந்தது என்று சாசனத்திலிருந்து தெரிகிறது. இவ்வூரிலுள்ள திருக்கோடிகா ஈசுவரர் கோயில் சாசனம், திருமெழுக்குப்புறமாக நிலம் தானம் செய்யப்பட்டிருந்ததைக் கூறுகிறது. இந்த நிலத்தின் எல்லையை இந்தச் சாசனம் இவ்வாறு கூறுகிறது.

''ஆத்திரையன் கிழவன் மெழுக்குப் புறமாக வைத்த நிலத்துக்குக் கீழ்பாற் கெல்லை உட்சிறு வாய்க்காலுக்கு மேற்கு, தென்பாற் கெல்லை புதுவாய்க்காலுக்கு வடக்கு, மேற்பாற் கெல்லை மெழுக்குப் புறத்துக்குக் கிழக்கு, வடபாற் கெல்லை மெழுக்குப்புறத்துக்கு வடவெல்லைக் கொத்தத்துக்குத் தெற்கு நிலம் காணி அரைக் காணிச் செய்.'' (3)

இவ்வாறு திருமெழுக்குக்கென்று நிலங்கள் தானம் செய்யப்பட்டிருந்தன. திருக்கோயில்களில் திருவலகு இட்டுச் சாண நீர் தெளித்து மெழுகுவது மரபு. பசுவின் சாணத்தினால் மெழுகுவது தொன்று தொட்டுள்ள வழக்கம். கற்றரையல்லாத மண்தரைகளுக்குச் சாணநீர் மெழுகுவது மரபு. பசுவின் சாணத்தில் மெழுகினால் பூச்சிகள் சேரா. மேலும் சிவபெருமானுக்கும் திருமாலுக்கும் முற்காலத்தில் பஞ்சகவ்வியம் (ஆனைந்து) அபிஷேகம் செய்யப்பட்டது என்பதைச் சாசனங்களும் தெரிவிக்கின்றன. பஞ்சகவ்வியம் என்னும் ஆன் ஐந்து என்பது, பால் தயிர் நெய் கோமயம் (சாணம்), கோமூத்திரம் என்பன.

திருக்கோயில்கள் மெழுகுவதற்குரிய சாணம் கன்று ஈன்று புனிறு நீங்கிய பசுவின் சாணமாக இருத்தல் வேண்டும் என்று கூறப்படுகிறது. ''புனிறு அகன்ற நலமலி ஆன் சாணத்தினால்'' திலகவதியார் திருமெழுக்குத் தொண்டு செய்தார் என்று பெரியபுராணங் கூறுவது காண்க.

அந்தக் காலத்துக் கோயில்களுக்கும், இந்தக் காலத்துக் கோயில்களுக்கும் வேறுபாடுகள் உண்டு. அக்காலத்தில் கோயில் தரை பெரும்பாலும் மண்தரையாக அல்லது செங்கல் தரையாக இருந்தது. அப்போது சாணத்தினால் மெழுகவேண்டியிருந்தது. இககாலத்தில் கோயில் தரைகள் பெரும்பாலும் கருங்கல் தரையாக இருப்பதனால் சாணத்தினால் மெழுகவேண்டிய அவசியம் இல்லை. திருவலகிட்டு நீரினால் சுத்தம் செய்தால் மட்டும் போதும். இக்காலத்துக் கோயில்களில் நிகழ்கிற நடைமுறையை அறியேன்.

கோயில்களையும் சுற்றுப்புறங்களையும், தூய்மையாகவும் அழகாகவும் வைத்திருக்க வேண்டுவது மிகமிக அவசியமாகும். கோயிலைக் கண்காணிப்போரும் கோயிலுக்குச் சென்று வழிபடுவோரும் இதில் கண்ணுங் கருத்துமாக இருக்கவேண்டும். காகிதம், தேங்காய் நார், வாழைப்பழத்தோல், பூக்கள் முதலிய பொருள்களைக் கோயில் தரைகளில் சிதறுவது கூடாது. இந்தச் செய்தியில் கோவிலுக்குச்சென்று வழிபடுவோர் கருத்தாக இருக்கவேண்டும். கோயிலுக்குச் சென்று வழிபடுவது எவ்வளவு புண்ணியச் செயலென்று கருதுகிறோமோ, அவ்வளவு புண்ணியமானது கோவிலில் குப்பைபோடாதிருப்பதும் என்பதை ஒவ்வொருவரும் கருத்தில் வைக்கவேண்டும். இறைவன் எவ்வளவு புனிதமானவனோ அவ்வளவு புனிதமானது இறைவனின் கோயில் என்பதை ஒவ்வொருவரும் அறிய வேண்டும்.

(1) எண் 170, தென்னிந்தியக் கல்வெட்டுக்கள், தொகுதி. 13
(2) எண் 14, ,, ,, ,,
(3) எண் 175, ,, ,, ,,

# சடங்குகளும் அவற்றின் இலட்சியமும்

மகாவித்வான் திரு. ச. தண்டபாணி தேசிகர்

"கிரியை என மருவும் யாவையும் ஞானங் கிடைத்தற்கு வாயில்" என்பது சிவஞானசித்தியார். சடங்கு, வினை, தொழில், கன்மம், செயல் என்பன ஒரே பொருளை யுணர்த்துவன- ஆயினும், ஒரு பயனை இலட்சியமாக வைத்துத் தொடங்கப் பெற்ற வினைகள் சமுதாயத்தில் வேரூன்றி, இன்றியமையாத் தன்மையை எய்திய போது சடங்காகின்றன. சடங்கில் தெய்வத்தன்மை கலந்து விடுகிறது. உலகப் போக்கில் செய்யப்படும் தொழில் அல்லது வினையில் தெய்வக் கலப்பு இல்லையாகிறது. உடம்பை வளர்க்கும்,உண்ணல் உறங்கல் முதலியனவும், அவற்றிற்கு அடியான உழைப்புகளும் செயலெனப்படுகின்றன. இத்தகைய செயல்களை யாரும் சடங்கு அல்லது கிரியை என மரியாதைப் பெயரையிட்டு அழைப்பதில்லை.

உயிரினிடமாக உண்மையுணர்வை வளர்க்கும் செயல்களே, உயிரை என்றும் மாறா இன்பநிலையில் இலங்கச் செய்யும் செயல்களே, கிரியைகள். அவைகளே மேலானவை. மரபு வழிப் பெயராற் சொன்னால் பதிகன்மங்களையே கிரியை எனலாம்.

பதிகன்மங்களிற் சில மன ஒருமைப் பாட்டிற்கு வழியாக, உடலுழைப்பாக மட்டும் அமைவன; அவை ஆலயப்பணி பல புரிதல், அரன்பணிபல புரிதல், அடியார் தொண்டுபுரிதல் முதலாயின. சில கன்மங்கள், உடல் உழைப்பும் — உள்ளப் பழக்கமாகிற பாவனை தியானம் முதலியனவும் கலந்தவை. அவை சிவபூசை செய்தல் முதலியன.

சில கன்மங்கள் உள்ளப்பழக்கமேயாகி உயிரில் உணர்வு ஊறச் செய்வன· இவை யனைத்துமே படிமுறையால் சடங்காகின்றன. ஒன்றோடொன்று தொடர்புடையனவாக விளங்குகின்றன. இவ்வண்ணம் உயர்ந்த இலட்சியத்தைக் கருதி உண்டான சடங்குகள், காலம் போகப் போகக் குறிக்கோளில்லாத — பொருளற்ற மூடப்பழக்கம் எனப் பிறர் பழிதூற்றும் நிலைக்கு வந்துவிட்டன.

வீடுகளில் அழகுக்காகவும் — எறும்பு முதலிய சிற்றுயிர்களின் தீனிக்காகவும்,பசு புண்ணியத்திற்காகவும் இடப்படுகின்ற கோலங்கள், அரிசி மாவால் ஆன காலம் பறந்து கல்லுமாக் கோலங்களாகி விட்டனவே. அது போலவே சமயச் சடங்குகளும் பன்னூறுயிரம் ஆண்டு வளர்ந்து பரந்து முதிர்ந்து விட்டமையின், தம் லட்சியத்தை விட்டு விலகிச் சம்பிரதாயமான சடங்குகள் ஆனதில் வியப்பென்ன? நம்முடைய பண்டிகைகளும், திருநாள் பெருநாள்களும் அப்படித்தான். நம்முடைய சமய அனுட்டானங்களும் ஆலயச் சடங்குகளும் அப்படித்தான்.

நாம் செய்யும் சடங்குகளின் தத்துவத்தை, நாமும் அறியாமல் மறந்து விட்டோம். நம்முடைய சந்ததிகட்கும் சொல்லிவைக்க முடியாமல் இருக்கிறோம். நம்மைக் கேட்கின்ற பிறசமயத்தினர்க்கும் விளங்கச் சொல்லமுடியாமையால் —நாம் உண்மை உணர்ந்து கொண்டவர்களைப் போலவும், சீர்திருத்த மனப்போக்கைக் கொண்டவர்களைப் போலவும், 'ஆம் ஆம் எல்லாம்

மூடப்பழக்கங்களே ' என்று அவர்களோடு ஒத்துப்பாடி விடுகிறோம்.

பல நூற்றாண்டுகளாகச் சமுதாயத்தில் ஒரு பழக்கம் அழியாமல் நிலைத்திருக்கு மானால், அப்பழக்கம் அறியாமையை அடிப்படையாகக் கொண்டு வளர்ந்திருக்க முடியாது. ஆகவே சடங்குகள் அல்லது கிரியைகள் நல்ல இலட்சியத்தோடு அமைந்தன வாதல் வேண்டும். அதனை இருக்கிற நூல்களையும், மரபு வழிவரும் செய்திகளையும், வரலாறுகளையும் துணைக் கொண்டு உற்று நோக்குவோம் ஆனால், உண்மை விளங்காமற் போகாது. ஆத லால் நம் சமயச் சடங்குகளை ஆராய்வோம்

சைவ சமயத்திற் பிறந்த நமக்கு ஓரளவு எழுதப்படிக்கத் தெரிந்து கொண்ட உட னேயே, சமய தீக்கை என்ற சடங்கு நிகழ்த்தப் பெறுகிறது. தூலபஞ்சாக்கர மாகிய பருப் பொருள் ஐந்தெழுத்தும் உப தேசிக்கப் படுகின்றது. பெற்றோர்கள் அவ்வெழுத்துக்களைக் காலையிலும் மாலை யிலும் எண்ணச் சொல்கிறார்கள். அந்தப் பருவத்திலே நம் மனமோ விளையாட்டிலே அலைந்து திரிந்து கொண்டிருக்கிறது. பர பரக்கின்றது. ஒன்றிலும் ஊன்றி நில்லாது அலைபாய்கிறது. அந்நிலையை மாற்ற எண்ணுகிறார்கள். மக்களுடைய மனதைச் சிறிது நேரமாவது ஒன்றையே பற்றி நிற்கப் பழக்க வேண்டும், என்று முனை கிறார்கள். அலையாத மனந்தானே அமை தியுள்ள மனம். அமைதியுள்ள இடத்தில் தானே ஆழ்ந்த சிந்தனையும் அனுபவமும் படிப்பும் இருக்க முடியும். அதனால் பெற் றோர் ஆணையின் வண்ணம் இள உள்ளம் அவர்கள் கற்றுக் கொடுத்த சடங்குகளைச் செய்து மந்திர எழுத்துக்களை எண்ணு கின்றது. அந்த எழுத்தின் பொருளாக அவர்கள் காட்டிக் கொடுத்த கடவுள் உரு வங்களை எண்ணுகின்றது. படிப்பில் உயரு கின்றது. உறுதிகாற்பங்கும், உபதேசம் காற்பங்கும், நம்பிக்கை அரைப்பங்கும் ஆகி இளைய உள்ளங்களை ஈடேற்று கின்றன. இவ்வண்ணம் சடங்கில் ஒன்று பட்ட மனம் படிப்பிலும் ஒன்றுபடுகிறது. இவ்வனுபவத்தைப் பற்றித் திருவள்ளுவப் பெருந்தகையார்,

" எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணி யார்
திண்ணியராகப் பெறின் "

எனக் கூறுவதையும் சிந்தியுங்கள். இதன் கருத்து என்ன? ஒரு காரியத்தை நினை; நன்றாக நினை ; நினைத்ததை நினைத்தபடி நிறைவேற்றிக் கொள்ளலாம் என்பது தானே!

இந்த அனுபவ அடிப்படையிலே முதலா வதாக நம் சமயச் சடங்காகிய அனுட்டா னத்தைப் பார்ப்போம். அனுட்டானம் என் பதற்கு இடையீடுபடாது இயற்றவேண்டிய சடங்கு என்பது தான் பொருள். இது பூமி சுத்தி முதலாக அகமருடணம் ஈறுகப் பதி னொரு சடங்குகளைக் கொண்டது. அவற்றை முடிந்தவரை காண்போம்.

**நிலத்தூய்மை** அல்லது பூமிசுத்தி:— நாம் வாழ்கின்ற வீடு உள்ளும் புறமும் சூழலும் தூய்மையாக இருந்தால் தானே, நாமும் களிப்புடனும் சுகாதாரத்துடனும் வாழஇயலும். வாழ்வும் இனிக்கும்: அது போல நாம் சடங்கு செய்யும் இடமும் எத் தனைத் தூய்மையுடையதாதல் வேண்டும். அதற்காக இடத்தைத் தூய்மை செய்ய அத்திராய நம: என்ற மந்திரம் சொல்லித் தண்ணீரைத் தெளிக்க வேண்டுமாம். நீரும் நெருப்பும் பொருள்களையும் இடத் தையும் தூய்மைப்படுத்துவன. நிலத்தைத் தூய்மை செய்ய நீரே ஏற்றது. அத்திரம் மந்திரம் — ஆயுதம். ஆயுதம் பகையைப் போக்கவும், கெட்ட காற்று கெட்ட பூச்சி களை ஒழிக்கவும் பயன்படுவன. அதைச் சொல்லி நீர் தெளித்து அவை ஒழிந்தன வாக எண்ண, அவ்வெண்ணமே சுத்த மான சூழலை அமைக்கிறது. தூய்மை யான சூழலே தொழுகைக்கு ஏற்ற இடம்.

**கணபதி வணக்கம்:** கணபதி யார்? சிவகணங்களுக்குத் தலைவர். சிவகணங் கள் பூதங்கள் முதல் நந்தி பிருங்கி வரை யுள்ள அனைவரும் ஆவர். அவர்கட்குத் தலைவராய், அன்பர்கள் செய்யும் தொழி லில் ஏற்படும் இடையூறுகளை விலக்கி, அவ் வத் தொழிலில் அவரவர்களைச் சேர்ப்பவர் கணபதி. இப்போது தொடங்கும் அனுட்

டானச் சடங்கிற்கும் இடையூறுண்டாகாமல் பாதுகாக்க என வேண்டிக் கொள்வதே கணபதி வணக்கம்.

அனுட்டானம் ஞானவாயிலான போகத்திற்கு முதற்படி. அதில் ஆருதாரங்களின் முதல் நிலையாகிய மூலாதாரத்திற்கு அதிதெய்வமான கணபதியை முதலில் வணங்குதலே ஏற்புடையது. ஆதலால் முதற்கண் கணபதி வணக்கச் சடங்கு நடத்தப் பெறுகிறது. இச்சடங்கிலோ ஓம் கம் கணபதியே நம : என்ற மந்திரம் நினைக்கப் படுகிறது. ‘கம்’ என்றவுடன் மூச்சுக்காற்றில் அழுத்தம் உண்டாகி அது மூலம் வரை சென்று தாக்கி அங்கேயுள்ள குண்டலி வடிவமான யானைமுகக்கடவுளை எழுப்பி மேலோங்கி வரச் செய்கிறது. இதுவே குண்டலினி வடிவ கணபதி தியானம் என யோகதத்துவம் கூறும்.

இச் சடங்கைச் செய்யும்போது கைகளை முட்டியாகப் பிடித்து நெற்றியில் இரு பொட்டுக்களிலும் குட்டிக் கொள்கிறோம். இரு பொட்டுக்களிலும் அசுத்த ரத்த நாளங்கள் சேர்ந்து ஓட்டமற்று நின்று நினைவாற்றலைக் குறைக்கக் கூடும். செய்யப் போகும் செயலைச் சிந்தனையோடு செய்தல் இன்றியமையாதது. ஆய்ந்தோய்ந்து நடக்கும் களைத்த காளைக்குக் குத்தூசி போடுதல் போலப் பொட்டுக்களில் குட்டிக் கொள்ள, அக்குட்டுக்கள் குருதித்தாரையைத் தூண்டி விடுகின்றன. அவை இயங்கத் தொடங்கியவுடன் நடுநாடியும் இயங்குகிறது. மூலத்திலுள்ள கணபதி குண்டலினி மேலே சுவா திட்டானம் முதலிய நிலைகளை முறையே பொருந்துகிறது. ஆகவே செய்யப் போகும் சிவ மந்திர ரூபமான சிவத்தியானத்திற்குக் கணபதி வணக்கம் குண்டலியை மேலெழும்பச் செய்கின்ற வகையில் மிகப் பயன்படுகிறது.

**அடுத்தது சிவ குரு வணக்கம்:-** குருவே சிவன். சிவனே குரு. குரு யார்? காட்டுபவன். எவற்றைக் காட்டியவன்? செய்முறைகளையும் திருமந்திரத்தையும் அதன் பொருளையும் அநுபவத்தையும் காட்டியவன். அவன் தானே இறைவன்; எழுத்தறிவித்தவன் இறைவனல்லவா! எழுத்து அ, ஆ, இ, ஈ க்களா ? இல்லை. ஐந்தெழுத்தும் ஆறெழுத்தும் பிஞ்செழுத்தும் பெருவெழுத்தும் அல்லவா ? அவற்றைக் கண்டு காட்டியவன் இறைவன் தானே. அவனை வணங்குதல் செய்நன்றியறிதலும் ஆமே! ஆதலால் சுட்டிச் சொல்லிய தாய் தந்தையரைக் காட்டிலும் தொட்டுக் காட்டிய குருவை வழிபடுதலால் மந்திரப் பேறு விளைகிறது.

இம்முறையில் முன்னர்த் தூய இடத்திருந்து கணபதியை வணங்கிக் குருவைச் சிவமாக வணங்கும் ஞானம் முறையே விளைவதைப் பார்க்கிறோம்.

**நீரின் தூய்மை அல்லது ஜலசுத்தி:**

அனுட்டானத்திற்குப் பயன்படுத்தும் நீர் எல்லாவகையாலும் தூயதாகவே இருந்தாலும், அதனை மேலும் தூய்மைப் படுத்த வேண்டுமா? எனலாம். ஆம்; தன்பார்வையாலும், தெளித்தல், சொடுக்குதல், சுற்றுதல், தட்டுதல், திசைகளை விரல்களாற் சுற்றுதல், மூடுதல், பசுமுலை போன்ற முத்திரைக் கையைக் காட்டுதல் ஆகிய சடங்குகளை, அவ்வவற்றிற்கு உரிய மந்திரங்களைச் சொல்லித் தூய்மைப் படுத்தல் வேண்டும்.

குடிப்பதற்காகத் தண்ணீரைக் குவளையில் வாங்குகிறோம். அப்படியே குடித்து விடுகிறோமா ? பார்த்துத்தானே குடிக்கிறோம். அதைப்போல நீரில் சிவத்தன்மை பரவி நிற்கப் பார்த்தல் வேண்டும். இச்சடங்கே நிரீட்சணம் எனப்படும். பார்க்கும் போது கண்ணால் நேரே பார்க்காமல் வலதுகையின் சுட்டு விரலையும் பாம்பு விரலையும் நேரே நீட்டிப் பெருவிரலை அணிவிரலோடு சேர்த்தி அவற்றின் இடையிலே நீரைச் சிவ கருணை என்ற சிந்தனையோடு பார்த்தலாம். அப்படிப் பார்க்கும் போது தூய்மையுறுத்துவதான அஸ்திராய நம: என்னும் ஆயுத மந்திரத்தை எண்ண வேண்டும். இங்ஙனம் சொல்லும் நினைப்பும் செயலும் ஒத்தபாவனை உண்டாகும் போது நீர் தூய்தாகிறது.

(2) நீர் தெளித்தல்: மந்திரத்தாலும் பாவனையாலும் தூய்மையான நீரைத் தொட்டு அந்நீர் மேலேயே 'சிவாயநம' என்று சொல்லித் தெளித்தலாம். இது புரோட்சணம் எனப்படும். இதனுல் மேலும் அந்நீர் சிவமயமானதாகக் கருதப்படுகிறது.

(3) தட்டுதல் அல்லது தாடனம்: அங்ஙனம் சிவமயமான நீரின் மேல் வலதுகைச் சுட்டு விரலையும் பாம்புவிரலையும் சேர்த்துத் தட்டுதலாம். இதற்குரிய சிந்தனை 'அஸ்திராய உம்பட்' என்பது. உம்பட் என்பது அதட்டொலிபோல,உள்ளது போகாமலும் புதிதாக ஒன்றும் வந்து புகுதாமலும் காக்கப்பயன்படும் மந்திர இறுதி. அஸ்திரம் முன் கூறியது போல ஆயுதம். இம் மந்திரத்தின் செறிந்த பொருள், நீரின் தூய்மை அகத்திலும் புறத்திலும் கெடாதிருக்கப் பாதுகாத்தலாம்.

(4) சுட்டு விரலாற் சுட்டுதல் அல்லது அப்யுட்சணம்:- நீர்க்கலசத்தைச் சுற்றிக் கோட்டை கட்டுவதாகப் பாவித்துச் சுட்டு விரலாற் சுற்றுதலாம். இது புறப்பாது காப்புச் சடங்காகும். இதற்குரிய மந்திர சிந்தனை 'கவசாய வௌஷட்' என்பது. கவசம் என்பது பாதுகாப்பளிக்கும் இருப்புச் சட்டை போல்வது. வௌஷட் என்பது பாது காக்க என்னும் பொருள் தரும் மந்திரம். ஆகவே கவசம் எமக்கும் பாது காவலாகுக என்ற பாவனையோடு செய்யுஞ் சடங்கு இது.

(5) மும்முறை தட்டுதலாகிய தாளத்திரயம்: உறங்கிக் கிடக்கின்ற ஒன்றைத் தட்டி எழுப்புதல் போல நீருள் அமிழ்ந்து கிடக்கும் தூய்மையற்ற தன்மையை அத்திரமந்திரம் சொல்லித் தட்டி எழுப்பி அகலச் செய்தலாம்.

(6) திசையைக் கட்டுதல் ஆகிய திக்குப் பந்தனம்: இருந்த குற்றத்தை நீக்கிய பிறகு இனிவரும் குற்றங்களைப் போக்க அதே அஸ்திர மந்திரத்தைச் சொல்லி வலக்கையால் நொடித்துக் கொண்டே நீர்க் கலசத்தைச் சுற்றுதலாம்.

(7) மூடுதலாகிய அவகுண்டனம்:பதப் படுத்தப்பெற்ற உணவை மூடிவைப்பது போலத் தூய்மைப் படுத்திய நீரைக் கவச மந்திரத்தைச் சொல்லிக் கையால் மூடித் தியானித்து மூடப் பட்டதாக எண்ணு தலாம்.

(8) பசுமுலைக்காம்பு போன்ற முத்திரை தேனுமுத்திரை: தூய்மையான நீரில் அமுதம் கலந்ததாகப் பாவித்தல். இது பசுவின் முலைக்காம்புகள் போல இரண்டு கைகளையும் இணைத்து விரல்களை மாறிச் சேர்த்துச் 'சிவாய வௌஷட்' என்ற மந்தி ரத்தியானத்துடன் நீருக்கு மேல் காட்டிக் காம்பின் வழியாகப் பால் பெருகிக் கலந்த தாகப் பாவித்தல்.

இவ்வண்ணம் எட்டுச் சடங்குகளாலும் நீரைத்தூய்மை செய்து அமுதமாய்ச் சிவ கருணை தேங்கியதாகப் பாவித்தலே நீரைத் தூய்மை செய்தலாகிய ஜல சுத்தியாம்.

ஆசமனம்: ஆகிய நீருறிஞ்சுதல்: என்பது, ஆன்மாக்களின் மலகன்மங்களைப் போக்க இறைவனுல் உதவப்பட்டவை மாயையின் காரியங்க ளான ஆன்மதத்துவம் இருபத்து நான்கும், வித்தியாதத்துவம் ஏழும், சிவதத்துவம் ஐந்துமாகிய, மூன்று பகுதியான முப்பத்தாறு தத்துவங்களுமாம். இவை இவை உயிர்களின் அறிவு விளக்கத்திற்குத் துணையாயும், மயக்கம் செய்வனவாயும் உள்ளவை. ஆதலால்அவற்றின் மயக்குந்தன்மையைக் கெடுத்து, முழுதும் உபகாரப் படச் செய்தல் வேண்டும். நாம் உண்ணும் உணவு நெல்லரிசிச் சோறு. அதில் மறைக்கும் உமியும்,தவிடும் ஒட்டியுள்ளன. அதனை அப்படியே யுண்ணல் இயலாது. உமியை நீக்கித் தவிடு சிறிது குறைத்து அரிசியைப்பதமாக்கி யுண்ணல் வேண்டும். அதுபோல மாயா காரியங்களான தத்துவங்களின் மயக்கும் தன்மையைக் கெடுத்து முதல்வனை அறிந்தனுபவிக்கத் துணையாகும் படிப் பதப்படுத்த வேண்டும். அதற்குரிய முதற் சடங்கே ஆசமனம்.

கலசத்திலுள்ள நீரை வலது உள்ளங் கையில் உழுந்து அமிழக்கூடிய அளவாக எடுத்து 'ஆன்ம தத்துவாய சுவதா' 'வித்யாதத்துவாய சுவதா' 'சிவதத்துவாய சுவதா' என மூன்று முறை உறிஞ்சுக என்பது சடங்கின் விதி.

சுவதா என்பது தன்னை வளர்விப்பது, விளக்குவிப்பது என்னும் பொருளது. ஆகவே மூவகையான தத்துவங்களையும் உட்கொண்டு கழுவிப் போக்கித் தத்துவ சுத்தி பெற்றுச் சிவமாம் தன்மை எய்தி விளக்கமுறுவேன் என்னுங் குறிப்போடு இயற்றப் பெறும் சடங்கு ஆசமனம்.

உருக்கொள்ளச் செய்தலாகிய சகளீ கரணம்:- இது கைகளில் சிவத்தன்மையை எய்துவித்தலும் (கரநியாசமும்), உறுப்புக்களில் சிவத்தன்மையை எய்து வித்தலும் (அங்கநியாசமும்), என இரு வகைப்படும். ஆகவே இருவகையாலும் அனுட்டானம் பண்ணுகின்ற மனிதன் தன் உறுப்புக்களைச் சிவ அங்கமாகப் பாவிக்கச் செய்வது சகளீகரணம்.

இவற்றின் முறைகளும், எண்ணும் மந்திரங்களும் அகோர சிவபத்ததி, சிவாக்கிர பத்ததி முதலான நூல்களின் வேறு பாட்டால் பலவாயிருத்தலின், அவை ஈண்டு எழுதப் பெறவில்லை.

திருநீற்றினைத் தூய்மை செய்தல் அல்லது விபூதி சுத்தி:

தூய்மை தருவது நீறு. தூய்மை அனைத்திற்கும் தூய்மையானது நீறு. ஆயினும் அதனையும் மந்திரங்களாலும் மனபாவனைகளாலும் தூய்மையுறுத்துதல் இன்றியமையாதது. ஆதலின் திருநீற்றை எடுத்து இடது உள்ளங்கையில் வைத்து, வலக்கை மோதிர விரலால் தொட்டுச் சிறிது அரக்கர்கட்கு ஆகுக என நிருதி திக்கில் அத்திர மந்திரத்தால் தெறித்துவிட்டு, பார்த்தல், நீர்தெளித்தல், தட்டுதல், சுற்றுதல் முதலிய சடங்குகளை இயற்றி வலக்கையால் மூடி நிவிருத்தி முதலிய கலை மந்திரங்களாலும், ஈசானம் முதலிய ஐந்து பிரமமந்திரங்களாலும், இதயம் முதலிய ஆறு மந்திரங்களாலும் மந்திரித்து, அத்திர மந்திரத்தால், நீர் விட்டுக் குழையாமற் பொடியாகப் பூசிக் கொண்டு பின் நீர்விட்டுக் குழைத்துப் பன்னிரண்டு அல்லது பதினாறு உறுப்புக் களில் மூன்று கோடாக அளவின்படி இடுக என்பது விதி.

இச் சடங்கிலும் திருநீறு இடப்பெறும் இடங்களில் சொல்லப்பெறும் மந்திரங் கட்குரிய தெய்வத்தை எழுந்தருளச் செய்து எல்லாமாகச் சிவபாவனை வரச் செய்தலாகிய ஞான பாவனையே விளங் குதல் காண்க.

பாவத்தைக் கழுவுதல் அல்லது அக மருடணம்:

வலக்கையில் சிறிது நீரை எடுத்து இடக் கையில் விட்டுப் பிரம மந்திரங்களையும் அங்க மந்திரங்களையும் சொல்லிக் கைகளை முட்டியாகப் பிடித்துக் கீழே ஒழுகும் நீரை முற்கூறிய மந்திரங்களின் இறுதியில் வௌஷட் என்பதைச் சேர்த்துச் சொல்லிச் சிரத்தில் தெளித்துக் கொண்டு,மீதமுள்ள நீரை வலக்கையில் வாங்கி மூக்கின் அருகிற் கொண்டு சென்று, வலது மூக்கைப் பெருவிரலால் அழுத்திக் கொண்டு இடது மூக்கு வழியாகத் தூய் மையான நீர் உள்ளே சென்று பாவங் களைக் கழுவிக் கொண்டு இடது மூக்கு வழியாக மைக்குழம்பு போல வந்ததாகப் பாவித்து அந் நீரை வலது கால் கட்டை விரலிலேனும், பூமியிலேனும் விடுக என்பது.


இச் சடங்கிலும் பாவனை அடிப்படையில் பாவங்கள் கழுவப் பெறுதலும், பின்

செய்யப்படும் தருப்பணம் முதலான சடங்குகளால் கடவுளரையும், தமது மூதாதையர் முதலியோரையும் மகிழ் வித்தலும், நிகழ்த்தப் பெறுதல் காணலாம்.

இடைக்கிடையே ஆன்ம சத்தியைத் தூய்மையுறுத்தும் மூச்சடக்கும் பிராணு யாமம் நிகழ்த்தப் பெறும். இதுபோல் நூல் முறைப்படி ஆயுளை வளர்க்கும் சடங் காகும். ஞானநூல் முறைப்படி மன ஒருமைப் பாட்டையும் நினைவாற்றலையும் வளர்ப்பதாகும். சித்தவைத்திய முறைப் படி கண்ணொளியையும் வளர்ப்பதாகும்.

இவ்வண்ணம் சடங்குகள் அனைத்தும் உடல் வளர்ச்சிக்காகவும் உணர்வுப் பெருக்கத்திற் காகவும் தொடங்கப் பெற்றன, என்பதை உணரும்போது பயன் தெரிந்து பழக வேண்டும் என்ற அவாவும், அதிற் பற்றும் விளையும். அதனுல் சமயமும் வாழும். அங்ஙனமின்றிக் 'குறிக் கோளிலாது கெட்டேன்' என்று அப்பர் சுவாமிகள் அறிவித்தது போல ஆகிவிடக் கூடாதே.

இங்ஙனமே திருக்கோயில்களைப் பற்றிய "கர்ஷணம் முதல் பிரதிட்டை வரை, பிர திட்டை முதல் உற்சவம் வரை, உற்சவ முதல் பிராயச்சித்தம் வரையுள்ள சிறப்பு விழாக்களையும் பூசைகளையும்" நன்கு ஆராயின் அவற்றின் இன்றியாமை விளங்கும்.





திருவரங்கத்தில் 'அரங்கர் கலைக்கூடம்' திறப்பு விழா நிகழ்ச்சியில், நமது அறநிலைய அமைச்சர் மாண்புமிகு நாவலர் திரு. இரா. நெடுஞ்செழியன், M.A. அவர்கள் கலந்து கொள்ளுதல். (30—11—68)

# உயிரிலக்கணம்

(திரு. கொ. நீ. சிங்காரவேலு எம்.ஏ.,)

முன்னுரை :

சைவ சித்தாந்த சாத்திரத்திற்குப் பல தனிச் சிறப்புகள் உண்டு. அவைகளிற் சில பின்வருமாறு: முதலில் அது விஞ்ஞானத்திற்கும், மனோதத்துவ சாத்திரத்திற்கும் ஒத்து இருக்கின்றது. இரண்டாவது, அது சாதாரண உலக அனுபவத்திற்கு முரண்படாது இருக்கின்றது. மூன்றுவது அது பொது அறிவுக்கும் பொருத்தமாக இருக்கின்றது.

உதாரணமாக, ஏகான்மவாதம், "பரமான்மா ஒன்றே உள்ளது. உலகத்துப் பொருள்களெல்லாம் மித்தை; உடம்பு தோறும் காணப்படும் சீவான்மாக்கள், பரமான்மாவின் சாயையாகிய தோற்றமேயன்றி உண்மையல்ல' என்று கூறுகின்றது. இக்கொள்கையைச் சங்கரர் எவ்வளவுதான் தர்க்க ரீதியாக மெய்ப்பிக்க முயன்றுலும், இது நம் உலக அனுபவத்திற்கும் பொது அறிவுக்கும் அவ்வளவு பொருத்தமாகத் தோன்றவில்லை. சங்கரர் அவர்களே சிறந்த பக்திப் பாடல்களைப் பாடி, கொள்கையளவில் அவர் ஏகான்மவாதியாயிருந்தாலும், செயல்முறையில் சித்தாந்தியாகத்தான் இருக்க முடிந்தது என்பதை மெய்ப்பித்தார்.* சங்கரர் ஒரு தத்துவஞானியாக மாத்திரம் அல்லாமல், ஒப்பற்ற சிறந்த பரமபக்தராகவும் விளங்கினர் என்பதை, அனைவரும் அறிவர்.

(1) மேல்நாட்டுத் தத்துவ அறிஞர்களில் பார்க்லி (Berkeley) என்பவர், அகநிலைக் கருத்துக் கொள்கை (Subjective idealism) என்ற ஒரு கொள்கையைத் தோற்றுவித்தார். அக்கொள்கையின்படி நாம் அறிவதெல்லாம் புலனுணர்ச்சிகள் தாம்; நம் உள்ளத்திற்குப் புறத்தே பொருள்கள் உள்ளன என்பதை நாம் அறிவதற்கு வழியில்லை. எடுத்துக்காட்டாக ஒரு ஆப்பிள் பழத்தின் தோற்றத்தை ஆராய்வோம். அது நிறம், சுவை, நாற்றம், உருவம் முதலிய பண்புகளால் ஆக்கப்பெற்றது. ஆகையால் அது உள்ளத்தால் அறியப்படும பல பண்பிகளின் தொகுப்பேயாகும்; அப்பண்புகளுக்கு அடிநிலையான ஒரு பொருளைப்பற்றி நாம் அறியவில்லை. ஆகையால் அது உண்டு என்பது பொரு

---

'What is most curious is that a philosopher such as Sankara the most decided monist, and the upholder of Brahmam, as a neuter, as the cause of all things, is reported to have been a worshipper of idols and to have seen in them, despite all their hideousness, symbols of the Deity, useful as he thougt, for the ignorant, even though they have no eyes as yet to see what is hidden behind the idols, and what was the true meaning of them.'

—Maxmuller.

ளற்றது. உள்ளது என்பது நுகரப்படுவது எனவே, உள்ளம் இல்லையேல் பொருள்கள் உள்ளனவாகக் கூறமுடியாது. உள்ளம் இன்றிச் சடப்பொருள்கள் இல்லை. இதுதான் பார்க்லியின் முடிவு. இக்கொள்கையைத் தர்க்க ரீதியாக மறுப்பது சிறிது கடினம்தான். ஆனால் அக்காலத்தில் வாழ்ந்த சிறந்த எழுத்தாளரான டாக்டர் சாமுவேல் ஜான்சன் என்பவர், தம் நண்பர் ஒருவரிடம் இக்கருத்தைப்பற்றிப் பேசிக் கொண்டிருக்கையில் கோபங்கொண்டு, தன் தலையை ஒரு கம்பத்தில் மோதிக் கொண்டு, இக்கம்பம் எனக்குப் புறத்தே இல்லை என்று, நான் எப்படி நம்புவது என்று கூறினாராம். இவ்வாறு தர்க்க ரீதியாகக் கூறப்படும் ஒருசில கொள்கைகள், பொது அறிவிற்குப் பொருத்தம் இல்லாமலும் இருக்கின்றது.

**(2) முப்பொருள் :** இவ்வுலகத்தில் நாம் இருக்கின்றோம்; உலகம் இருக்கிறது. இது கண்கூடாகப் பார்ப்பது; அனுபவத்தில் அறிவது. சைவசித்தாந்தம் இவ்விரண்டு பொருள்களும் முக்காலத்தும் உண்மை என்பதை ஒத்துக்கொள்கிறது. மேலும் சிந்தனையாலும், பக்குவப்பட்ட உயிர்களின் அனுபவத்தாலும், உயிர்க்கு உயிரான இறைவன் ஒருவன் உளன் என்பதையும் அறிந்து கொள்கிறோம். இம் முப்பொருள்களும் உள்பொருள்கள் என்பது சைவசித்தாந்தத்தின் அடிப்படைக் கொள்கை.

**(3) உயிர் உண்மை :** உயிர் உண்டு என்பதை மெய்கண்டார் உணர்த்தும் முறையும், மேல் நாட்டுத் தத்துவ அறிஞர் ஒருவர் கூறும் முறையும், ஒத்திருப்பது நாம் அறிந்து மகிழ்தற்குரியது.

டேக்கார்ட் என்ற தத்துவ அறிஞர் கி. பி. 1596 முதல் 1659 வரை வாழ்ந்தார். இவர் இக்காலத்து ஐரோப்பியத் தத்துவ சாத்திரத்தின் தந்தையெனக் கருதப்படுபவர். கணித முறையினால் தத்துவ சாத்திரத்தை ஆராய்வது பயனுள்ளதாக இருக்கும் என்பதும், அதற்கு அதனைத் தானாகவே விளங்கும் (Self-evident) ஓர் அடிப்படை உண்மையிலிருந்து தொடங்க வேண்டும், என்பதும் அவர் கருத்து. அவ்வடிப்படை (1) ஐயுற முடியாத உண்மையாகவும், (2) உள்ளுணர்வினால் அறியப்படுவதாகவும், (2) நடைமுறையில் இருக்கின்ற ஒன்றைக் குறிப்பதாகவும் இருத்தல் வேண்டும் என்று அவர் கருதுகிறார். ஆகவே டேக்கார்ட் மேற்கூறிய இலக்கணங்கள் பொருந்திய, ஐயத்திற்கு இடமில்லாத உண்மையைக் கண்டு பிடிக்க முயன்றார். ஒவ்வொரு நம்பிக்கையையும் எண்ணிப்பார்த்து, ஐயுற இயலாதது ஒன்றுமில்லை என்று அறிகிறார். முடிவில் ஐயுறுகின்ற நான் ஒருவன் இருந்துதான் ஆகவேண்டும், அதுதான் ஐயத்திற்கு இடமில்லாத உண்மை. அதைத்தான் 'ஆன்மா' என்கின்றோம், என்ற முடிவுக்கு வருகிறார். 'உள்ளுகிறேன் ஆகையால் உள்ளேன்' (Cogito ergo sum) என்பது அவருடைய புகழ்பெற்ற கூற்று.

மெய்கண்டார் காலம் 13ஆம் நூற்றாண்டின் முற்பகுதி என்பர். சிவஞானபோதத்தின் மூன்றாம் சூத்திரத்தில், அவர் கூறும் முதற் காரணம் 'இலது என்றலின் உளது' என்பது. அதாவது ஆன்மா இல்லை என்று சொல்லத் துணியும் அறிவு ஒன்று உண்டு அல்லவா? அதுவே ஆன்மா. இக்கூற்றும், 'உள்ளுகிறேன் ஆகையால் உள்ளேன்' என்று பின்னர்த் தோன்றிய டேக்கார்ட் கூறியிருப்பதும் ஒத்திருப்பது வியத்தற்குரியது.

**(4) உயிரின் இடைப்பட்ட நிலை :** உயிர் உயிரின் நிலை ஒரு தனிப்பட்ட நிலை. இறைவன் முற்றறிவுடையவன்; தானே எல்லாவற்றையும் இடையறாது அறிந்தும், அறிவித்தும் இருப்பவன். உயிர் அறிவித்தால் அறியக்கூடியது; அறியுமிடத்தும் ஒவ்வொன்றாக அறியக்கூடியது: பாசம், சடப்பொருள்; அறிவித்தாலும் அறிய மாட்டாதது. அறிவே வடிவாகிய பதிப்பொருள் 'சித்து' என்றும் அறிவேஇல்லாத சடப் பொருளாகிய பாசம் 'அசித்து' என்றும் வழங்கப்படுவதால், அவ்விரண்டுக்கும் இடைப்பட்ட உயிர் 'சிதசித்து' என்று சொல்லப்படும்.

இறைவன் என்றும் ஒரு பெற்றியனுய் இருத்தலின் 'சத்து' எனப்படுவன். பாசங் கள் நிலை மாற்றத்தை அடைதல் பற்றி 'அசத்து; எனப்படும். ஆகையால் இரண் டிற்கும் இடைப்பட்ட பொருளாகிய உயிர் அல்லது பசு 'சதசத்து' எனப்படும்.

இவ்விடைப்பட்ட நிலையை மெய்கண் டார் 'சார்மாயை நீயல்லே; தற்பரமும் அல்லே; தனி' என்று அழகுறக் கூறுகிருர்.

(5) **உயிரின் மூன்று நிலைகள்:** இவ் வுலகில் உயிர் உடம்போடு கூடியிருக்கின் றது. அது வினையின் விளைவாக இறந்தும் பிறந்தும் பல உடம்புகளை மேற்கொள் கின்றது. இந்நிலையைச் சகல நிலை என்பர். இதற்கு முன்னும் உயிருள்ள ஒரு நிலை உண்டு. அந்நிலையில் அது உடல், பொறி, கரணம் ஒன்றும் இன்றி அறியாமையாகிய பேரிருளிற் செயலற்றுக் கிடக்கும். இது ஆணவமலத்தில் அழுந்தி நிற்கும் நிலை. அந் நிலையைக் கேவல நிலை என்பர். சகல நிலைக்குப் பின்னரும் ஒரு நிலை உண்டு. அது முத்தி நிலை. இந்த நிலையில் உயிர் பாசத்தை விட்டுப் பரத்தை அனுபவிக்கும். ஆகையால் உயிரின் யாத்திரையைப் பின்வருமாறு கூறலாம்.

ஒரு காலத்தில் ஆன்மா ஆணவ மல மாகிய அறியாமையில் அழுந்திக் கிடந் தது. அப்போது அதற்கு அறிவு, இச்சை, செயல் ஒன்றுங் கிடையாது. இந்நிலை யைத் தாயுமான அடிகள்,

"காராரும் ஆணவக் கருவறையில் அறிவற்ற
கண்ணிலாக் குழவியைபபோல் கட்டுண்
டிருந்த எமை"

என்று உருவக முறையில் அழகுபடக் கூறுகின்ருர்.

பின்னர் ஆன்மா உய்யும் பொருட்டு, இறைவன் அதற்கு உடம்பையும், உடம் பைச் செலுத்த அதனுள் கரணங்களையும், உலகத்தையும், உலகத்தை அனுபவிக்கப் போகங்களையும் கூட்டுவிக்கின்ருன். இவை களை முறையே தனு, கரண, புவன, போகம் என்பர். உடம்பு இருவகைப்படும். அவை தூல உடம்பு, சூக்கும உடம்பு எனப்படும். உயிர் தூல உடம்பில் இருந் தாலும், சூக்கும உடம்பு அதை விட்டுப் பிரிவதில்லை. உடம்பு கூடின உடனே உயிருக்கு அறிவு, இச்சை, செயல் ஆகியவை தொழிற்பட ஆரம்பிக்கின்றன. அதனுல் வினையும் துவங்குகின்றது. வினை அல்லது கன்மம் என்பது ஒரு விதி அல் லது சட்டம். உடம்பு உயிரோடு கூடின உடனே இச்சட்டம் செயலுக்கு வந்து விட்டது என்று சொல்லலாம். பின்னர் உயிர் வினையின் விளைவாகப் பல பிறவி களை எடுத்து அனுபவம் பெற்றுப் பக்குவம் அடைந்து உயிருக்கு உயிராய் உள்ள இறைவன் ஒருவன் உளன் என்பதை அனுபவ பூர்வமாக உணர்ந்து மலமாயை தன்னெடு வல்வினை நீங்கி விடுபேறு அடைகின்றது.

'புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறபபும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்.
—திருவாசகம்.

(6) **உயிரின் வியாபகம்,** உயிரின் விரிவளவு எத்துணையது என்ற கேள்விக் குப் பலர் பலவிதமாகப் பதில் இறுக்கின் றனர். சைவ சித்தாந்தத்தின்படி உயிர் எல்லையற்ற வியாபகப் பொருள். ஆனல் அது இறைவனது வியாபகத்தில் அடங்கி நிற்பது. அது பாசத்தை நோக்க வியாபக மாகவும், இறைவனை நோக்க வியாப்பிய மாகவும் நிற்கின்றது. மேலும், 'ஆணவம்' என்ற சொல்லுக்கே அணுத்தன்மையைத் தருவது என்பது பொருள். 'ஆன்மா' என்ற சொல்லுக்கு வியாபகம் என்பது பொருள். எந்த அளவில் ஆணவத்தின் ஆற்றல் குறைகிறதோ, அந்த அளவில் உயிரின் வியாபகம் தோன்றும்.

இந்த உண்மையை உலக அனுபவத் திலும் உணரலாம். தன் முனைப்பு அதி கரித்துக் கோபதாபங்களுக்கு ஆளாகும் போது நாம் முன்பின் பார்க்காமல், பழைய உறவு நட்புரிமைகளையும், மேல் விளைவு களையும் மறந்து செயல்படுகிறோம். அப்

போது இறந்த காலத்தையும் எதிர்காலத்தையும் மறந்து நிகழ்காலத்தில் வாழ்கிறோம். அப்போது உயிர் சுருங்கி நிற்கின்றது. அன்பும் அருளும் நம் மனத்தில் மீதூர 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற பரந்த மனநிலை ஏற்படும்போது, நம் உயிர் வியாபக நிலை அடைவது போன்ற உணர்ச்சி ஏற்படுகின்றது. சிலர் சில வேளைகளில் கனவுநிலையில் வேறு இடங்களில் நிகழ்வதை அறிகிறார்கள். ஞானிகள் யோக நிலையில் எங்கும் எக்காலத்தும் நடப்பதை அறியக் கூடியவர்களாக இருக்கின்றார்கள். இந்நிகழ்ச்சிகள் உயிரின் வியாபாகத்தை ஒருவாறு உணர்த்துகிறது என்று சொல்லலாம்.

**(7) உயிரின் ஐந்து நிலைகள் :** உயிர் உடம்போடு கூடியிருக்கும் நிலையில், அது எப்போதும் ஒரு தன்மைத்தாகஇருப்பதில்லை. அது ஐந்து நிலைகளைப் பெறுகிறது. 'நிலை' என்பது வடமொழியில் 'அவத்தை' எனப்படும். இவ்வைந்து நிலைகளாவன : சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்பன. இவை முறையே விழிப்பு, கனவு, உறக்கம், பேருறக்கம், உயிர்ப்படக்கம் அல்லது மூச்சு அடங்கியிருத்தல் ஆகியவற்றைக் குறிக்கும்.

இவ்வைந்து அவத்தைகளையும், உயிர் விழிப்பு நிலையிலேயேயும் அடையும். அப்போது அவை உயிர் தன்னால் அறியப்படும் பொருளில் அழுந்தி நிற்கும் நிலைகளைக் குறிக்கும். அவ்வழுத்தம் சாக்கிரம் சொப்பனம் முதலியவற்றில் ஒன்றைவிட மற்றொன்றில் முறையேமிகுந்து நிற்பதாம். இதை அனுபவத்திலும் ஒருவாறு அறிகிறோம். மேற்சொன்ன இரண்டு நிலைகளையும் விடுத்துச் சிவத்தில் அழுந்தும் நிலையிலும் ஐந்துவகை உண்டு என்பர். மேற்கூறிய நுண்ணிய பாகுபாடுகள் வல்லுநர்களால் மேலும் ஆராய்ந்து அறிந்து விளக்குதற்குரியவை.

**(8) உயிரின் உண்மை இயல்பு :** உயிரின் உண்மை இயல்பை அதாவது சொரூபலட்சணத்தை இரண்டாகக் கூறலாம். அவையாவன (1) பற்றுக் கோடின்றி நில்லாமை, (2) சார்ந்ததன் வண்ணம் ஆதல். முன்னரே கூறியபடி உயிர் கேவல நிலையில் ஆணவ மலத்தோடும், சகலநிலையில் மும்மலங்களோடும், சுத்தநிலையில் இறைவனோடும் கூடி நிற்கின்றது. எந்த நிலையிலும் உயிர் தனித்து நிற்பதில்லை. நம் குணமும் அறிவும் நம் கட்டுப்பாட்டிற்கு அடங்கி இருப்பதாக நாம் நினைக்கின்றோம். உண்மையிலேயே அவை நம் இனத்தின் குணத்தையும் அறிவையும் சார்ந்திருக்கிறது. இக்கருத்தை வள்ளுவர் பின்வருங் குறள்களில் அழகுறக் கூறியுள்ளார்.

> மனத்துள து போலக் காட்டி யொருவற்
> கினத்துள தாகு மறிவு.
> நிலத்தியல்பால் நீர் திரிந்தற்றாகும் மாந்தர்க்
> கினத்தியல்ப தாகு மறிவு.

டார்வின் என்ற புகழ்பெற்ற விஞ்ஞானி, சார்ந்ததன் வண்ணமாதல் என்ற கொள்கைக்கு அரண் செய்யும் வகையில் மனித உடம்பு மாறுவதைப் பல உதாரணங்களைக் கொண்டு காட்டுகின்றார். பன்றிகள் மத்தியிலேயே வாழ்க்கை நடத்துகிறவர்கள் பன்றி முகத்தின் சாயல் பெறுகின்றார்கள் என்றும், அவ்வாறே குதிரைகளுடனே காலங் கழிக்கின்றவர்கள் குதிரை முகத்தின் சாயல் பெறுகின்றார்கள் என்றும் கூறுகின்றார். காதல் ஒருமித்துச் சிறந்த அன்பு வாழ்க்கை நடத்தும் கணவனும் மனைவியும் நாளடைவில் ஒருவர் மற்றொருவருடைய முகத்தோற்றத்தைப் பெற்று, இருவரும் ஏறக்குறைய ஒரே விதத் தோற்றத்தைப் பெறுகின்றனர் என்றும் அவர் கூறுகிறார்.

**சார்ந்ததன் வண்ணம் :**

மனிதனுக்குக் கீழ்ப்பட்ட உயிரினங்கள் கூட மேற்கூறிய சட்டத்திற்குள்ளாவதைப் பார்க்கலாம். இவை பகைவர்களிடமிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டுத் தங்கள் சூழ்நிலையின் நிறத்தையும் உருவத்தையும பெறுகின்றன. பசுமை நிறமுள்ள செடிகொடிகளில் அதே நிறமுள்ள புழுக்களையும் பூச்சிகளையும் பார்ககலாம். மரங்களின் உலர்ந்த பட்டைகளிலும், சருகுகளிலும் ஒட்டைப் பூச்சி அல்லது மழைப்பூச்சி என்னும் பூச்சி

கள் செங்குத்தாகச் சிறு குச்சிகள் போன்று நிற்கும். ஆரஞ்சு மரத்தின் இலைகளை உற்று நோக்கின் கறு நிறமும் வெண் புள்ளியும் கொண்ட பறவைகளின் மலத்தைப் போன்ற உருவத்தைக் கொண்ட ஒருவிதப் புழுக்களைப் பார்க்கலாம். இயற்கையில் அமைந்த இச்சூழ்ச்சிகளினால் இப்புழுக்களும் பூச்சிகளும் பறவைகளின் கண்ணுக்குப் படாமல் உயிர் பிழைத்துக் கொள்கின்றன. பச்சோந்தி என்னும் ஓணன், தான் நிற்கும் நிலத்திற்கு ஏற்றபடி தன் நிறத்தை மாற்றிக் கொள்கின்றது. சிங்கம், புலி ஆகிய விலங்குகளின் நிறங்களும் சூழ்நிலைக்கு ஏற்ப அமைந்திருப்பதைப் பார்க்கலாம். ஆப்பிரிக்கா தேசத்தில் சாம்பல் நிறமான பாறைகளில் வாழும் சிங்கங்கள், அதே நிறத்தோடு இருக்கின்றன. ஆகையால் வேடர்கள் சிங்கங்களைச் சிறு பாறைகள் என்று நினைப்பதற்கு இடமுண்டு. புலிகள், அடர்ந்த காடுகளில் வசிப்பதால் அவைகளின் கருப்பு மஞ்சள் கோடுகள், மரம் செடி கொடிகளினால் ஏற்படும் நிழலும் வெயிலும் கலந்திருப்பது போன்ற தோற்றத்தைத் தருகின்றன. மேல்நாட்டு அறிஞர் ஒருவர் கூறிய இக்குறிப்புகளைத் திரு ஜெ. எம். நல்லசாமிப் பிள்ளை அவர்கள் தம் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

**பளிங்கனைய சித்து :**

சைவ சித்தாந்தத்தில் உயிரைப் பளிங்குக்கு ஒப்பிட்டுக் கூறுவர். பளிங்கு தன் அருகில் உள்ள பொருளைப் பிரதிபலிக்கும். உயிர் பாசத்தோடு சேர்ந்தால் பாசத்தைப் பிரதிபலிக்கும். இறைவனோடு சேர்ந்தால் இறைவனைப் பிரதிபலிக்கும். பின்வரும் தாயுமானர் பாடல் சிந்திக்கற்பாலது :

"வந்தேனுடல் பொருளாவி மூன்றுந் தன்கை
வசமெனவே அத்துவா மார்க்கம் நோக்கி
ஐந்து புலன் ஐம்பூதங் கரண மாதி
அடுத்த குணம் அத்தனையும் அல்லை யல்லை
இந்தவுடல் அறிவறியா மையும்நீ யல்லை
யாதொன்று பற்றின் அதன் இயல்பாய் நின்று
பந்தமறும் பளிங்கனைய சித்து நீயுன்
பக்குவங்கண் டறிவிக்கும் பான்மை யேம்
யாம்."

அப்பர் பெருமான், உயிருக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பை 'வெண்பளிங்கின் உட்பதித்த சோதியோனே' என்ற வரியில் அழகாகக் கூறியுள்ளார்.

உயிரைப் படங்களில் பொருத்தப்பட்ட கண்ணாடிக்கும் ஒப்பிடலாம். கண்ணாடி என்ற பொருள் இருப்பது உண்மையாயினும், அது தன்னைக் காட்டிக் கொள்வதில்லை. தன்னோடு சார்ந்த பொருளைக் காட்டுகின்றது. கண்ணாடியின் அடியில் திரைக்காட்சி ஒன்று இருந்தால், அதைக் காட்டுகின்றது; அல்லது நடராச மூர்த்தியின் திருவுருவப் படம் இருந்தால் அதையும் காட்டுகின்றது.

**முடிவுரை :**

ஆகையால் நமது கடமை விளங்குகின்றது. பிறவித் துன்பத்திற்குக் காரணம் யான் எனது என்னும் பற்றுகள். இப்பற்றுகளை விடவேண்டுமானால், பற்றற்ற இறைவனைப் பற்ற வேண்டும். இப்பற்று இடையறாது நிலைப்பதற்குப் பழக்கந்தவிர வேறு வழியில்லை. உலகியற் பழக்கங்களை விடவும், அருளியல் நெறிகளைப் பயிலவுமே சரியை கிரியை யோகம் ஞானம் ஆகிய சமய சாதனப் பழக்கங்கள் சான்றோர்களால் வகுக்கப் பெற்றுள்ளன.

'சார்புணர்ந்து சார்புகெட வொழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரும் நோய்'
பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றை
பற்றுக பற்று விடற்கு'

—திருக்குறள்

'பழக்கந் தவிரப் பழகுவதன்றி
உழப்புவ தென்பெண்ணே யுந்தீபற
ஒரு பொருளாலே யென் றுந்தீபற'

—திருவுந்தியார்.

# மெய்ந்நூல்களின் பிழிவு

டாக்டர் திரு. மொ. அ. துரை அரங்கசாமி, M.A., M.O.L., Ph. D.
(தமிழ்த்துறைத் தலைவர், மதுரைப்பல்கலைக்கழகம், மதுரை-2.)

தம்மிடம் மயக்கம் என்ற குற்றம் இல்லாமையால் பொருள்களை உள்ளவாறு உணர வல்லராய்க், காம வெகுளிகளாகிய குற்றம் இல்லாமையால், அவற்றை உணர்ந்தவாறே உரைக்கவும் வல்லராய மெய்யுணர்வுடையோர் (தத்துவ ஞானிகள்) அருளால், உலகில் உள்ளவர் உறுதி எய்துதற் பொருட்டுக் கூறிய நூல்களே, மெய்ந்நூல்கள் எனப்படும்.

மெய்ந்நூல்கள், ஆகமங்கள் எனவும் வழங்கப்படும். வினையின் நீங்கி விளங்கிய அறிவுடைய முனைவன் (இறைவன்) படைப்பின் தொடக்கத்தில், மக்கள் உய்யுமாறு எடுத்துச் சொல்லிய முதல் நூலை அடியொற்றி, மேலே குறிப்பிட்ட மெய்யுணர் வினையுடையோர் செய்த நூல்களையே ஆகமங்கள் அல்லது மெய்ந்நூல்கள் என ஆன்றோர் வழங்குவர். அவை பலவாம்; ஒன்றற்கொன்று கருத்து வேறுபாடு உடையனவாம். சைவாகமம், சிவபெருமானை முதற் கடவுளாகக் கொண்டு அவனைச் சிறப்பித்தும் உயர்த்தியும்கூறும். வைணவாகமம், விஷ்ணுவை முதற் கடவுளாகக் கொண்டு அவனை உயர்த்தியும் சிறப்பித்தும் கூறும். இவ்வாறே ஏனைய ஆகமங்களும் வெவ்வேறு தெய்வங்களைப் பற்றிச் சிறப்பித்துக் கூறும்.

இம்முறையில் நோக்கும்போது, சைவ அடியார்கள் அருளிச்செய்துள்ள தேவாரம் திருவாசகம் முதலியனவும், வைணவ ஆழ்வார்கள் அருளிச் செய்துள்ள நாலாயிரத் திவ்விய பிரபந்தங்களும் மெய்ந்நூல்கள், அல்லது ஆகமங்கள் என்று கருதுதல் தவறாகாது.

மெய்ந்நூல்களின் கருத்துக்களை ஆன்றோர்கள் வழி நின்று ஆராய்வோமாயின், சமயங்கள் பலவற்றிலும் பெயர்கள் பலவாக வழங்கப்பட்டு வழிபாடு கொள்ளும் இறைவன் ஒருவனே என்பதும், ஒரு சமயத்தார் தாம் வழிபடும் இறைவன் உயர்ந்தவன், மற்றவர் வழிபடும் தெய்வங்கள் தாழ்ந்த சிறு தெய்வங்கள் என்று ஏற்றத் தாழ்வு கற்பிப்பது அறியாமை என்பதும் பெறப்படும். இந்த உண்மை, மெய்ந்நூல்களின் பிழிவுகளுள் (சாரங்களுள்) சிறந்ததொரு பிழிவு என்று கொள்ளத்தக்கதாகும்.

"யாதொரு தெய்வம் கொண்டீர்
அத்தெய்வமாகி ஆங்கே
மாதொரு பாக னார்தாம்வருவர்"

என்ற கூற்றும், "எவ்வெவ்வன்பர் எவ்வெவ் வடிவத்தை ஈடுபாட்டுடன் வழிபட விரும்புகின்றனரோ, அவ்வவருடைய அசைக் கொணாத ஈடுபாட்டிற்கு ஏற்ப அந்தந்த வடிவத்தை நான் தாங்கி நிற்கின்றேன்" என்ற கண்ணபிரான் கூற்றும், இவ்வுண்மைக்குத் தக்க சான்றுகளாம்.

இறைவன் ஒருவனே, அவன் வினையின் நீங்கி விளங்கிய அறிவினன். எல்லா ஆற்றலும் உடையவன் அவன். மக்கள் பலர். அவர், வினைப் பயன் நுகரும் சிற்றறிவினர்; சிற்றாற்றல் உடையவர். இறை

வன் என்று உண்டோ, அன்று முதலே மக்கள் உண்டு. வினையின் நீங்கி விளங்கிய அறிவினன் இறைவன் ஆதலால், அவன் என்றும் இன்பப் பிழம்பாய் இலங்குபவன். மக்களோ வினைப்பயன் நுகரும் சிற்றறிவினராதலின், என்றும் துன்பத்தில் தோய்ந்து உழலுபவர்கள். ஆனால், மக்களுக்கு இயல்பூக்கமாக முயற்சி என்பதொரு கருவி உடன் பிறந்த உறுதுணையாக இலங்குவதாகும். இறைவனருளும், இடைவிடாத இந்த இயல்பூக்கமான முயற்சியும் உடைய மக்கள், வினையின் நீங்கித் துன்பம் தொலையப் பெற்று இன்பப் பிழம்பாய், மற்றீண்டு வாரா நிலையுறுவர். முயற்சியுடைமையால் செயற்கரிய எல்லாம் செய்து பெருமை எய்தலாம். முயற்சியுடைமை தமக்குள்ள பெருஞ்செல்வமாம் என்பதை உணர்ந்து, அதை இடைவிடாது பயன்படுத்தலால் எதையும் சாதிக்கலாம் என்ற உண்மையை, மெய்ந்நூல்களின் மற்றொரு பிரிவாக மக்கள் தெளிந்து கடைப்பிடித்தல் வேண்டும். இந்த முயற்சி இறைவன் திருவருளுடன்கூடி இடைவிடாமல் வாழ்க்கையில் நடைபெறுமாயின், ஒருவன் பிறவிப் பெருங்கடல் நீந்தி இறைவன் அடி சேர்ந்து என்றும் இன்பத்தில் திளைத்திருக்கலாம்.

> "யாம் மெய்யாக் கண்டவற்றுள் இல்லை;
> எனைத்தொன்றும் வாய்மையி னல்லபிற"

என்பது மெய்ந்நூல்களின் பிழிவாகத் திருவள்ளுவர் கண்டு கூறிய அறமாம்.

"யாம் மெய்ந்நூல்களாகக் கண்ட நூல்களுள், யாதொரு தன்மையாலும் வாய்மையின் மிக்கனவாகச் சொல்லப்பட்ட பிற அறங்களில்லை" என்பது இதற்குப் பரிமேலழகர் கூறியுள்ள உரையாகும்.

இறைவனருளுடன் முயற்சி குன்றாது பிறவிப்பிணி நீங்கப் பாடுபடும் ஒருவன் அறங்களெல்லாம் உடையவனாதல் வேண்டும். அவைதாம் பலவாய், எல்லை கூறப்படாதனவாய் இலங்குதலின், மெய்ந்நூல்களின் பிழிவாய் இலங்கும் இந்த வாய்மையறத்தை ஒருவன் மேற்கொண்டு ஒழுகுவானாயின், ஏனைய அறங்களெல்லாம் தாமாகவே இவ்வோர் அறத்தைச் சுற்றி நின்று பயனளித்துவிடும்.

இறையருளும் முயற்சியும் வாய்மையறமும் கொண்டு, இடைவிடாமல் வீட்டின்பம் குறித்துச் செயலாற்றும் ஒருவன், ஊழிலிருந்து மட்டும் தப்பவே முடியாதென்பதையும், மெய்ந்நூற் பிழிவுகளுள் ஒன்றாக உணர்ந்துகொள்ளுதல் வேண்டும்.

"ஊழாவது, இருவினைப்பயன் செய்தவனையே சென்றடைதற்கேதுவாகிய நியதி என்பர் பரிமேலழகர். நியதி, ஊழ், பால், முறை, உண்மை, தெய்வம், விதி என்பன ஒரு பொருட்கிளவி. ஆகூழ், போகூழ் என ஊழ் இருவகைப்படும். கைப்பொருள் ஆதற்குக் காரணமான ஊழால் முயற்சிப் பெருக்கம் உண்டாம்; அஃது அழிதற்குக் காரணமான ஊழால் மடி(சோம்பல்) உண்டாம். ஈண்டுக் கூறப்பட்ட முயற்சி, மக்களுக்கு இயல்பூக்கமாக அமைந்த முயற்சியின் வேறுதலை இனிது உணர்தல் வேண்டும். ஆதலால், ஆகூழால் அறிவுப் பெருக்கமும், போகூழால் அறிவுச் சுருக்கமும் ஏற்படும். நூல் பல கற்றவனாயினும், போகூழால் பேதைமை உணர்வே மேற்படும். செல்வமுடையராதற்கு அமைந்த ஊழ் ஒரு வகை. அறிவுடையராதற்கு அமைந்த ஊழ் ஒருவகை. ஆக்கம் பற்றிய ஊழ் இவ்வாறு இரு வகைப்படும். ஊழ் வகுத்த வகையானல்லது கோடியை முயன்று தொகுத்தார்க்கும் நுகர்தல் உண்டாகாது. ஊழ் ஊட்டாது கழியாது. ஊழை விலக்குதற் பொருட்டு அதற்கு மறுதலை ஆவதோர் உபாயத்தைச் சூழினும், அஃது அவ்வுபாயமேயானும் பிறிதொன்றானும் வழியாக வந்து, அச்சூழ்ச்சியின் முற்பட்டு நிற்கும். அதனால் ஊழ் போல மிக்க வலியுடையன ஒன்றுமேயில்லை. இவ்வாறெல்லாம் ஊழ் சிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஊழ் வலியுடையதுதான்; அதிலிருந்து உய்ய முடியாது என்பதும் உண்மைதான்; ஆனால், அதற்கே அடிமையாய்விட்டால் மற்ற முயற்சிகள் செய்து பிறவிப்பிணி நீங்கிப் பேரின்பம் அடையமுடியாதே. அதை வெல்வதற்கு வழியேயில்லையா?

ஊழ் என்ற அதிகாரத்திலேயே திருவள்ளுவர் அதை வெல்வதற்கு ஒரு நுட்பமான வழியைக் கூறியிருக்கின்றூர். அது யாது? ''நன்றுங்கால் நல்லவாக் காண்பவர் அன்றுங்கால் அல்லற் படுவதெவன்'' என்பதே அவர் கூறும் நுட்பமான வழியாம்.

''நல்வினை விளையுங்கால், அதன் வினைவாய இன்பங்களைத் திறன் நாடாது இவை நல்லவென்று இயைந்தனுபவிப்பார்; ஏனைத் தீவினை விளையுங்கால் அதன் வினைவாய துன்பங்களையும் அவ்வாறநுபவியாது துடைக்குந் திறன் நாடி அல்லல் உழப்பது என் கருதி?'' என்பது இதற்குப் பரிமேலழகர் கூறும் உரை.

இதனுல், நல்வினைப் பயனுய இன்பத்தையும், தீவினைப் பயனுய துன்பத்தையும் ஒப்ப அனுபவித்தல் வேண்டும் என்று கூறி, அதுவே ஊழை வெல்லும் வழியாம் என்பதைத் திருவள்ளுவர் உணர்த்தியுள்ளமை காணலாம். இன்பம் வருங்கால் மீதூர்ந்த மகிழ்ச்சியடையாமலும், துன்பம் வருங்கால் மீதூர்ந்த வருத்தம் அடையாமலும் இருப்பார், ஊழை வென்றவரே யாவர். இவ்வாறு செய்தல் தமக்கு இயற்கையாக அமைந்த முயற்சியாகிய இயல் பூக்கத்தால் எவர்க்கும் இயலுவதொன்றேயாம். இக்கருத்தே பற்றித்தான் திருவள்ளுவர்,

> ''ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
> தாழா துஞற்று பவர்''

என்று கூறியுள்ளார்.

இங்கேயும் ஊழை அழித்துவிடுவர் என்று கூருது 'உப்பக்கம் காண்பர்' என்று அவர் கூறியிருத்தல் கூர்ந்து நோக்குதற்கு உரியது. உப்பக்கம் காண்பதாவது, ஊழைப் பொறுத்துக்கொண்டு (சகித்துக் கொண்டு) நுகர்தல்.

ஒருவருக்கு ஒருகலகக் கூட்டத்தில் கல்லடிபட்டதென்று வைத்துக் கொள்வோம். உடனே அவர், ஐயோ, அம்மா, அப்பா என்று கூப்பாடு போட்டுக்கொண்டு ஓடுவதும் ஆடுவதும் குதிப்பதும் செய்யலாம். அதே கல்லடிபட்ட மற்றொருவர் ஒரு சத்தமும் செய்யாமல் பொறுமையாக அதன் துன்பத்தை அநுபவிக்கலாம். கூப்பாடு போடுவதனுல் கல்லடி நோய் குறைந்துவிடாது. சத்தம் செய்யாமல் இருத்தலினுல் அந்த நோய் மிகுந்து விடாது. மாருக, மற்றவர் காட்சியில், பொறுமை பற்றிச் சிறப்பு உண்டாகும். ஊழை வெல்லுமாறு, இவ்வாறு ஊழைப் பொறுத்துக் கொள்ளுதலேயாகும். மெய்ந் நூல்களால் இவ்வுண்மை விளங்கும்.


இங்கே பரிமேலழகர் கூறும் உரை நுட்பம் போற்றுதற்கு உரியது. ''ஊழ் ஒரு காலாக, இரு காலாக வல்லது விலக்கலாகாமையிற் பலகால் முயல்வார் பயனெய்து வாரென்பார் உப்பக்கம் காண்பரென்றூர்'' என்பது அவருடைய உரை நுட்பமாம்.

மனிதனுக்கு இயல்பாக அமைந்த முயற்சியினுல், ஒருவினையினைத் தொடங்கிச் செய்யுங்கால், ஊழால் விலக்கு ஏற்பட்டு அவ்வினை தடைப்படலாம். இயல்பாக அமைந்த அதே முயற்சியினுல் மறுபடியும் அவ்வினையைச் செய்தல் வேண்டும். மீண்டும் தடைப்பட்டால், மறுபடியும் தொடங்கிச் செய்தல் வேண்டும். அப்போது அவ்வினை முடியும் என்று பரிமேலழகர் கருதுகிறூர். இது மேலும் ஆராய்தற்கு உரியதாகும்.

இதுகாறும் கூறியவாற்ருல் மெய்ந்நூற் பிழிவுகளாகச் சில உண்மைகள் விளங்கும். அவை, இறைவன் ஒருவனே, அவனே பல சமயங்களிலும் பல்வேறு பெயர்களால் கூறப்படுகிறுன் என்பதும், அவனை அன்புடனும் ஈடுபாட்டுடனும் வழி

பட்டால் பிறவிப்பிணி நீங்கிப் பேரின்பம் அடையலாம் என்பதும், மக்களுக்கு இயல் பூக்கமாக முயற்சி என்பதொன்று அமைந் துள்ளதனுல் இறைவனருளை முன்னிட்டுக் கொண்டு இடைவிடாமல் முயல்வார்க்குச் செய்தற்கரிய செயலென ஒன்றும் இரா தென்பதும், அறங்கள் பலவென்ருலும் வாய்மையறம் ஒன்றை இடைவிடாமல் போற்றுவார் ஏனையறங்களையும் செய்தவ ராவாரென்பதும்; ஊழ் பெருவலியுடைய தென்ருலும், இயல்பூக்கமான முயற்சி யால் அதைப் பொறுத்துக் கொள்ள லாமாதலின், அவ்வாறு பொறுத்துக் கொள்ளுவார் அதை வென்றவராவ ரென்பதும் பிறவும் தெளிவாம்.

ஊழைப் பொறுத்துக் கொண்டு, வாய் மையறம் போற்றித் தமக்கு விருப்பமான ஓர் இறைவனிடம் அன்பும் ஈடுபாடும் கொண்டு, இடைவிடாது முயல்வார் பிறவிப் பெருங்கடல் கடந்து பேரின்பக் கரை அடைவர் என்ற மெய்ந்நூற் பிழிவான கருத்தை உணர்பவர், உணர்ந்த வண் ணம் நின்று பயனடைவாராக!



திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி கோயில், கார்த்திகைச் சோமவார தரிசனத்துக்குத் திருவாவடுதுறை—திருத்தருமை ஆதீனங்களின், ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானங்கள் எழுந்தருளிய இனிய சிறந்த காட்சி (25—11—68).

# மகாபாரதம்

அருண்மொழியரசு

திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள்.

(முற்றொடர்ச்சி)

**சந்தனு:** பிரதீப மன்னன் மகப் பேறு வேண்டிக் கங்கோத்பத்தியை யடைந்து பதுமாசனத்தில் அமர்ந்து பல ஆண்டுகள் தவம் புரிந்து கொண்டிருந்தான். ஒரு அழகிய மாது, நல்ல இளம் பருவம். எழில் கொழிக்கும் முகம்; முத்தன்ன வெண் ணகை; இருண்டு சுருண்ட கூந்தல். மான்விழி, தேன்மொழி. இந்த அணங்கு மெல்லவந்து பிரதீப மன்னன் வலது துடையில் அமர்ந்தாள்.

மன்னவன் யாருமில்லாத அந்தக் காட்டில் மடியில் வந்து அமர்ந்த மடமங்கையை மனத்திலும் தீண்டாதவனாகி, "அம்மா தாங்கள் யார்? நான் தங்கட்கு என்ன செய்யவேண்டும்!" என்றனன். 'மன்னரே! நான் தங்கள் மீது காதல் கொண்டு வந்திருக்கின்றேன். காதலித்து வந்தவளைக் கைவிடுதல் கூடாது. அது பாவம். என்னை ஏற்றுக்கொள். வேந்தர் பெருமானே! நான் கன்னிகை; உனக்குத் தகுதியானவள்; நீர் மகப்பேறு வேண்டித்தவஞ் செய்கின்றீர். என்பால் மகவைப் பெறலாம். விதிப்படி என்னை நீர் மனைவியாக அடையலாம். தள்ளாதீர்"

'பெண்மணியே! மன்னிக்க வேண்டும். பாவத்தில் பெரிய பாவம் பிறர் மனைவியைத் தீண்டுவது. பிறன் மனைவியை விரும்புபவன் உகாந்த காலம் வரை நரகில் உழலுவான்.' 'அரசே நான் பிறன் மனைவியல்லள்; கன்னிகை; ஆதலால் என்னை அடைவது பிழையாகாது.'

'அம்மணி! என் உடம்பில் வலக்கூறு என் மகனுக்கு உரியது; இடக்கூறு மனைவிக்கு உரியது. நீ இடத்துடையில் அமர்ந்திருந்தால் மனைவியாகக் தக்கவள். நீ அமர்ந்த வலத்துடை மகன் அமர வேண்டிய இடம். ஆதலால் நீ மருமகளாக ஆயினாய். உன்னைத் தீண்டினால் மருமகளைத் தீண்டிய பாவம் வரும். ஆதலால் உன்னை விரும்பேன்' என்றான்.

இப்படிச் சொன்னவுடன் அவள் மடியிலிருந்து எழுந்தாள். ஆயிரம் முகங்களுடன் வெண்மையானவுருவுடன் விண்ணளாவி நின்றாள். 'பிரதீபனே! நான்தான் கங்காதேவி. நீ என் மடியில் அமர்ந்து தவஞ்செய்தாய். நான் உன் மடியில் அமர்ந்தேன். அமர்ந்தவுடன் என்னை நீ விரும்பியிருப்பாயாயின் உன்னைச் சாம்பலாக்கியிருப்பேன். உன் மனம் ஒழுக்க நெறியிலிருந்து விலகாமல் உறுதியுடன் இருந்ததுபற்றி மகிழ்கின்றேன். அருள்புரிகின்றேன். என் அருளினால் உனக்கு நல்ல மைந்தன் பிறப்பான். நீ என்னை மருமகள் என்று கூறினாய். உன் உண்மை வாக்கு பொய்யாகாதிருக்கும் பொருட்டு, உன் மைந்தனை மணந்துகொள்வேன். உன் மகன், என்னை நீ யார்? என்ன செய்கின்றாய்? என்று விசாரிக்காமல் என்னை அடைதல் வேண்டும் என்று சொல்லிவை உன்குலம் வளர்க' என்று கூறிவிட்டுக் கங்கை மறைந்தாள்.

பிரதீபனுக்கு உடல் வேர்த்தது. 'நாம் பெரிய இடத்திலிருந்து தப்பினோம்' என்று எண்ணிக் கங்கா நதியை வணங்கிவிட்டு அத்தினபுரம் வந்து சேர்ந்தான். மஹாபிஷக் என்பானுடைய ஆவி அவன்பால் வந்து சேர அதன் பயனாக அவன் மனைவி கருவுற்று ஒரு தேவ குமாரனைப் போன்ற மகனைப் பெற்றாள். அவனுக்குச் சந்தனு என்று பேர் சூட்டினான். பிரதீபனுக்குச் சிறிது முதிர்ந்த பருவத்தில் அவன் பிறந்தான். சந்தனு வேதவேதாங்கங்களிற் கரைகண்டான். விற்பயிற்சியிலும் சிறந்து விளங்கினான். ஒருநாள் பிரதீபன் சந்தனுவைப் பார்த்து 'நீ கானகத்தில் ஒரு வனப்புற்ற பெண்மணியைச் சந்திக்க நேரும். அவள் தேவப்பெண். அவளை நீ யார்? என்று கேட்காதே. அவளை நீ மனைவியாக அடை' என்று கூறினான். மகனுக்கு மகுடாபிஷேகஞ் செய்து விட்டு அம் மன்னன் தவவனம் புகுந்தான்.

சந்தனு இந்திரனுக்கு நிகராக விளங்கினான். சத்தியமூர்த்தி என்று புகழ் பெற்றான். பகைவரை யடக்கினான். பல யாகங்களைச் செய்தான். நிரம்பத் தான தருமங்கள் புரிந்தான். எங்கும் புகழொளி பரப்பினான். அப்போது உயிர்கள் இடர் இன்றி வாழ்ந்தன. அவன் வலிமையில் வாயுவையும், சினத்தில் இயமனையும், பொறுமையில் பூமியையும் ஒத்து உலகில் இமயம் போன்று காட்சியளித்தான்.

ஒருநாள் சந்தனு வேட்டையாடி இளைத்து, கங்கா நதிக்கரையில் உலாவிக் கொண்டிருந்தான். அங்கே இலக்குமியே மானுடப் பெண்வடிவில் வந்தது போன்ற ஒரு பெண் எதிர்ப்பட்டாள். அவள் தன் கரிய கூந்தலை ஆற்றிக்கொண்டு நின்றாள். அவள் மேனி ஒளிமயமாகவும்,மாற்றுயர்ந்த பொன் போலவும் விளங்கியது. அவளுடைய புன்னகை பதினான்கு உலகங்களையும் மயங்கச் செய்தது. ஆடைகளாலும் அணிகலன்களாலும் கவர்ச்சி யுள்ளவளாகக் காட்சியளித்தாள். அவளைப் பலமுறை பார்த்தும் சந்தனுவுக்குப் போதும் என்ற திருப்தி உண்டாகவில்லை.

மெல்ல அவள் அருகில் சென்று அழகின் சிகரமே! நீ தேவமங்கையோ? கந்தர்வ மங்கையோ?நாககன்னிகையோ? மானுட மடந்தையோ? என் உயிர், அரச வாழ்வு, எல்லாம் உன்னுடையவை. நீ என் வாழ்க்கைத் துணைவியாக வேண்டும். உன்னை வேண்டுகிறேன்' என்றான். அவள் மின்னற் கொடிபோல் அசைந்து, 'அரசரே உன் தந்தையை நான் ஒரு முறை சந்தித்திருக்கிறேன். என்னை யார் என்று கேட்கக் கூடாது. நான் எதைச் செய்தாலும் ஏன் என்று மறுக்கக் கூடாது. இந்த நியமத்துக்கு நீர் இணங்குவீராயின் உம்மை நான் கணவராக அடைவேன். என்னை ஏன் என்று கேட்கும் நாள் என்றோ, அன்று உம்மை விட்டுச் சென்று விடுவேன்' என்றாள்.

காதற் கடலில் திளைத்த காவலன் சரி என்று ஒப்புக்கொண்டான். அவளைத் தன் தேர்மீது ஏற்றிக்கொண்டு அத்தினபுரஞ் சேர்ந்தான். அவளை விதிப்படி மணந்து பல ஆண்டுகள் அவளுடன் கூடியிருந்து இன்பத்தை நுகர்ந்தான். அவள் அவனை மிகவும் மகிழ்வித்தாள். இருவரும் ஒருமனமாக வாழ்ந்தார்கள்.

அப்பெண் கருவுற்று ஒரு ஆண்மகனை ஈன்றாள். ஈன்ற அப்பொழுதே குழந்தையின் கழுத்தை ஒடித்துக் கங்கையில் எறிந்து விட்டாள். இச் செய்கையால் அரண்மனையே அதிர்ச்சியடைந்தது. மன்னவன் திடுக்கிட்டான். அவளை ஏன் அப்படிச்செய்தாய் என்று கேட்டாற் பிரிந்து விடுவாள் என்ற அச்சத்தால் சும்மாவிருந்தான். இப்படியே ஏழு குமாரர்களைப் பிறந்தவுடன் கொன்றுவிட்டாள். இதனால் நகரமே நடுங்கியது. இவள் பெண்ணா? பேயா? பூதமா? என்று மக்கள் ஐயுற்று மறைமுகமாகப் பேசிக்கொண்டார்கள்.

சந்தனு பெருங் கவலை யுற்றான். எட்டாவது மகன் பிறந்தான். பிறந்தவுடன் மன்னன் ஓடி அவளை வேண்டினான். 'மாதரசே! இவனைக் கொல்லாதே. என் மரபு தழைக்க இவனை வாழச் செய். பெற்ற குழந்தைகளைக் கொடிய விலங்கு கூடக்கொல்லாதே, பெண்ணாகிய நீ சிறிதும் இரக்கம் இன்றிக் கொல்கின்

ருயே, "நீ யார்? ஏன் பிள்ளைகளை வதைக்கின்ருய்? இதற்கு என்ன காரணம்? என வினவினுன்.

'வேந்தே! நான் கங்காதேவி. உன் மகனைக் கொல்லமாட்டேன். நான் தேவ காரியமாக இத்தனை நாள் உன்னிடம் இருந்தேன். நாம் செய்துகொண்ட ஏற்பாட்டின்படி நான் உன்னை விட்டுப் பிரிகின்றேன். நீ முற்பிறப்பில் மகாபிஷக் என்ற வேந்தன். அநேக யாகங்களைச் செய்து பிரமபதம் பெற்ருய். அங்கே வந்த என்னை விரும்பிப் பார்த்தாய். விருப்பம் பிறவியைத் தரும். அதனுல் பிரமலோகத்தினின்றும் வழுவிப் பூதலத்தில் பிறந்தாய். கங்கையாகிய நான் சந்நு என்ற முனிவரிடம் பிறந்து சானவி என்ற நாமத்துடன் உன்னுடன் வாழ்ந்தேன். நான் ஏன் குழந்தைகளைக் கொன்றேன் என்பதைப் பற்றிக் கூறுகின்றேன். கேளும்.'

அக்கினி தேவனுக்கு நிகரான கடுந்தவமுள்ள வசிட்ட முனிவர் மேரு மலையின் சரிவில் ஒரு ஆச்சிரமத்தில் வசித்துக் கொண்டிருந்தார். சுரபி என்ற தட்சருடைய மகள் நினைத்ததையெல்லாம் கறக்கின்ற உயர்ந்த நந்தினி என்ற பசுவைக் காசிபரிடம் பெற்ருர். உலக நன்மைக்காக உண்டாக்கப்பெற்ற அந்தக் காமதேனுவை வசிட்டர் தாம் உலக நலத்தைக் கருதிச்செய்யும் ஓமத்துக்கு உதவியாக வைத்திருந்தார். அத்திருவுடைய தேனு தவவனத்தில் உலாவிக் கொண்டிருந்தது. அங்கு எட்டு வசுக்களும் மனைவியருடன் விளையாடிக்கொண்டிருந்தார்கள். எட்டாவது வசு பிரபாசன் என்பானுடைய மனைவி அக்காமதேனுவைக் கண்டாள். அதன் கண்ணழகும் மடியின் வனப்பும் கொம்பின் குணமும் கழுத்தின் எழிலும் அவள் உள்ளத்தைக் கவர்ந்தன. அவள் அதனைக் கணவனிடம் காட்டினுள்.

பிரபாசன், 'பெண்ணே! இது விரும்பியதைத் தருவது. வசிஷ்டமுனிவருடையது. இதன் சுவையுள்ள பாலைப் பருகின மனிதன் பதினுயிரம் ஆண்டுகள் இளமையோடு இருப்பான்' என்ருன்.

வசுவின் மனைவி 'மனித உலகில் ஜிதவதி என்ற பெண் என் அன்புக்குரியவள். அவள் உசீனரனுடைய மகள். அவள் அழகில் நிகரில்லாதவள். என் நட்புடைய அவள் இந்த ஆவின் பாலைப் பருகி இளமையோடு இருக்கட்டும். இப்பசுவின் பாலைக் கொணர்ந்து கொடும்' என்ருள்.

பிரபாசன் 'மாதரசே! பால் மட்டும் என்ன? பசுவையே கொணர்ந்து கொடுப்பேன். என் ஆற்றலைப்பார்? உனக்காக நான் எதையும் செய்வேன்' என்று கூறித் தன் சகாக்களான மற்ற ஏழு வசுக்களையும் துணைக்கு அழைத்துச் சென்று, பசுவை பலாத்காரத்தால் பற்றிக்கொண்டு போனுன். மனைவியின் மோகத்தால் பின்னே வரும் தீங்கினைச் சிந்தித்தானில்லை. பெண்ணேவலின் பிழையைக் கருதவுமில்லை.

வசிட்டர் ஓமம் புரியும்போது காமதேனு வந்து பால் தரவில்லை. காரணத்தை யோகக் கண்ணுல் நோக்கினுர். உண்மையை யுணர்ந்தார். சீற்றமடைந்தார். ஓமத்துக்கு உதவும் உயர் பசுவை என் அனுமதியின்றிக் கவர்ந்த எட்டுவசுக்களும் பூமியில் மானிடர்களாகப் பிறக்கக் கடவர் என்று சபித்தார். அதனையறிந்த வசுக்கள் நடுங்கி முனிவரிடம் ஓடிவந்து பசுவைத் தந்து பணிந்து 'ஐயனே இவன்தான் திருடினுன். நாங்கள் துணைக்கு வந்தோம். மன்னிக்கவேண்டும்' என்று மிகவும் வேண்டிக் கொண்டார்கள்.

முனிவர் கருணைகூர்ந்து வசுக்களே, செய்த வினை செய்தவனை வந்தடைந்தே தீரும்! மண்ணில் இட்ட விதை முளைப்பது போல் என அறிக. என்சொல் ஒருபோதும் பொய்க்காது. நீங்கள் எழுவரும் பிறந்தவுடனே சாபத்திலிருந்து விடுபட்டு உங்கள் பதம் பெறுவீர்களாக. எட்டாவது வசுவாகிய இந்தப் பிரபாசன் மட்டும் பல ஆண்டுகள் பூதலத்தில் வாழ்வானுக. இவன் தருமநெறியுடன் இருப்பான். பெண்ணின் சொல்லைக் கேட்டபடியால் இவன் பெண் சுகம் இன்றி வாழ்வான். பிதாவுக்குப் பெருநன்மை புரிவான்' என்று அருளிச் செய்தார்.

அதன்பின் அந்த வசுக்கள், என்பால் வந்து, 'நாங்கள் உன்பால் பிறக்கிறோம். பிறந்தவுடன் எமக்கு விடுதலை கொடு' என்று வேண்டிக்கொண்டார்கள். அதனால் அந்த எழுவரையும் பிறந்தவுடன் விடுதலை தந்து அனுப்பிவிட்டேன். இவன் எட்டாவது வசு. நெடுங்காலம் வாழ்வான். இவனால் அறம் தழைக்கும். இவனை நான் வளர்த்து உன்னிடம் சேர்ப்பேன்.' என்று கூறிவிட்டுக் கங்கை மறைந்துவிட்டாள். சந்தனு அவளுடைய பிரிவை ஆற்றாது பெரிதும் வருந்தினான்.

சந்தனு சிறந்த ஞானமுள்ளவன். தேவர்களாலும் முனிவர்களாலும் மதிக்கப்பெற்றவன்; அறத்திலேயே உள்ளம் பதித்தவன்; சம உண்மையாளன் என்று உலகமெல்லாம் உரைக்கப் பெற்றவன்; புலனடக்கம், கொடை, பொறுமை, நாணம் தீரம், ஆற்றல் முதலிய நற்குணங்கள் அவனிடம் நிலை பெற்றிருந்தன. அவன் உலகை அரசர்க்கரசனாக உயர்வு பெற்று ஆளும்போது எல்லோரும் தரும நெறியில் நடந்தார்கள்.

கங்கையைப் பிரிந்து முப்பத்தாறு ஆண்டுகள் அம்மன்னன் வேறொரு மாதையும் விரும்பாமல் ஒழுக்கமுள்ளவனாகவே இருந்தான். கங்கா தீரத்திலேயே பலகாலும் வசித்துக் கொண்டிருந்தான்.

ஒருநாள் கங்கையின் நீர்ப்பெருக்குத் திடீர் என்று குறைந்துவிட்டது. காரணம் யாதோ என்று கருதிய சந்தனு கங்கை நதிக் கரையோரத்திலேயே எதிர்நோக்கி நடந்தான். அங்கே ஒரு வீர இளங்குமரன் தன் வில்லிலிருந்து தேவப்படைகளை விடுத்துக் கங்கா நதியை அணைபோட்டுத் தடுத்து விளையாடிக் கொண்டு நின்றான். அவனுடைய அழகு தோற்றம் ஏற்றம் இவைகளைக்கண்டு, மன்னன் கண்கள் இமைகொட்டாமல் வியப்புடன் பார்த்தான். இவன் முருகனோ? மன்மதனோ? ஐயந்தனோ? என்று ஐயுற்றான்.

அக்குமாரன் ஒரு மோகனக் கணையால் அவனை மயங்கச் செய்து மறைந்தான். கங்கை தன் மகனைப் பற்றிக்கொண்டு தோன்றினாள். சந்தனுவுக்கு அருள் செய்தாள். 'சந்தனுவே! இவன் உன் குமாரன். இவன் வசிட்டரிடம் எல்லாக் கலைகளையும் ஓதியுணர்ந்தான். பரசுராமரிடம் வில் வேதம் முழுவதும் கற்றுள்ளான். வில் பிடித்தவர்களில் இவனுக்கு நிகர் விண்ணிலும் மண்ணிலும் இல்லை. சுக்கிராச்சாரியாருக்கு என்ன என்ன தெரியுமோ அத்தனையும் இவன் அறிவான். வியாழ பகவான் அறிந்த வித்தை முழுவதும் அவன் அறிந்துள்ளான். நீதி நெறியில் நியமந் தவறாதவன். இவனை அழைத்துக் கொண்டுபோ' என்று கூறிவிட்டுக் கங்கை மறைந்துவிட்டாள்.

சந்தனு மைந்தனுடைய சேர்க்கையில் பெருமகிழ்ச்சியுற்றான். சிவபெருமான் செவ்வேளுடன் சேர்ந்து வருவதுபோல் மகனுடன் தேரேறி அத்தினபுரத்தையடைந்தான். நல்ல நாளில் காங்கேயனுக்கு இளவரசுப் பட்டம் கட்டினான்.

காங்கேயர் தமது அறிவின் திறத்தாலும் ஆசாரத்தாலும் நன்னடையாலும் தந்தையையும் தேசத்து மக்களையும் மகிழ்வித்தார். செவ்வையாக அவர் அரச காரியங்களைப் பார்த்தார். நான்கு ஆண்டுகள் சென்றன.

சந்தனு மன்னன் ஒருநாள் வேட்டையாடச் சென்றான். காட்டில் கூடாரத்தில் தங்கினான். நடுநிசியில் நறுமணம் ஒன்று இனிது வீசியது. அந்த நறுமணத்தை நாடி நடந்தான். அது யமுனைக் கரையில் உய்த்தது. யமுனை நதிக்கரையில் ஒரு ஓடத்தை மரத்தில் கட்டிவிட்டு அமர்ந்திருந்த அழகிய செம்படவப் பெண்ணைக் கண்டான். அவள் மேனியிலிருந்து உயர்ந்த மணம் கமழ்ந்து கொண்டிருந்தது. மன்னவன் அதிசயம் அடைந்து 'பெண்ணே! நீ யார்? இந்த நடு நிசியில் இங்கு என்ன செய்துகொண்டிருக்கின்றாய்' என்று கேட்டான்.

'ஐயா! என் பேர் பரிமளகந்தி. நான் ஒரு செம்படவப் பெண். என் தந்தை கடற்கரைக்கு அரசனான தாசராஜன். என் தந்தையின் கட்டளையினால் முனிவர்கட்கு உதவியாக இந்த ஓடத்தைத் தருமத்துக்

குச் செலுத்திக் கொண்டிருக்கின்றேன். உனக்கு நன்மையுண்டாகட்டும்' என்ருள் அம்மாதரசி.

அவளுடைய சொல்லின் இனிமை, அவ ளின் தனிமை, இவைகளில் உள்ளம் ஈடு பட்ட அரசன், 'பெண்ணே! நான் குரு குலக் கொற்றவன் சந்தனு. உன்னை விரும் புகின்றேன். நீ என்னைக் கணவனுக அடைவாய்' என்ருன்.

அவள் 'அரசே! நான் என் பிதாவுக்கு உட்பட் டவள். இது அவர் அனுமதியால் நடைபெற வேண்டியது' என்ருள். அறநெறி தவருத அரசன் அதற்குமேல் அங்கு நிற்கவில்லை. தேர் ஏறிக் கடற்கரை சென்று பரதவர் தலைவனிடம் போனுன். அவன் ஓடோடியும் வந்து குருகுல வேந்தனைத் தொழுது தக்க மரியாதை செய்தான். மன்னவன் தன் தேர்ப்பாகனைக் குறிப்பினல் ஏவினுன்.

தேர்ப்பாகன், 'தாசராஜனே! உன் புதல் வியைப் பூருகுல வேந்தர் விரும்புகின்ருர். உன் குலஞ் செய்த புண்ணியம். வலஞ் செய்து வணங்கி உன் மகளைக் கொடுத்து நலஞ்செய்' என்ருன்.

செம்படவர் தலைவன் சந்தனுவை வணங்கிக் கூறுவான். 'அரசே! என் புதல்வியை நீர் விரும்புவது என் முன் வினைப்பயன்; மிக்க மகிழ்ச்சி; தடையின் றித் தருகின்றேன். என் மகள் வயிற்றில் பிறக்கும் மகனுக்கு இந்த மாநில ஆட்சி யைத் தருவீராயின் நான் இதற்கு உடன் படுவேன்' என்ருன். காமன் கணையினுல் புண்பட்டிருப்பினும் சந்தனுவின் மனம் அறத்திலிருந்து நழுவவில்லை. ஒன்றுமே விடை கூருமல் எழுந்து அத்தினபுரம் போனுன். அதுமுதல் அப்பெண்மணியை நினைந்து நெஞ்சம் நெகிழ்ந்தான். ஊண் உறக்கம் தவிர்ந்தான். மெலிந்து இளைத்துப்போனுன்.

தினந்தினந் தந்தையை வணங்கும் நியதியுடைய காங்கேயர் பிதாவைத் தொழுது காரணம் கேட்டார். அவன் ஒன் றும் உரைத்தான் இல்லை. மருத்துவரை விடுத்துச் சோதித்தார். முடிவில் பாகனை அழைத்து உண்மையை யுணர்ந்தார். உடனே அமைச்சர்கள், குலமாதர்கள், ஆடை அணிகலன்கள், மேளதாளங்கள் சூழப் புறப்பட்டார். கடற்கரையையடைந் தார்.

தாசராஜனைப் பணிந்தார். நீர் இது முதல் எனக்குப் பாட்டனுர்; என் அன்னை உமது குமரிதான். இந்த உலகம் இனி என் அன்னைபால் பிறக்கும் தம்பிகட்குத் தான் உரியது. இன்றே என் பிதாவுக்கு உன் மகளைக் கொடுத்துத் திருமணம் புரிவீராக.

விண்ணிலும் மண்ணிலும் உள்ள தேவர்களும் மனிதர்களுங் கேட்கட்டும். இன்று முதல் நான் விரதத்தை மேற் கொள்ளுகின்றேன். இந்தப் பூதல ஆட் சியை நான் என்தம்பிக்கு வழங்கிவிட் டேன். பின்னே எனக்குப் பிறந்த மக்கள் இதை ஒப்புக்கொள்ளவில்லையானுல் நியா யப்படி அரசு என் மக்களைச் சாரும். என் தம்பியின் மக்கள் ஏமாந்து போவார்கள். ஆதலால் என் தந்தையின் பொருட்டு மாதரை மனத்தாலுந் தீண்டமாட்டேன். என் யோகசக்தியால் பிரம்மசாரியாகவே இருப்பேன். மகவு பெருதவர்களுக்குச் சுவர்க்கம் இல்லை யென்ற வேத மொழிப் படி நான் பரலோகம் இழக்க நேர்ந்தால் அதுவும் எனக்கு மகிழ்ச்சியே. இம்மை மறுமை இரண்டையும் என் பிதாவுக்காக விட்டுவிடுகின்றேன். இது என் பீஷ்மம். "சத்தியம்" என்ருர். எல்லோர்க்கும் உரோ மம் சிலிர்த்தது. விண்ணிலிருந்து மலர் மழை சிந்தியது. "இவர் பீஷ்மர்" என்ற சொல் வானில் எழுந்தது. பீஷ்மர் சத்திய வதியைத் தொழுது 'அம்மா! தேரில் ஏறு' என்ருர்.

தாசராஜன் மகளுடன் அத்தினபுரம் வந்து சந்தனுவைக் கண்டான். நடந்ததை நவின்ருன். சந்தனு மட்டற்ற வருத்தத்தை யடைந்தான். காங்கேயரைப் பார்த்து 'மகனே, நான் உனக்குக் கலியாணம் செய்து அட்சதையிட வேண்டிய பருவத் தில் நீ என்பொருட்டு இகபரங்களை யிழந் தனையா? தந்தையர்க்குதவும் உதவியில் சதமடங்கு நீ எனக்கு உதவினுய்.முன்பு தன்

இளமையைத் தந்தைக்குத் தந்த பூருவும் உனக்கு நிகராகமாட்டான். குழந்தாய் என்ன காரியம் செய்தாய்? நீ நினைத்தாலன்றி உனக்கு மரணம் வராது. இந்த வரத்தை உனக்கு வழங்கினேன்' என்றான். பின்னர் முறைப்படி சந்தனுவுக்கும் சத்தியவதிக்கும் திருமணம் நடைபெற்றது. அவளிடம் கதிரவனைப் போலவும், மதியைப் போலவும் சித்திராங்கதன்; விசித்திர வீரியன் என்ற இரு புதல்வர்கள் தோன்றினார்கள்.

பின்னர் சந்தனு பரமபதத்தை யடைந்தான். பீஷ்மர் சித்திராங்கதனுக்கு முடிசூட்டினார். சித்திராங்கதன் என்ற பேருடைய ஒரு கந்தருவன் தன் பேருடன் இவன் இருப்பதைக்கண்டு பொறாமையுற்றான். ஒருநாள் சித்திராங்கதனைப் போருக்கு அழைத்து, அதில் அவனைக் கொன்று விட்டான்.

பீஷ்மர் விசித்திர வீரியனுக்கு முடிசூட்டினார். விசித்திர வீரியன் தாயரையும் தமையனாரையும், போற்றி செய்து புகழுடன் அவனியை அரசு புரிந்தான்.

(தொடரும்)



தில்லை ஸ்ரீசபாநாயகர் ஆலய தரிசனத்துக்குத் திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானமும், தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானமும்,
''பொருட்சமய முதற்சைவ நெறிதான் பெற்ற புண்ணியக்கண் இரண்டு''
எனும்படி எழுந்தருளியபோது, பொதுத்தீட்சிதர்கள் அளித்த வரவேற்பு.

# "தென்றமிழ்ப் பயன்"

மகாவித்துவான் திரு. சி. அருணைவடிவேல் முதலியார்,
தருமபுர ஆதீனம்.

மொழி, மக்களுக்குக் கிடைத்துள்ள ஓர் அரும்பெறற் பொருள். இஃது ஏனை எந்த உயிருக்கும் கிடையாத அரும்பொருள். இதனாலேயே மக்கள் பல்வகைச் சிறப்பும் பெற்று விளங்குகின்றனர். தொல்காப்பியர் "மக்கள் தாமே ஆறறி வுயிரே" என்றாராயினும், அதனோடு நிறுத்தாமல், "பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே" "ஒரு சார் விலங்கும் உளவென மொழிப" என்பவற்றையும் உடன் கூறினார். இவற்றுள் பின்னர்க் கூறிய சூத்திரத்தால், 'விலங்குகளுட் சிலவும் மக்களைப் போன்று ஆறுவது அறிவைப் பெற்றுள்ளன' என்பது தெளிவாகும். ஆயினும், மக்கள் இனத்திற்கன்றி வேறு எந்த உயிரினத்திலும் அறிவு வளர்ச்சி காணப்படவில்லை.

"வான்குருவி யின்கூடு
வல்லரக்குத் தொல்கறையான்
தேன்சிலம்பி யாவர்க்கும்
செய்யரிதால்"

என்ற ஔவையார் பாட்டு, குருவிக் கூடு, குளவிக் கூடு, சிலந்திக் கூடு, கறையான் புற்று இவைகளை மக்கள் எவ்வளவு முயன்றாலும் செய்தல் இயலாது, என்று தெரிவிக்கின்றது. இதைக் கொண்டு சிலர், 'குருவி முதலியன மக்களைவிடச் சிறந்த அறிவுடையனவோ' என்று ஐயுறுகின்றனர். அங்ஙனம் ஐயுறுதல் வேண்டாத தொன்றேயாம். ஏனெனில், குருவி முதலிய அவ்வுயிரினங்களின் அறிவில் வளர்ச்சி காணப்படாமை தெளிவுற விளங்குகின்றது. அஃதாவது, ஆயிரக் கணக்கான ஆண்டுகட்கு முன்பு குருவிகள் கட்டிய கூட்டிற்கும், இன்றுள்ள குருவிகள் கட்டும் கூட்டிற்கும், எள்ளளவேனும் வேற்றுமை இல்லாமை வெளிப்படை. குளவி, சிலந்தி, கறையான் என்பவற்றின் கூடு முதலியனவும் இத்தன்மையனவே யாம். ஆனால், மக்கள் அமைத்துக் கொள்ளும் இல்லத்தில் நேற்று இருந்த வகை இன்று இல்லை என்னும்படி மிக மிகத் திருத்தமும், உயர்வும் காணப்படுகின்றன. ஏனைய துறைகளிலும் இவ்வகையான வளர்ச்சி இருத்தலைச் சொல்ல வேண்டா. மக்கள் இனம் இவ்வாறு அறிவு வளர்ச்சியைப் பெறுவதற்கும், ஏனைய உயிரினங்கள் இத்தகைய வளர்ச்சியைப் பெருததற்கும் காரணம், மக்களுக்கு மொழி என்பது கிடைத்திருத்தலும், ஏனைய உயிரினங்கட்கு அது கிடையாமையுமேயாம்.

மொழிப் பயிற்சியால் மக்கள் பொருளை நன்கு உணர்கின்றனர். உணர்ந்ததை மறவாமலும் நினைவில் பதித்துக் கொள்கின்றனர். அதனால், பின்பு பொருளை நேரில் காணுதபொழுதும் கண்டாற் போன்ற உணர்ச்சியைப் பெறுகின்றனர். இவை காரணமாகப் பொருள்களைப் பற்றிய அறிவு மிகமிக வளர்ந்து கொண்டே போகின்றது. மேலும், மக்கள் தங்கள் அறிவைப் பிறர்க்குக் கொடுத்தும், பிறரது அறிவைத் தாம் கொண்டும் நலம் பெறுதற்கு 'மொழி' என்னும் சிறந்த கருவியே துணை செய்கின்றது. இன்னும் மக்கள் தமக்குள் ஒரு காலத்தில் ஓரிடத்தில் கூடியிருந்து அளவளாவியே ஒருவரது அறிவை மற்றவர் பெறவேண்டும் என்பதின்றிக் காலம் இடையிட்டும், இடம் இடையிட்டும் நீங்கி நிற்பவர்களுங்கூட, எழுத்து வாயிலாகக் கலந்துகொள்ள மொழி பயன்படுகின்றது. எனவே, இத்தகைய சிறந்த கருவியாகிய மொழியே மக்கள் இனத்தை உயர்த்தி வருகின்றது என்பதில் ஐயம் இல்லை. இதை அறிந்தே அறிவுடைய மக்கள் ஏனை எல்லாவற்றிலும் மேலாக மொழியைத் தங்கள் கண்ணும் கருத்துமாகக் காத்தும், வளர்த்தும் வருகிறார்கள்.

மொழியின் வளர்ச்சி பலதிறப்பட்டது. அவற்றுள் முதலாவது ஒலி வடிவிலே மட்டும் இல்லாது, வரிவடிவில் எழுதிக்காட்டப்படும் நிலையைப் பெறுவது. இரண்டாவது வரிவடிவில் எழுதிக் காட்டப்பட்டு

வளர்ந்து வரும் உரையும் பாட்டும் ஆகிய நடைகளை, அவை வேண்டியபடி சென்று வீழ்ந்தொழியாதபடி, எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்றாலும் ஒழுங்கு பட்டு நடக்கச் செய்யும் இலக்கண வரம்பு. மூன்றாவது, அவ்விலக்கண நெறியின்படி பல்வேறு வகைப்பட்ட பொருள்களை எடுத்துக் கூறும் நூற்பெருக்கம். இன்ன பலவற்றுள், இறுதியிற் கூறிய பொருள் நூற் பெருக்கமே மொழியினால் மக்கள் பெறும் பயனாகும். இது பற்றியே இறை யனார் அகப்பொருள் உரையிலும் "எழுத் தும், சொல்லும் பெறுவது பொருளின் பொருட்டன்றே; அது பெறேமேல் இவை பெற்றும் பெற்றிலேம்" என்று கூறப் பட்டது.

பொருள் நூல்களிற் கூறப்படும் பொருள் கள் பலவாயினும் அவை அனைத்தும், 'அறம் பொருள், இன்பம் வீடு' என்னும் நான்கில் அடக்கிக் கூறப்படும். உலகியல் முறையில் வீடும் அறத்தினுள் அடங்கும். இன்னும் இலக்கிய மரபில் அவை, 'அகம், புறம்' என இரண்டாகவும் அடக்கப்படும். நூற்பொருளை முப்பொருளாக அடக்கிக் கூறுமிடத்து, 'அறம்' என்பது வீடு பேற் றிற்கு ஏதுவாகிய யோக ஞான ஒழுக்கங் களையும் குறிப்பதாம். பொருளை நான் காகவே விரித்துக் கூறுமிடத்து 'அறம்' என்பது, உலகியல் ஒழுக்கத்தையே குறிக்கும்.

மக்கள் அடையத் தக்க பேறுகளுள் வீடு பேறே சிறந்ததாகையால், அது பற்றிக் கூறும் நூல்களே, மொழியின் சிறந்த பயனாய் அமையும். ஆகவே, உரையும் பாட்டும் ஆகிய இலக்கிய வகையிலும், இசையும் நாடகமும் போல்வனவாகிய பிற கலை வகையிலும், அரசியல், பொரு ளியல் கணக்கியல், அளவையியல் நிலவி யல் ஞானவியல் மருத்துவவியல், உடலியல் உளவியல், மொழியியல் முதலிய நூல் வகையிலும் பெறும் சிறப்பைக் காட்டிலும், உலகியலின் நீங்கி மெய்ந்நெறியில் நிற் கும் முறையையும், அங்ஙனம் நின்றால் பெறும் பயனையும், அங்ஙனம் நின்று பயன் பெற்றாரது பெருமையையும் கூறும் மெய்ந் நெறி நூலைப் பெற்று நிற்கும் சிறப்பே ஒரு மொழிக்குப் பெருஞ் சிறப்பாகும். மேற் கூறிய எல்லா வகைச் சிறப்புக்களையும் தொன்றுதொட்டே பெற்று விளங்கும் அமிழ்தினும் இனிய நம் தமிழ் மொழிக்கு இந்த மெய்ந்நெறிப் பெருஞ் சிறப்பாக அமைந்த நூல் ஒன்று இருக்குமாயின் அதுவன்றே, பலதுறையிலும் பரந்துபட்டு அன்று தொட்டு இன்றுகாறும் வழக்கிற வாது வாழ்வு பெற்று நிற்கும் அம்மொழி யின் பயனாக விளங்கத் தக்கது!

வீடுபேற்றிற்கு நேரே வாயிலாய் நம் தமிழ்மொழியில் அமைந்த நூல்கள், தேவாரம் முதலிய பன்னிரு திருமுறைக ளாகிய அனுபவ நூல்களும், அவ்வனு பவங்களின் நுட்பங்களை உள்ளங்கை நெல்லிக்கனி போலத் தெளிவுற விளக் கும் உந்தி களிறு உயர்போதம் சித்தியார் முதலிய சித்தாந்த சாத்திரங்களுமாகும். அனைத்திலும் தலையாயதாய் நிற்பது, ஏழாந் திருமுறையுட் போந்த 'திருத் தொண்டத் தொகை' என்னும் திருப்பதி கம் ஒன்றே. ஏனெனில் ஏனைய திருப்பதி கங்கள் முதலியவற்றாலும் சாத்திரங்களா லும் அறியும் பயன்களை வரலாற்று வகை யில் அனுபவமாக உணர்த்துவது அஃது ஒன்றே.

எந்த நாட்டிற்கும் மிக்க ஏற்றத்தைத் தருவது, மெய்ந்நெறியில் நின்று வீடுபேறு பெற்ற பெரியார்களது உண்மை வர லாறே என்பதை, "இருமை வகை தெரிந்து ஈண்டறம் பூண்டார்—பெருமை பிறங்கிற் றுலகு" என்ற திருக்குறளானும் நன்குணரலாம். இத்தகைய பெருஞ் சிறப்பைத் தமிழ்நாடு பெறுதற்கு வித்திட் டது, மேற்கூறிய திருத்தொண்டத் தொகையேயாம்.

இது வரலாற்று வகையில் தமிழ்நாட் டிற்குள்ளே ஒருகால எல்லையில் உண்மை யாக நிகழ்ந்த மெய்ந்நெறி நிகழ்ச்சிகளைச் சிறப்பாகத் தனித்தனி குறித்தும், ஏனைய நாட்டிலும் காலத்திலும் நிகழ்ந்த அத் தகைய நிகழ்ச்சிகளை 'அப்பாலும் அடிச் சார்ந்தார்' என்னும் வகையில் சிறப்பாகக் குறித்தும் அருளிச் செய்யப்பட்டது.

சொல்லப்படும் வரலாறுகள் உண்மை வரலாறாகத் தெளியப்படுவது அவற்றைச் சொல்லுவோரது தகுதிபற்றியேயாம். அதனால், உலகிற்கு ஒப்பற்ற ஒருபேறுறுதி யளிக்கும் இவ்வுண்மை வரலாற்றுக்குத் தோற்றுவாய் செய்ய, இறைவன் தனது நிலையையே பெற்றுத் தன்னுடன் இருந்த ஆலால சுந்தரரை அங்கு நின்றும்

அகற்றி, இம்மண்ணுலகிற் பிறக்கச் செய்தான். இதனே,


"மாத வம்செய்த தென்றிசை வாழ்ந்திடத்
தீதி லாத்திருத் தொண்டத் தொகைதரப்
போது வார்அவர் மேல்மனம் போக்கினர்"

என்று சேக்கிழார் இனிது விளங்க எடுத்தோதினர்.

நம்பியாண்டார் நம்பிகள் அருளிச் செய்த திருத்தொண்டர் திருவந்தாதியும், சேக்கிழார் அருளிச் செய்த திருத்தொண்டர் புராணமும், மேற்கூறிய திருத்தொண்டத் தொகையின் வகை விரிகளே என்பது யாவரும் அறிந்தது. இவ் வகை விரிகளே அருளிச் செய்தோரும், களிற்றுமுகக் கடவுள் அருள்வழியும், கனகசபைக் கடவுள் அருள்வழியும் நின்று மெய்ம்மை கூறும் திருமொழியால் அவற்றை அருளிச் செய்தமை இங்கு நினைவிற் கொள்ளத்தக்கது. எனவே, மேற்குறித்த திருத்தொண்டத் தொகையே நம் தென்றமிழ்ப் பயனுவது என்பது, நன்குணரற்பாலதாகின்றது. அதனே இவ்வாறு யாவரும் இனிதுணர்தற் பொருட்டே சேக்கிழார் நாயனர், திருத்தொண்டத் தொகைவிரியின் முதற்பகுதியாகிய தில்லைவாழந்தணர் புராணத்திலே "திருத்தொண்டத் தொகை தென்றமிழ்ப் பயனுய்த் தோற்றம் எடுத்தது" என எடுத்தோதியருளினர். அத்திருப்பாடல்

"இன்றிவர் பெருமை எம்மால்
இயம்பலாம் எல்லைத் தாமோ?
தென்றமிழ்ப் பயனுய் உள்ள
திருத்தொண்டத் தொகைமுன் பாட
அன்றுவன் றெண்டர் தம்மை
அருளிய ஆரூர் அண்ணல்
முன்றிரு வாக்காற் கோத்த
முதற்பொரு ளானர் என்றல்"

என்பது. இவ்வாற்றல் தென்றமிழால் சீரிய பயன்கொள்ள விரும்புவோர் யாவரும், திருத்தொண்டத் தொகை வகை விரி என்பவற்றை இனிது ஓதி உணர்ந்து உள்ளம் ஒருங்குதல் நேரிதாம் என்பது உணரப்பெறும்.



சிதம்பரத்தில், தருமை ஆதீனம் ஸ்ரீ குருஞான சம்பந்தர் திருமடத்தில், திருவாவடுதுறை ஆதினம்—திருத்தருமை ஆதீனம் ஆகியவற்றின், ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானங்கள் கொலுவீற்றிருக்கும் இனிய திருக்காட்சி.

# வேதப் பயனும் சைவம்

திரு. க. வச்சிரவேல் முதலியார், பி.ஏ.,எல்.டி., காஞ்சிபுரம்.

சைவம் என்பது கடவுட்கொள்கையை உடைய ஒழுக்க நெறிகளுள் ஒன்று. கடவுட் கொள்கை ஆவது காணப்படும் உலகையும் உயிர்களையும் படைத்துக் காத்துத் துடைத்து நடத்தும் ஒரு முதற் பொருள் உண்டு என்னும் கொள்கை. அப்பொருள் அருவாய், அறிவாய், எல்லா முதன்மையும் பேரருளும் உடையதாய் உலகு உயிர்களைப் பிரிப்பின்றிக் கலந்து நின்று ஊக்குவது என்பது, அக்கொள் கையின் உள்ளுறை. இத்தகைய முதற் பொருளை இறைவன், முதல்வன், இயவுள், பகவன் முதலிய பெயர்களால் வழங்குதல் பொருத்தமாயினும், சிவம் அல்லது சிவன் எனச் சிறப்பாகக் குறித்து உணர்வது தக்கது, நல்லது, பயன்தருவது என்னும் சிறப்பியல்பை உடையது சைவம் எனப் படும் சிவநெறி.

உலகமுதற் பொருளை, இவ்வுடம்பு உள்ள போதே மெய்யுணர்வால் தலைப்பட்டு ஒன்றி நிற்றல்கூடும் என்பதும், அங்ஙனம் ஒன்றி நிற்பார்க்கு அப்பொருள் மலரின்கண் அடங்கி உள்ள மணம் பருவத்தில் வெளிப் படுதல் போலப் பக்குவிகள் உணர்வில் இறவாத இன்ப அன்பாய் வெளிப்படக் கண்டு அனுபவிக்கப்படும் என்பதும், இந் நெறியின் முடிந்த கொள்கைகள். இவ் வனுபவத்தில் விளங்கும் சிறப்பியல்புகளைக் குறிக்கும் சொல் சிவம் என்பது. ஆதலால் தான் இச்சொல்லையே முதல்வனது சொ ரூபம் எனப்படும் தன்னியல்பைக் குறிக்கும் சிறப்பு மறை மொழியாகத் திருமூலர் மாணிக்கவாசகர் முதலிய அனுபவச் செல் வர்கள் போற்றி அறிவுறுத்துவார் ஆயினர்.

இச்சொல், தோற்றக் கேடுகள் இன்றி நித்தமாய், பாசத்தடையும் மாசும் இன்றித் தூய அறிவாய், துன்பக்கலப்பும் ஏகதேசப் படுதலும் இன்றி, வரம்பில் இன்பமாய் உள்ள செம்பொருள் என்னும் கருத்துச் செறிவுள்ளது.

> குறைதவிலா மங்கலக் குணத்தன் ஆதலின்
> நிறைமலம் அநாதியின் நீங்கி நிற்றலின்
> அறைகுவர் சிவன் என அறிவின் மேலவர்

என்பது காஞ்சிப் புராணச் செய்யுள்.

சிவநெறி, சிவனுல் உணர்த்தப்பட்டு நிலவுதல் பற்றிச் சைவம் அல்லது சைவ நெறி எனக் குறிக்கப்படுகின்றது. சைவம் —சிவசம்பந்தம் உடையது. சிவசம்பந் தத்தை உயிர்கள் உணர்ந்து அதன்கண் அடங்கி ஒன்றுதலே மேலான முத்தி நிலை எனப்படும்.

> "தெய்வம் சிவமே; சிவன் அருள்சமயம்
> சைவம்; சிவத்தோடு சம்பந்தம் என்றுன்"

என்பது திருச்சிற்றம்பல நாடிகள் என்னும் அறிவர் வாய்மொழி. உயிர்கள்தோறும் அறிவுக்கு அறிவாய் உள்ளிருந்து ஊக்கு வதே சிவம் ஆதலால் எல்லாம் சிவசம் பந்தம் உடையவையே. இப்பரந்த பேருண்மையைத் திருஞான சம்பந்தர் தம் அன்பரோடு வாது செய்து தோற்ற பௌத் தர்களுக்கு உரைத்து அவர்களைச் சைவ நெறிதழுவச் செய்தார் எனப் பெரிய புராணம் கூறுகின்றது. "நிற்பனவும் சரிப்பனவும் சைவமே ஆம்" என்பது அவ் வறிவுரை.

இனி வேதம் என்பது, வட மொழியில் சம யமும் தத்துவமும் பற்றிப் பண்டு தொட்டு எழுந்த பாட்டும் உரையும் என்னும் இவற்

றது தொகுப்பு. இஃது இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்னும் நான்கு கூறு களை உடையது. ஒவ்வொரு கூறும் மந்திரம், பிராம்மணம், ஆரணியகம், உபநிடதம் என்னும் நான்கு பகுப்புக்களை உடையது. இதனை இங்ஙனம் வகுத்துத் தொகுத்தவர் வியாசர். மந்திரம் என்பவை தெய்வப் புகழ்ப்பாக்கள். இவையே ஏனைய வற்றுக்கு மூலமாக உள்ளவை. இம்மை மறுமைப் பயன் குறித்து இம்மந்திரங்களைக் கிரியை பாவனை என்பவற்றேடு கலந்து செய்யும் சடங்குகளை விதிப்பவை பிராம் மணங்கள். மந்திரங்களிலும் சடங்கு களிலும் அடங்கியுள்ள தத்துவ உண்மை களை ஆராய்ந்து வெளிப்படுத்தி உபாசனை முறைகளைத் தெரிவிப்பவை ஆரணியகங் களும் உபநிடதங்களும் ஆகும்; மந்திர பாகங்களைத் தோத்திரங்கள் எனவும், பிராம்மணங்களைக் கிரியைப் பத்ததிகள் எனவும்,ஏனைய இரு பிரிவுகளைச் சாத்திரங் கள் எனவும் கொள்ளலாம்.

நம்தமிழகத்தே சங்க காலத்திலும், பிற் காலத்திலும் வேதத்தை முற்றிலும் உடன் படாத அறிஞர்கள் உளர்; ஆயினும் பொதுவாக அத்தொகுப்பில் உள்ள விழு மிய ஒழுகலாறுகளையும் தத்துவ உண்மை களையும் தழுவிப் போற்றிக் கொள்ளுதல் தமிழ்ச் சான்றோர் பலர்க்கும் உடன் பாடா கவே இருந்து வந்துள்ளது; இங்ஙிலையில் சேக்கிழார் அடிகள் பெரிய புராணத்தில் சண்டேசுவர நாயனர் புராணத்தில் திருச் சேய்ஞலூரின் சிறப்பை எடுத்துரைக்கும் இடத்தில், ஓர் அரிய இனிய திருவிருத் தத்தில் " வேதப் பயனுஞ் சைவம்" என்னும் தொடரை உணர்வும், அழகும், இன்பமும் பொருட்செறிவும் தோன்ற அமைத்துள் ளார்.

பண்ணின் பயனும் நல்லிசையும்
பாலின் பயனும் இன்சுவையும்
கண்ணின் பயனும் பெருகொளியும்
கருத்தின் பயனும் எழுத்தஞ்சும்
விண்ணின் பயனும் பொழிமழையும்
வேதப் பயனுஞ் சைவமும்போல்
மண்ணின் பயனும் அப்பதியின்
வளத்தின் பெருமை வரம்புடைத்தோ?

என்பது அத்திருவிருத்தம்.

பெரிய புராணம், அநபாயன் என்னும் இரண்டாம் குலோத்துங்கனது திரு முன்பு தில்லையில் பலதுறைப்புலமை வாய்ந் தோர் கூடிய அவையில் அரங்கேறியது. தமிழக வரலாற்றை ஆராய்வோரால் வர லாற்று மூலமாகக் கருதப்படும் சிறப் புடையது. இதன்கண் சைவத்தை வேதப் பயன் என்றதன் பொருண்மையைச் சில எடுத்துக்காட்டுகளை முன் மாதிரியாகக் கொண்டு காண்போம்.

இருக்கு வேதத்தில் 10- ஆம் மண்டலத் தில் வரும் நாசதிய சூக்தம் தத்துவக் கொள்கையை உடையது எனப் போற்றப் பெறுவது. அதில் முதற் கடவுள் இயல்பு பின்வரும் மந்திரங்களால் குறிக்கப் படுகுன்றது.

(1) "தேவர்கள் உலகப் படைப்பின் பின்னர்த்தான் உளர் ஆயினர்; ஆதலால் அஃது எங்கிருந்து போந்தது என ஆர் அறிவார் ?"— இருக்கு 10, 129, 6.

(2) "எவர் இதற்கு அத்தியட்சராய்ப் பரம வியோமத்தில் நின்ருரோ அவரே அதனை அறிவார். மற்றெவரும் அறியார்" — ஷை 7.

இங்கு இரண்டாவது மந்திரத்தில் வரும் பரமவியோமம் (மேலான ஆகாசம்) என் பதே,சிவநெறியில் திருச்சிற்றம்பலம் எனப் போற்றப்படும் அருள்ஒளி. இவ்வருள் ஒளியை ஒருவன் தன் உடம்பகத்தே நெஞ்சக் கமலத்தில் கண்டு, அதன்கண் இன்ப அன்பாய் விளங்கும் முதற் பொருளைத் தலைப்படும் சாதனமே, தகர வித்தை எனப் பிருகதாரணியகத்தும், சாந்தோக்கியத்தும் முடிந்த உபாசனை முறையாகக் கூறப்பட்டு உள்ளது. இம் மந்திரங்களின் பொருளே தில்லையம் பதியின் கோயிலில், பொற்சபையில், திருச் சிற்றம்பலமும் கூத்தப்பிரானும் சிவகாமி அம்மையும் ஆகப் புறத்தே உருவாக வைத்து வழிபடப் படுவது. இக்கருத்துப் பற்றியே சேக்கிழார் பெருமான், தில்லை வாழ் அந்தணர் புராணத்தில், மேலே காட்டிய மந்திரத்தில் வரும் பரமவியோமம் என்னும் சொல்லையே வழிமொழிந்து "சிற்

பரவியோமம் ஆகும் திருச்சிற்றம்பலத்துள் நின்று பொற்புடன் நடம் செய்கின்ற பூங் கழல் போற்றி போற்றி'' என முதல்வனைப் போற்றுகின்றார். தகரவித்தையே தலை சிறந்தது எனச் சைவத்துட் போற்றிக் கொள்ளப்படுவது.

"ஏகம் சத் விப்ராபகுதா வதந்தி'' என் பதை எல்லோரும் ஆளுகிறார்கள். இதன் உண்மையான முழுவடிவம் இருக்கு 1, 164, 46 ஆகப் பின்வருமாறு மொழி பெயர்க் கும் படி உள்ளது.

"சத்தாகிய ஒருவனையே இந்திரன், மித்திரன், வருணன், அங்கி, அழகிய ஒளி யுள்ள கருடன் எனப் பலவாக விப்பிரர்கள் கூறுகிறார்கள்''.

இது முழுமுதற்கடவுள் ஒருவனே; அவன் சத்து, செம்பொருள், அவனுடைய ஆற்றலின் பலவகைக் கூறுகளையே இந் திரன் முதலாகக்கூறுகிறார்கள் என்னும் கருத்தை உடையது. இதில் வரும் சத்து, ஏகம் என்னும் பெயர்கள் பரம்பொருளின் முழு முதன்மையைக் குறிக்கும் மரபுப் பெயர்களாக உபநிதடங்களிற் பின் வழங் குவன ஆயின. சிவபிரான் ஒருவனையே சமய நிலையில் போற்றி வழிபடும் தெய் வமாகக் கொள்வதோடு ஞான நெறியாகிய தத்துவக் கொள்கையின் பரம்பொருளா கவும் கொள்வது வேத வழக்கு என்பது, பின்வரும் மேற்கோள்களை ஆய்ந்து நோக் கின் உணரலாம்.

"ஒருவனே உருத்திரன், இரண்டாவதாக நிற்பான் அல்லன்'' - சுவேதாசுவதரம் 3-ஆம் அத்தியாயம் 2 -ஆம் மந்திரம்.

"புருடன் ஆவான் பெரியோன் ஆகிய சத்து எனப்படும் உருத்திரனே'' (ருத்ரஸ் ஸங்மஹ :) — தைத்திரீய ஆரண்யகம், 24-ஆம் அநுவாகம்.

தமிழ் நூலுள்ளும் இம்முறை பின்பற்றப் படுகின்றது.

"நீல மேனி வாலிழை பாகத்து ஒருவன்''
—ஐங்குறு நூறு, கடவுள் வாழ்த்து.

"தன்னில் வேறு தான்ஒன்று இல்லானும்''
—மணிமேகலை, சைவவாதி கூற்று.

தான் ஒன்று, தன்னில் வேறு இலோன் என்பது, சுவேதாசுவதரச் சுருதியின் அநு வாதம் ஆதல் காண்க.

"ஏக பெருந்தகையாய பெம்மான்''
—திருஞான சம்பந்தர்

"ஒருவனாய் உலகத்தே நின்றநாளோ''
—அப்பர்

"ஒருவன் என்னும் ஒருவன் காண்க !''
— திருவாசகம்.

"ஒளி மணிவண்ணன் என்கோ ! ஒருவன்
என்று ஏத்த நின்ற
நளிர்மதிச் சடையன் என்கோ''
— நம்மாழ்வார்

"ஒன்றென்ற தொன்றே காண் ஒன்றே பதி'
"சத்தாம் அறிவறியா - மெய்சிவன் தாளாம்''
— மெய்கண்ட தேவர்.

இன்னும் பதினான்கு வித்தைகளுள்ளும் வேதம் சிறந்தது; அதனுள்ளும் உருத் தரை தசனி சிறந்தது; அதின் உள்ளும் ஐந்தெழுத்து மேலானது; அதினுள்ளும் சிவ என்னும் ஈரெழுத்தொருமொழியே மேலானது; வேதபுருடனுக்குச் சீருத்திரம் கண்ணும், அதனுள் திருவைந் தெழுத்துக் கண்மணியும் ஆம் – என்னும் வைதிகர் களது கொள்கையும், சேக்கிழார் அடிகள் வாய்மொழிக்கு அரண் செய்வதாக உள்ளது.

இவற்றாலும், இவைபோன்றனவற்றாலும், பெரிய புராணத்துட கூறப்படும் நாயன் மார் வரலாறுகள் மட்டுமன்றி, ஆண்டுக் கூறப்படும் சமய உண்மைகளும், தக்க சான்றுகளால் அரண்செய்யப் பெற்று நிலவுதல் உணரப்படும்.

# இறைவனின் எளிவரும் இயல்பு

நாவீறர் திரு. நா. ஸ்ரீகாந்தராமாநுச சுவாமிகள், காரைக்கால்.

அறப்பெரியனை இறைவன் உயிரளிப்பான் உலகிடை அவதரித்தருளுகின்ருன் என்பது வேத நூற்றுணிவு. எல்லாம் வல்ல திருமகள் கேள்வன், தனது உயர்வற உயர்ந்த நிலையிலிருந்து தாழ்ந்த நிலைக்கு இறங்கி வந்தருள்வதையே அவதாரம் என்று சான்ருேர் பாராட்டிப் போற்றுகின்றனர். அவதாரம் கீழிறங்குதல் என்ற பொருளைத்தரும் வடமொழிச் சொல்லாகும்.

என்ருலும்; அவதாரம் என்பது உயர்வற உயர்ந்த பரம்பொருளின் திருவவதாரம் ஒன்றினையே குறிக்கும். சிற்றறிவும் சிறுதொழிலுமுடைய உயிர்களின் பிறப்பை அவதாரம் என்று சொல்லப் போகாது. பேரருளாளர்களான ஆழ்வார்கள் ஆசாரியர்களின் தோற்றத்தை அவதாரம் எனல் உபசார வழக்காம்.

ஆகவே, ஈண்டு அவதாரம் என்பது இறைவனின் திவ்வியமான அவதாரத்தினையே குறிப்பதாகும். இறைவனது அவதாரம் என்ருல், வான வெளியிலிருந்து கீழே இறங்கி வருதல் என்று பொருளாகாது. அதற்கும் அவ்வாறு பொருள் கொள்ளுதல் பேதைமையின் பாற்படும்.

காலம் இடம் என்ற இரண்டாலும் வரையறுக்கப்படாமல், எங்கும் நீக்கமற நிறைந்து நிற்கும் பரம்பொருள், அருள் காரணமாகத் தன் இச்சையால், காலத்தாலும் இடத்தாலும் வரையறுக்கப்பட்ட, ஒரு வடிவம் தாங்கி வந்து தோன்றுதல் என்பதே, அவதாரம் என்ற சொல்லின் பொருளாகும்.

அவதாரங்களைப் பிறப்பு என்று கூறுவதும், கொள்ளுதலும் கூடாது. என்ருலும் சில இடங்களில் அவதாரத்தைப் பிறப்பு என்றே கூறப்படுவது உண்டு. அதனை மரபு வழுவமைதியாகக் கொள்ளுதல் வேண்டும். இறைவன் தன் பேரருளால் அவதரித்தருளுகின்ருன் என்ற பெரியதோர் உண்மையைத் தன்னகத்து உடைமையே சநாதனமான இந்து மதத் மதத்தின் பெருஞ்சிறப்பாகும்.

குற்றமற்ற வேதங்களாலும், உபநிடதங்களாலும், வேத நாலுணர்ந்த முனிவர்களாலும், வேதம் தமிழ் செய்த மகாமதிகளாலும், இறைவன் திருவவதரித்தருளுகின்ருன் என்ற குற்றமற்ற கொள்கை பெரிதும் ஒப்பப்படுகின்றது.

வேதாந்த மதங்கள் என்று கூறப்படும், துவைதம் அத்துவைதம் விசிஷ்டாத்துவைதம் என்ற மூன்று பெரும் சமயங்களும் இறைவன் அவதரிக்கின்ருன் என்ற கொள்கையைப் பெரிதும் ஆழ ஆதரித்தும் வற்புறுத்தியும் வலியுறுத்தியும் வருகின்றன.

சநாதன சமயங்கள் என்னும் மேற்கூறிய மூன்று பெருஞ் சமயங்களின் மாபெருங் குரவர்களான சங்கரர், மத்வர், இராமாநுசர் என்ற மூன்று பெரியோர்களும் இறைவனது அவதாரங்களை முழுதும் ஏற்றுக்கொண்டும், ஆதரித்தும், ஈடுபட்டும், அத்திருவவதாரப் பெருமான்களையே தஞ்சமாகப் பற்றியும் ஊன்றியும் தோய்ந்தும், உபாசித்தும், உபதேசித்தும் போந்தனர்.

வைதிக சமயங்களாலும், வைதிக உத்தமர்களாலும் கொண்டாடப்பெறும் இறைவனின் திருவவதாரங்கள் கற்ருர்க்கு ஓர் பற்ருகும் பெற்றியன.

அறத்தின் திருவுருவம், கண்ணன் எம் பெருமானே என்று பேரறிவாளர்கள் அறுதியிட்டுள்ளனர். அவதரித்தருளாது போயின், அவன் பரம்பொருள் ஆகான் என்பது வைணவதர்மத்தின் சீரிய கொள்கையாகும்.

பரிபாடல் என்னும் பழம்பெருந்தமிழ் நூலில், திருமாலின் திருவவதாரங்கள் போற்றிப் பரவப்பெற்றுள்ளன. மேலும், இறைவன் அவதரித்தருள அடிப்படை

யான காரணமும் மிக அழகாகக் கூறப் பட்டிருக்கின்றது.

''முதன்முறை இடைமுறை கடைமுறைத்
தொழிலில்
பிறவாப் பிறப்பிலை பிறப்பித் தோரிலையே'',

என்று அப்பரிபாடல் கூறுகின்றது. முதன் முறை இடைமுறை கடைமுறைத் தொழில் என்பது படைத்தல் காத்தல் அழித்தலாகிய முத்தொழில்களை. இம்மூன்று தொழில்களையும் நடத்தும் பொருட்டு, இறைவன் பிறவாத பிறப்பில்லை என்றும், அவ்வாறு இறைவன் பிறந்தருளினாலும், அவனைப் பிறப்பித்தவர் ஒருவரும் இலர் என்றும் மிகத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

உயிர்கள் தாம் செய்த புண்ணிய பாவங்கள் காரணமாக, அவற்றின் பயனைத் துய்க்க இறைவனால் பிறப்பிக்கப்படுகின்றன. இறைவனுக்கோ இவ்வாறான புண்ணிய பாவமாகிய வினை ஒரு சிறிதும் இல்லாமையால், அவன் பிறப்பதற்கு அவனது இச்சையே காரணமாதலால் ''பிறப்பித் தோரிலையே'' என்றமை பெரிதும் ஊன்றி உணர்தற்குரியது.

''பிறப்பித் தோரிலையே'' என்றமையால் திருமாலுக்கு மேற்பட்டதோர் தெய்வம் இல்லை யென்பதும், அவனே முழுமுதற் கடவுள் என்பதும், அறுதியிடப் பெறுகின்றதை நன்கறியலாம். மேலும், பரிபாடலில் மற்றோரிடத்தில்;

''இருவர் தாதை இலங்குபூண் மாஅல்
தெருள நின்வர வறிதல்
மருளறு தேர்ச்சி முனைவர்க்கும் அரிதே.

என்று கூறப்பட்டுள்ளது. தெய்வ நாயகனை திருமாலின் அவதார காரணத்தை ஐயம் திரிபற உணர்ந்த மெய்ஞ்ஞானியரான முனிவர் பெருமக்களாலும் அறியப் போகாது என்பது, இவ்வரிகளின் பொருளாதல் அறிக. அவதாரம் என்ற சொல், உயர்ந்த நிலையில் இருந்து தாழ இழிவது என்று பொருள் தருமாதலின் அதற்கேற்ப ''தெருளநின் பிறப்பறிதல்'' என்று கூறப்படாது, ''தெருளநின் வரவறிதல் மருளறு தேர்ச்சி முனைவர்க்கு மரிதே'' என்று கூறியுள்ளமை, எண்ணம் புகுந்து தித்திக்கும் பேருண்மையாகும்.

''பிறப்பில் பல்பிறவிப் பெருமானை
மறப்பொன்றின்றி என்றும் மகிழ்வனே''

என்பது திருவாய்மொழித் தேசிகரான சுவாமி நம்மாழ்வாரின் திருவாக்கு ஆகும். இத்திருவாய்மொழியின் கருத்தும் கொள்கையும், அப்படியே பரிபாடலில் கூறப்பட்டிருத்தல் காண்க.

அளத்தற்கரிய அன்பனும் அருளாளனுமான இறைவனுக்கும், உயிர்களுக்கும் ஒன்பது வகையான உறவுகள் கூறப்படுகின்றன. இவ்வுறவுகள், ஒழித்தற்கரிய உறவுகள் என்பதும் சான்றோர்தம் முடிபாகும்.

''உன்தன்னோ டுறவேல் நமக்கிங்கு
ஒழிக்க வொழியாது''

என்ற திருப்பாவை ஈண்டு நினைத்தற்கு உரியதாம்.

இவ்வுறவினை ''நவவித சம்பந்தம்'' என்பர் வடநூலார். அவற்றுள் ஒன்று ''உடையவன் உடைமை'' யென்னும் உறவு. இதனை ''சுவசுவாமி சம்பந்தம்'' என்பது வடநூல் வழக்கு. அதாவது இறைவன் தன்னை யொழிந்த ஏனை உயிருள்ளவும் இல்லவுமாகிய உலகப் பொருளை யெல்லாம் தனக்குச் சொத்தாக உடையவன் என்னும் சம்பந்தம். இது ''நாராயணன்'' என்னும் அரிய பெரிய திருமந்திரப் பெயர்ப் பொருளால் அறியப்படுவது ஒன்று. இவ்வுண்மைமையை உள்ளவாறு உணர்தலே நல்லறிவு எனப் பெறுகின்றது. ஆன்மாக்கள் எல்லாம் இறைவன் உடைமையாதலின், உடையவன் உடைமையைக் காத்தருளும் இயல்பால் திருவவதரித்தருளுவன் என்பது போதரும்.

இறைவன் ஆன்மாக்களுக்கு உடலுறுப்புக்களைக் கொடுத்து, அவற்றைக் கொண்டு கண்டபடி, உலக விடயங்களில் தொண்டுபட்டுத் திரியாது, அறிவு பெறுவதற்கேதுவாக வேதமாகிய கலைகளை நீர்மையால் வகுத்தருளினவன். எனினும், அவற்றால் பயனுறாது மாந்தர் ''உண்டியே உடையே யுகந்தோடி'' ''பெண்டிராற் சுகங்களுய்ப்பான் பெரியதோ ரிடும்பை பூண்டு'' ''உண்டதே யுண்டும் உடுத்ததே யுடுத்தும் அடுத்தடுத்துரைத்ததே யுரைத்தும், கண்டதே கண்டும் கேட்டதே கேட்டும்'' கடவநாள் கழித்தலைக் கண்டு பெரிதும் திருவுளம் இரங்கியருளுகின்றான்.

இறைவன் இரக்கம் என்னும் பெருங்குணம் உடையனாதலின், ஆன்மாக்களைத் தன் திருவடிகளில் சேர்ப்பித்துக் கொள்ளுகைக்காகத் தான் மாறிமாறிப் பல பிறப்புக்களில், ''எந்நின்ற யோனியுமாய்ப் பிறந்தாய் இமையோர் தலைவா'' என்ற

படித் திருவவதரித்தருளுகின்ருன்.

இமையோர் தலைவன் இப்படி "நாட்டிற் பிறந்து", "யானைத் தொழில்" பல செய் தருளியும் தன் கருத்து நிறைவேருமை யின், தன்னுடன் என்றும் ஒருபடிப்பட் டொழுகும் நித்திய சூரிகள் என்னும் முக் தான்மாக்களிற் சிலரை உலகிடை அவ தரிக்கச் செய்தருளுகின்ருன்.

அவர்களும், "இந்த உலகின் இருள் நீங்க வந்துதித்து", "அந்தமிழால் நூல் செய்து" நாட்டை உய்வித்தருளினர். இவர்களே, அருந்தமிழ்ச் சான்ருேர்களின் மாகுரவர்களான ஆழ்வார்களாவர். ஆழ் வார்கள் உயர்வற உயர்நலம் உடையவ ஞல் மயர்வற மதிநலம் அருளப் பெற்ற வர்கள். இறைவனிடத்தே அன்பு பூண்டு அவனது கலியாண குணக் கடலுள் ஆழ மூழ்கிய அருளாளர்கள்.

இப்பேரருளாளர்கள் இறைவன் திறத்தே அனுபவித்த ஆராவமுதப்பேரா னுபவத்தைப் பொங்கி வழிந்த தென்னும் படித் "தாம் பெற்ற பேறு" ஏனையரும் பெறுமாறு அருளிச்செயல்மழை பொழிந்து உலகினரைத் திருத்தித் திருமகள் கேள் வனுக்கு ஆளாக்கி உலகை வாழ்வித்தரு ளினர். இவர்களுக்கு, இறைவன் மயர்வற மதிநலம் அருளிய மாபெரும் உண்மையை இவர்களே எடுத்துரைத்து நெஞ்சு நெகிழ் வாராயினர்.

மயர்வறுதலாவது இருள் துயக்கு மயக்கு மறப்பு என்னும் அறிவின்மை-ஐயுணர்வு-திரிபுணர்வு-மறதி ஆகிய இவைமுற்றும் கெடுதல். மதிநலம் : மதி-ஞானம், நலம்-பக்தி. இதனல் பக்திமயமான ஞானத் தைத் தந்தருளினுன்.

'அருள்கண்டீர் இவ்வுலகினில் மிக்கதே' என்றபடி அருளாளர்களான ஆழ்வார் களும், அருள்பெற்ற நம் நாதமுனி முத லான தேசிகர்களும், மறைமுனிவர்களும், அவதாரங்களில் ஆழத் தோய்வாராயினர்.

"ஒத்தாரும் மிக்காரும்" இலாத பொறை வயிற்றினன் ஆனதிருமால், இத்தனையும் செய்தருளியமைக்குக் காரணம், "உடை யவன் - உடைமை" என்னும், குடல் தொடக்கே என்று வேத வேதாந்த நூல் கள் அறுதியிடுகின்றன.


எல்லாம் வல்ல இறைவனுக்கும், ஆன் மாக்களுக்கும் உள்ள இவ்வுறவு, ஒரு குடம் தண்ணீரோடேபோம் இவ்வுலக உறவு போன்றதன்றிக்கே "ஒழிக்க ஒழி யாதது" ஒன்ருதலினுலும், உலகம் எல் லாம் தனதாதலினுலும், ஆன்மா தனக் கென ஒரு கைம்முதலில்லாத் தரித்திர ஞதலினுலும், மேலும் தன்னைத்தானே காப்பாற்றிக்கொள்ளும் இயல்பிலனுதலினு லும், "குறைவொன்றும் இல்லாத கோவிந் தன்," உயிர்களால் எனைத் தொன்றும் எதிர்பாராமலே, தானும் அவதரித்தருளி, தன் திருவவதார சீல குணங்களில், கால் தாழ்ந்து நீராய் அலைந்து கரைந்து, "எத் திறம்" என்று மோகித்துக் கிடக்க ஆழ் வார்களையும் அவதரிக்கச் செய்து, திரு வருள் செய்பவனுகின்ருன்.

இருகை முடவனுக்கு யானை படிந்து கொடுத்துத் தன்மீது ஏற்றிக்கொள்வது போலச் சிற்றறிவும் சிறு தொழிலுமுடைய சீவர்களுக்காக, அறப்பெரியன் தாழவந் தருளும் அவதாரத்தினைப் "பெரியவன் தாழ்ச்சி" என்று பொறுக்கமாட்டாது பேரறி வாளர்கள் ஆன ஆழ்வார்கள் மூவாறு மாதங்கள் மோகித்துக்கிடந்தார்கள் என் னின், அவதாரச் சீர்மையை யாரே அறி தல் கூடும்?

இப்பேருண்மையினை, ஆத்த தமர்களில் தலைவரும், வைதிகோத்தமர்களின் குல பதியுமான சுவாமி நம்மாழ்வார், "வெறி தேயருள் செய்வர் செய்வார்கட்கு" எனத் தமிழ்மறையாம் திருவாய்மொழியில் அரு ளிச் செய்வாராயினர்.

"உன்மனத்தால் என் நினைந்திருந் தாய்" என்கிறபடியே "பிராப்திக்கு உபா யம் அவன் நினைவு" என்று, இதனை சுவாமி உலகாசிரியரும் தமது முக்தி தரும் சாத்திரங்கள் மூவாறில் ஒன்ருன ஸ்ரீவசன பூஷணத்தில் அருளிச் செய்வதும் இங்கு அறியத் தக்கதாகும். பரிபாடல் என்னும் செந்தமிழ்ச் சங்கநூலுள் கூறப்பெறும் "நாறிணர்த் துழாயோன் நல்கினல்லதை, ஏறுதலுளதோ வீறுபெறுதுறக்கம்" என்ற உயரிய கருத்தை நோக்குமிடத்து, அந்த மில் இன்பத்து அழிவில் வீட்டின் இயல் பும், அதனையருள்பவன் திருமால் என்ப தும், அதனை ஆன்மாக்கள் அடைதற் பொருட்டும், "தன் பொற்பாதம் ஏத்து வார் பிறப்பறுப்பான்" வேண்டியும் அவ தரித்தருளும் "எளிவரும் இயல்பினன் இறைவன் என்பதும் ஆதிய கருத்துக்கள் தமிழ்கூறும் நல்லுலகில் நிலைபெற்றிருந் தன வென்பது நன்கு விளங்கும்.

PUBLIC LIBRARY
12 JUL 1973
MADRAS



தில்லைக் கூத்தப் பெருமான்



ஸ்ரீ வேதநாராயணப் பெருமாள் (மூலவர்)
வளையமாதேவி

# ஸ்ரீராமாயண ரசப்பிரவாகம்

மகாவித்துவான். ஸ்ரீமத். பி.ப. அண்ணங்கராசாரிய சுவாமிகள்

(காஞ்சிபுரம்.)

இனி, இராமனின் அடுத்த திருக்குணத்தை ஆராய்வோம். கீழே ''ஆத்மவான் யார்?'' என்கிற பன்னிரண்டாம் வினவுக்கு அடுத்ததான ''கோபத்தை வென்றவன் யார்? என்கிற பதின்மூன்ரும் வினு, விவரிக்கப்படாமல் விடுபட்டிருக்கிறது. அந்த வினவை, மேலுள்ள பதின்மூன்ருவது வினவோடு சேர்த்து, விவரிக்க வேணுமென்று விட்டிருந்தோம். அப்பதின்மூன்ரும் வினவுக்குப் 'போர்க்களத்தில் எவனுடைய கோபத்தைப் பார்த்துத் தேவர்களும் அஞ்சி நடுங்குவார்கள் ?' என்றுபொருள். ஆகவே இவ்விரண்டு வினக்களும், ஒன்ருேடொன்று முரண்பட்டிருப்பதுபோல் தோன்றும். முரண்பாடின்றிப் பொருந்த வைத்து விவரிப்போம் இங்கு.

இராமனின் சீற்றம் :

பதின்மூன்ருவது வினவுக்கு 'கோபத்தை வென்றவன் யாவன் ?' என்ற பொருளே யன்றிக் 'கோபமில்லாதவன்யாவன் ? என்பதாகப் பொருளன்று. கோபத்தை வெல்வதாவது - அதனை சுவாதீனப்படுத்தி வைத்துக்கொள்ளுகை. சிலர் எப்போதும் கோபமுடையவர்களாகவே காணப்படுவர்; சிலர் அடியோடு கோபமில்லாதவர்களாயிருப்பர். இரண்டும் தவறு. கோபத்தைக் காட்டிக் காரியங்கொள்ளவேண்டிய சமயங்களில்மாத்திரம் கோபத்தை வரவழைத்துக் கொள்வதும், காரியம் ஆனவாறே அக்கோபம் இருக்குமிடம் தெரியாமற்போம்படி செய்துகொள்வதும், உத்தம புருடர்களின் இயல்பாகும். அரசன் குற்றவாளிகளேயும், ஆசிரியர்கள் மாணுக்கர்களேயும், தந்தையர் மக்களேயும், தண்டிக்கவேண்டிய காலங்களில் அவசியம் தண்டிக்க நேர்கிறது. இதற்குச் சாத்திரங்களில் அனுமதியுள்ளதாதலால், மேற்சொன்ன தண்டனைகள் தவருகமாட்டா. அங்ஙனம் தண்டிக்க நேரும்போது கோபமுண்டாகியே தீரும். கோபமில்லையாகில் தண்டிக்க முடியாதன்ருே ? ஆகவே இக்கோபம் தவிர்க்கமுடியாததே. 'எப்போது பார்த்தாலும் இவன் முகத்தில் எள்ளுங் கொள்ளும் வெடிக்கிறது' என்னும்படியாகச் சிலருளர். அவர்களை வடநூலார், 'பிரகிருதிகோபநா' என்பர்; கோபமே இயல்பாகவுள்ளவர்கள் என்றபடி. இராமனது தன்மையோ என்னில்; போர்க்களத்தில் காணும்போது ''அங்கணஞாலம் அஞ்ச'' என்றும், ''முனைத்த சீற்றம் விண்சுடப்போய் மூவுலகும் பிறவும் அனைத்தும் அஞ்ச'' என்றும், ''உயிர்மலங்கக் கொண்ட சீற்றமொன்றுண்டு'' என்றும், ''சினத்தினல் தென்னிலங்கைக் கோமானைச் செற்ற'' என்றும் சொல்கிறபடியே, வந்தேறியானகோபம் அளவிட வொண்ணுததாகவேயிருக்கும். மற்றைப் போதுகளில் பார்த்தாலோ, 'இவனிடத்து ஒருநாளும் கோபம் வந்து குடிபுகாது' என்னும்படி பரமசாந்தனுயிருப்பன்.

வான்மீகி முனிவனது வினக்களுக்கு விடை கூறுகின்ற நாரத முனிவர் ''இக்ஷ்வாகுவம்சப்ரபவோ ராமோநாம ஜநைச்ச்ருத:' என்று இராமபிரானைச் சொல்லத் தொடங்கி ''ஸதைவ ப்ரியதர்சந:'' என்றும், ''ஸோமவத் ப்ரியதர்சந:'' என்றுஞ் சொல்லி, மேலே ''காலாக்நி ஸத்ருச: க்ரோதே'' என்றும் சொல்லியுள்ளார். இரண்டு வகையான வினக்களுக்கும் தகுந்தவிடைகளே கூறிவைந்தார். தசரதச் சக்ரவர்த்தியிடம் ஸ்ரீராமகுணங்களே யெடுத்துரைக்கின்ற நகரத்துச் சனங்கள் 'ஸ்மிதபூர்வாபிபாஷீ' என்று இராமனைச் சிறப்பித்துக் கூறுகின்றனர். யாவரோடும் சிரித்துக்கொண்டே அழகாகப் பேசுமவனும்இராமன். அயோத்திமா நகரிலுள்ள மக்களையெல்லாம் உற்ருருறவினராகவே பாவித்து நாடோறும் சேமம் விசாரிப்பவனும் இராமன்; இதற்குமேலே சொல்லுவதை முக்கியமாகக் குறிக்கொண்மின்;

''நாஸ்ய க்ரோத: ப்ரஸாதச்ச
நிரர்த்தோஸ்தி கதாசந

ஹந்த்யேஷ ஜயமாத் வத்யாக்
அவத்யேஷு ந குப்யதி"

என்றார்கள் அயோத்தி மக்கள். இதன் பொருள் யாதெனில்: 'இராமனுக்குக் கோபமோ அனுக்கிரகமோ ஒருபோதும் காரணமின்றி உண்டாகாது; தண்டிக்க வேண்டியவர்களைத் தண்டித்தே தீருவன்; குற்றமற்றவர்களிடத்தில் கோபமே கொள்ளான்' என்பதாம்.

இரு வினாக்கள் ஏன் :

'கோபத்தை வென்றவன் யாவன் ?' என்கிற ஒரு கேள்வியே போதுமென்றும், பதினாறுவது கேள்வி தனிப்பட வேண்டியதில்லையே என்றும், சிலர் நினைக்கக்கூடும். கோபத்தை வென்றவன் என்றால், வேண்டாத சமயங்களில் அதனை விலக்கி, வேண்டிய சமயங்களிற் கொள்பவன் என்பதே பொருளாதலால் ஒரு கேள்வியே போதும்; இரண்டு கேள்விகள் வேண்டாவென்று நினைப்பது தகுதியே. ஆனாலும் பதினாறுவது வினாவின் பொருள்கள் யாவும், பதின்மூன்றும் வினாவில் அடங்கியிருக்க முடியாது ஆதலால், தனிப்பட்டவினா அவசியமேயாம் என்க.

'ஜிதக்ரோத:' என்பதில் சாதாரணமான கோபம் தோன்றும். இந்த வினாவில் கண்கொண்டு காணவொண்ணாத (அபரிமிதமான) கோபம் தோன்றும். இரண்டுக்கும் உதாரணமாக இராமாயணத்தில் சில இடங்கள் காட்டுகின்றோம். யார்க்கும் கோபமுண்டாவது தீங்கு செய்வாரிடத்தில் தானே; தீங்கு செய்பவர்கள் இருவகைப் படுவார்கள். தம் இடத்தில் நேராகத் தீங்கு செய்பவர்கள் ஒரு வகுப்பினர்; தமது அன்பர்களிடத்தே தீங்கு செய்பவர்கள் மற்றொரு வகுப்பினர். உலகில் நம் போல்வாருடைய இயல்பு எப்படிப்பட்டதென்றால், நமது அன்பர்களுக்கு யாரேனும் தீங்கு செய்தால் அதைப் பொருட்படுத்தாமல், நமக்கு நேராகத் தீங்கு செய்பவர்களின் திறத்திலேயே சீற்றங்கொள்வதுதான், பெரும்பான்மையாகக் காணப்படுமியல்பு. பகவானது தன்மை இதற்கு மாறாயது. பிறர் தன்னளவிலே எத்தனை தீங்கு செய்தாலும் சீற்றமுறான்; மனோ விகாரம் சிறிதும் அடையான்; தன்னடியார்க்குத் தீங்கிழைப்பார் திறத்திலேயே மிக்க சீற்றங்கொள்வான். இதைக் கண்ணபிரான் ஒரு சந்தர்ப்பத்தில் அற்புதமாக எடுத்துரைக்கின்றான். பாண்டவர்க்காகத் துரியோதனாதியரிடம் தூதுபோன காலத்தில், துரோணர் பீஷ்மர் துரியோதனர் ஆகிய மூவரும் தம்தம் இல்லத்திற்கே கண்ணபிரான் அமுது செய்ய வரக்கூடுமென்றெண்ணித் தங்கள் மனைகளிலே உணவுவகைகளைச் சிறப்பாகச் செய்து வைத்திருந்தார்கள். கண்ணனோ பரம பக்தரான விதுரருடைய திருமாளிகையிலே அமுது செய்துவிட்டு, அவர்களிடத்திலே வந்துசேர்ந்தனன். அப்போது துரியோதனன் கண்ணபிரானைக் கேட்கிறான். "கண்ணா! பீஷ்மரையும் விட்டு, துரோணரையும் விட்டு, என்னையும்விட்டு, ஓர் இழிகுலத்து அன்னத்தை உண்டுவந்தாயே இதுவென்ன?" என்று. இதற்குக் கண்ணபிரான் விடையிறுக்க வேண்டியவிதம் யாதெனில்; "விதுரர் இழி குலத்தில் பிறந்திருந்தாலும், அவர் இழி குலத்தவர் அல்லர்; 'கடவுளின் அடியார்கள் இழிகுலத்தவராகார். அடியார்கள் அந்தணர்களாகவே மதிக்கத்தக்கவர்' என்கிறபடி, அவர் அந்தணர் தலைவரேயாவர்: ஆதலின் நான் இழிகுலத்தவன் இட்ட உணவை உண்டதாகக் கொண்டு என்னைப் பழிப்பது உசிதமன்று" என்றிங்ஙனே விடையிறுத்திருக்க வேண்டும். ஆனால், கண்ணன் இங்ஙனம் விடை கூறாமல், 'துவேஷிகளின் அன்னத்தை உண்ணவுங்கூடாது; துவேஷிகளுக்கு அன்னமிடவுங்கூடாது; நீ பாண்டவர்களிடத்தில் துவேஷங்கொண்டவன்; பாண்டவர்கள் எனக்கு உயிர் நிலை' என்று விடை கூறியருளினான். ஒருவன் ஒருவனுடைய உடலில் கத்தியிட்டால் மருந்திட்டு ஆற்றலாம். உயிர்நிலையில் கத்தியிட்டால் மருந்தில்லையே. பாண்டவர் போன்ற பாகவதர்களைப் பகவான் தன் உயிர்நிலையாகக் கருதுகின்றான். கீதையில் கண்ணபிரான் "ஜ்ஞாநீ து ஆத்மைவ மே மதம்" என்று ஞானிகளைத் தனது உயிராகவும், அவர்களுக்குத்தான் உடலாகவும் சொல்லி யிருப்பதும் குறிக்கொள்ளத்தக்கது. ஆக இவற்றால், பகவான் தன்னிடத்து அபசாரப் படுமவர்களைப் பற்றிச் சீற்றங்கொள்ள மாட்டானென்றும், தன்னடியார் திறத்து அபசாரப்படுமவர் திறத்தே மிகச் சீற்றங்கொள்வனென்றும், திடமாக அறியலாகிறது. இவ்விஷயத்தைக் கூரத்தாழ்வான் வரதராஜஸ்தவத்தில், ஒரு சுலோகத்தில் விளங்கவைத்தார். இரணியாசுரன் பகவான் திறத்தில் அபரிமிதமான அபராதங்களைச் செய்திருந்தும், பகவான் சிறிதும் சீற்றங் கொள்ளா

திருந்து, பரமபக்தனுன பிரகலாதாழ்வானிடத்து அவன் அபசாரப்பட்டதற்காகவே கனத்த சீற்றங்கொண்டதாக, அந்த சுலோகத்தில் உள்ளது.

இராமனின் இருவகைச்சீற்றம் :

இங்ஙனமே, இராமபிரானும் தன்னளவில் அபசாரப்பட்டவர்களிடத்தே சீற்றங் கொள்வதற்கு மிகவும் சிரமப்படுவதாகவும், தன்னடியார் திறத்து அபசாரப்பட்டவர்களிடத்துத் தான் கோபமிட்ட வழக்காகின்றதாகவும், வான்மீகி வெகு அழகாகக் கூறுகின்றார்.

இராமன் கடலரசனை நோக்கிச் சரணுகதி செய்து, மூன்றுநாள் கடற்கரையிலே சயனித்துக்கிடந்தும், கடலரசன் வந்து முகங்காட்டாத அளவில், கடலரசன் மீது கோபமுண்டாகப் பெற்றதாகப் பொதுவாகச் சொன்னார். பதினாலாயிரம் இராட்சசர்கள் ஜனஸ்தானத்தில் தனக்குத் தீங்கிழைக்க வந்தபோதும், இராமன் கோபத்தை வரவழைத்துக்கொண்டதாகக் கூறினர். (''க்ரோதம் ஆஹாரயத்'' — வரமாட்டேனென்ற கோபத்தை வருந்தி வரவழைத்துக் கொண்டான் என்பது பொருள்).

மற்றோர் இடமும் காட்டுகின்றோம், அங்குப் பாருங்கள். அவ்விடம் மிக மருமமானது. இராவணன் ஒரு வானர வீரனைப் புண்படுத்தியது கண்ட இராமன் 'கோபஸ்ய வசமேயிவாந்'—கோபத்தைத் தன் வசத்தில் வைத்துக் கொள்ள மாட்டாமல், கோபத்துக்கே தான் வசப்பட்டுவிட்டதாகக் கூறியமை, கீழே நாம் விரிவாக நிரூபித்த செய்திகளை நிலைநாட்டவல்லது.

ஆக, பதின்மூன்றாம் வினவுக்கு இலக்கியமாகக் கொள்ளவேண்டியவிடம் இன்னதென்றும், இப்பதினாறாங் கேள்விக்கு இலக்கியமாகக் கொள்ளவேண்டியவிடம் இன்னதென்றும், தெளிவுற விளங்கக் காட்டினோமானோம்.

முடிவுரை :

இனி, அன்பர்களுக்கு விண்ணப்பம்' இங்ஙனே அபூர்வராமாயணம் எழுதும் வியாஜத்தினால் இராமபிரானது திருக்கலியாண குணங்களை ஆச்சரியமாக அநுபவிக்கப்பெற்ற எனக்கு, ஆரும் நிகரில்லையே என்று ஒருவகை இன்ப இறுமாப்புண்டாகின்றது. உண்மையில், மிக விலக்ஷணமான இந்த அனுபவம் எனக்குப் பண்டைய மிக்க பெரு நல்வினையின் பயனாகவே வாய்த்ததென்று பெரிதும் கொண்டு களிக்கின்றேன்.

இராமன் திருவருள்நீடூழி வாழ்க!

# (நூற்பயன்)

நாடிய பொருள்கை கூடும்; ஞானமும் புகழும் உண்டாம்;
வீடியல் வழியது ஆக்கும்; வேரியங் கமலை நோக்கும்;
நீடிய அரக்கர் சேனை நீறுபட்டு அழிய வாகை
சூடிய சிலை இராமன் தோள்வலி கூறு வோர்க்கே

—கம்பர்.

# "தொழுதால் ஆம்"

சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் (பாலகவி) அவர்கள்

தேவகோட்டை.

உடம்பு கொண்டு தோன்றியிருக்கின்ற உயிர்த் தொகைகள் அனைத்திற்கும், முடிவில் சிவத்துடன் இரண்டறக் கலந்தின்புறும் கடமையும் உண்டு. ஆனால், மானிடயாக்கை பெற்று வாழும் நாம் அனைவரும், இவ்வொரு பிறப்பிலேயே, அப்பெறற்கரும் பேற்றைப் பெறுதற்குரிய நெறி முறைகளைக் கடைப்பித்துப் பயனடைய வேண்டுவது மிகமிக இன்றியமையாததாகும்.

எண்ணற்ற பல பிறவிகளை எடுத்து வருந்தி இறுதியில் இம்மனிதப் பிறவியை நாம் பெற்றிருக்கிறோம். இப்பிறவியின் அருமையை எடுத்துக் கூறாத சமய நூல்கள் இந்நிலவுலகத்தில் எதுவும் இல்லை. "மானுடத் துதித்தல். கண்டிடிற்கடலைக் கையால் நீந்தினன் காரியங் காண்" என்பது சிவஞான சித்தியார். பெறுதற்கரிய இந்த மனிதப் பிறவியைப் பெற்றும், இப்பிறவியாற் பெறுதற்குரிய பேற்றைப் பெறமுயலாமல், மற்றைப் பிராணிகளைப் போல் உண்டும், உறங்கியும் வாழ் நாட்களைக் கழிப்பது அறிவுடைமை யாகாது.

ஒருவர் தமக்குரிய கடமையிலிருந்து வழுவி ஒழுகுவாரானால், அவரைத் தாழ்ந்தவராக மதித்து ஒதுக்குவதை உலகியலிற் கண்கூடாகக் காண்கின்றோம். அங்ஙனமே பிறவிக்குரிய கடமையிலிருந்து வழுவி ஒழுகுவோரை, அவரது தாழ்ந்த ஒழுக்கத்திற்கேற்ற கீழ்த்தரமான பிறவிகளில் இறைவனது திரோதான சக்தி செலுத்தி விடும். இந்த உண்மையை "எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவியே யாதினும் அரிதரிது காண், இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ ஏது வருமோ அறிகிலேன்'' என்று தாயுமான அடிகள் வலியுறுத்தி உணர்த்தியுள்ளார்.

எதிர் காலத்தைப் பற்றிச் சிந்தித்துத் தெளியும் வாய்ப்புடைய மனத்தையும் சொல்லாடுதற்குரிய நாக்கையும், சிந்தித்தபடி செயலாற்றுதற்குரிய உடம்பையும் மனிதன் பெற்றிருக்கின்றான். மற்ற எந்தப் பிராணிக்கும் இந்த நல்வாய்ப்புக் கிட்டவில்லை. எதிர்கால நிலையைச் சீர்தூக்கிச் சிந்தித்துத் தெளிந்து அதற்கேற்பச் சொல்லையும் செயலையும் வழிப்படுத்துவார்க்குத் துன்பம் வரமாட்டாது. "எதிரதாக் காக்கும் அறிவினார்க்கில்லை அதிர வருவதோர் நோய்'' என்பது திருக்குறள். உள்ளுவதனைத்தும் உயர்வுடையனவாகவும், பேசுவதெல்லாம் பயனுடையனவாகவும், செய்வன முழுதும் நயமுடையனவாகவும் எவரிடம் உள்ளனவோ, அவரே மானிடயாக்கை பெற்றதன் பயனைக் குறைவின்றியுடையும் குறிப்பினராவர்.

உடம்பு பற்றி நிற்கும் எதிர் காலம் ஒரு எல்லையை முடிவாகக் கொண்டிருக்கும். உயிர் பற்றி நிற்கும் எதிர்காலமோ; அங்ஙனம் ஒரு எல்லையை முடிவாகக் கொண்டதன்று. உயிர் தோற்றம் பெற்ற காலம் என ஒன்றில்லையாதலின், அதுமுடியும்

காலம் என ஒன்றும் இல்லையாகும். ஆகவே, நமது எதிர்காலமென்பது இந்த உடம்பு பற்றிய எல்லையளவில் நின்று விடாது, காலங்கடந்து செல்லக்கூடிய தென்பது அறியத் தக்கது. இங்ஙனம் கால அளவிறந்து செல்லும் நமது எதிர் காலத்தில் கருத்துச் செலுத்தாது, கால அளவுட்பட்டு உடம்பு பற்றி நிற்கும் எதிர் காலத்தில் மட்டும் கருத்துச் செலுத்திப் பெறுதற்கரிய இப்பிறப்பை வீணாக்கிக் கொள்ள நம் சமயச் சான்றோர்கள் இடங் கொடுக்கமாட்டார்கள்.

தாய் வயிற்றிலிருந்து பிறக்கும் பொழுதே நம்மைத் தொடர்ந்த துன்பம் சாவுவரை விட்டு நீங்காமலிருப்பது கண் கூடு. உயிர்களுக்குத் துன்ப நீக்கம் உண்டாவதற்கு ஒரே வழி, பிறவாமலிருப் பதுதான். பிறவாமலிருப்பதற்குரிய ஒரே வழி, பிறப்பும் இறப்பும் இல்லாத பொரு மானைச் சேர்ந்திருப்பதே. இதனை நன் குணர்ந்த நமது ஞானாசிரியர்கள், இதற் குரிய சாதனங்களைத் தமது நூல்களின் வாயிலாக அறிவுறுத்தி யருளினார்கள். இங்ஙனமுள்ள சாதனமும், அதற்குரிய பயனுமாகிய இரண்டையும் ஒரு சேர வுணர்த்தும் திருப்பாடலொன்றைத் திரு மூல தேவ நாயனார் தமது திருமந்திர மாலைக் கடவுள் வாழ்த்தில் இருபத்தைந் தாம் செய்யுளாக அமைத்து வழங்கியிருக் கின்றார். அது,

"பிறப்பிலி பிஞ்ஞகன் பேரரு ளாளன்
இறப்பிலி யாவர்க்கும் இன்பம் அருளும்
துறப்பிலி தன்னைத் தொழுமின் தொழுதால்
மறப்பிலி மாயா விருத்தமும் ஆமே"

என்பதாகும்.

சிவபெருமானுக்குள்ள உயர் தனிச் சிறப்புக்கள் பலவற்றுள், அவரது பிறப் பிறப்பின்மை முன்னணியில் நிற்பது. சிவ பெருமான் ஒருவரையன்றி மற்றைத் தேவரும் மூவரும் கூடப் பிறப்பிறப்பின் பாற்பட்டு வருந்துபவரேயாவர். "எல்லார் பிறப்பும் இறப்புமியற் பாவலர்தம், சொல் லால் தெளிந்தேம் நம்சோணேசர் — இல்லில். பிறந்த கதையும் கேளேம் பேரு லகில் வாழ்ந்துண், டிறந்தகதை யுங் கேட்டிலேம்" என்னும் வெண்பா, இவ் வுண்மையைத் தெள்ளிதிற் புலப்படுத்திக் கொண்டிருக்கின்றது.

பிறப்புடன் இறப்பு, தொடர்புபட்டு நிகழு வது. பிறந்தவர் அனைவரும் ஒரு காலத் தில் இறந்தவராவது உறுதி. "தோற்றம் உண்டேல் மரணமுண்டு" என்பது நம்பி யாரூரர் திருவாக்கு. எவருக்குப் பிறப் பில்லையோ அவருக்கு இறப்பும் இல்லை. அந்தப் பிறப்பின்மையையும் இறப்பின்மை யையும் உடையவர் சிவபெருமானே என் பதை முதலிரண்டு வரிகளிலுள்ள "பிறப் பிலி — இறப்பிலி" என்ற சொற்றொடர் களால் ஆசிரியர் உணர்த்தியருளினார். "பிறப்பில் பெருமானைப் பின்றாழ் சடை யானை" என்பது தேவாரம். சர்வ வியா பகரும் சிதானந்தரும், அரூபரும், அற்பு தரும் உமாசகாயரும், பரமேசுவரரும் முதலிடை இறுதியில்லாத ஏகரும்' என்று சிவபெருமானைக் கைவல்ய உபநிடதம் துதிக்கின்றது.


குரண்டன் என்னும் அசுரன் ஒருவன் தேவர்கள் அனைவரையும் நடுங்க வைத் துத் துரத்தியபொழுது, அவர்களது அடைக்கலக் குரலுக்குச் செவிசாய்த்துக் கொக்கின் உருவம் கொண்ட அவ்வசு ரனைத் தடிந்து, அவனது இறகைப் பிடுங் கிச் சிவபெருமான் தமது திருமுடியிலே தரித்துக் கொண்டார். இது அவரது மறக் கருணை—அறக்கருணையாகிய இருவகைப் பேரருளையும் புலப்படுத்திக் கொண்டிருக் கின்றது. இதனை நமது ஆசிரியர் 'பிஞ்ஞ கன் பேரருளாளன்' என்ற சொற்றொடர் களில் தெளிய வைத்துள்ளார். பிஞ்ஞகன் என்பது 'கொக்கிறகைத் தரித்தவன்' என்னும் பொருளையுடையது. 'கொக்கிறகு சென்னி உடையான் கண்டாய்' என்பது திருத்தாண்டகம். பேரருளாளராயிருக்கும் சிவபெருமான், பிறப்பிறப்பில்லாது நிலை பேறுடையவராயும் விளங்குவதால், அவ ரது பேருதவி இடையீடு படாது எப்பொழு தும் உயிர்களுக்குக் கிடைத்துக் கொண் டிருக்கின்றது.

சிவபெருமானது குறிப்பு, உயிர்கள் அனைத்திற்கும் இன்பம் வழங்குவது

ஒன்றே. இவர் உறுதியாக இன்பம் விளைவிக்கின்றார் என்று தைத்திரிய உபநிடதம் உரைக்கின்றது. 'சங்கரனார் தம்மைப் போலத் தம் அடியார்க்கும் இன்பம் அளிப்பவர்' என்பது ஆளுடைய பிள்ளையார் திருவாக்கு. எல்லா உயிர்களுக்கும் இன்பம் வழங்குவது இறைவன் குறிப்பேயாயினும், உயிர்களின் பக்குவ நிலைகளுக்குத் தகவே, அவ்வின்பப் பேறு அமைந்து பயன் தருவதாயிருக்கின்றது. இங்ஙனமுள்ள வேறுபாடு உயிர்களின் பக்குவ—அபக்குவங்களை யொட்டிய தாதலின், இறைவன் வழங்கும் இன்பத்தில் ஏற்றத் தாழ்வுகளைக் கற்பிப்பது அறிவுடைமை யாகாது. அதனாலேயே 'யாவர்க்கும் இன்பம் வழங்கும் துறப்பிலி' என்று ஆசிரியர் அருளிச் செய்து, எப்போதும் இன்பம் அருளுவதில் துறப்பில்லாதவன் என்பதையும் வலியுறுத்திவைத்துள்ளார்.

சிவபெருமானது திருவடிகளைச் சிந்திப்பதும், துதிப்பதும் பூசிப்பதுமாகிய தொழுகையினாலன்றி வேறெவற்றினாலும் உயிர்கள் உய்தியடைய முடியாது!" 'பரவுந் தனிக் கடம்பூரிற் பைங்கண் வெள்ளேற்றண்ணல் பாதம், இரவும் பகலும் பணிய இன்பம் நமக்கதுவாமே' என்பது தேவாரம். 'சிந்தனை நின்றனக்காக்கி நாயினேன்றன் கண்ணிணை நின் திருப்பாதப் போதுக்காக்கி வந்தனையும் அம்மலர்க்கேயாக்கி வாக்குன் மணிவார்த்தைக் காக்கி' என்பது திருவாசகம்.

மனமொழி மெய்களால் இறைவனைத் தொழுபவர்கள், அவனை மறவாத நிலையை அடைந்து அதனால் மலநீக்கமும், சிவப்பேறும் பெறுவது உறுதி. 'சிவபெருமானை அறிந்து எல்லாப் பாசங்களிலிருந்தும் விடுதலை பெறுகின்றான்' என்று சுவேதா சுவதர உபநிடதம் கூறுகின்றது. 'பாச வல்வினை தீர்த்த பண்பினன்' என்பது சம்பந்தர் திருவாக்கு. சிவனை மறவாமையாகிய பெரும்பேறும், மாயைக்கு விருத்தமாகிய பேரின்ப வாழ்வும், பிறப்பிறப்பில்லாத பேரருளாளனாக-யாவர்க்கும் இன்பம் வழங்குபவனாக அவன் விளங்குகின்றானென்பதை உணர்ந்து வழிபாடு செய்பவர்களுக்கு எளிதில் எய்துவன என்பது இத் திருப்பாடலிற் கண்ட செம்பொருளாகும்.



"உமைமுருகுடையார்" (சோமாஸ்கந்தர்)

# "தோட்டிமை யுடைய தொண்டர்"

திரு. ரா. சண்முகசுந்தரஞ் செட்டியார், அப்பர் இல்லம்,
திருவதிகை.

மண்ணுலகில் பிறந்து இறைவனை வாழ்த்தும் வழியடியார், பொன்னுலகம் பெறுதல் இன்று நான் கண்டொழிந்தேன் என்பர் சுந்தரர் பெருமான். வானிடத்தவரும் மண்ணிடை வந்துஅரன் தன்னை அருச்சித்துப் பெறுதற்குரிய பேரின்ப நிலை கூடுவர் என்பர் ஆன்றோர். எனவே மண்ணுலகில் மக்களாய்ப் பிறந்தவர் அப்பேரின்ப நிலையடைய மேற் கொள்ள வேண்டுவனவாகவுள்ள மூன்று நிலைகளை ஈண்டுக் கருதுவாம்.

அவை ஆழ்ந்து ஆராயும் அறிவு, தொழுகை, தொண்டு என்பன. ஆழ்ந்து ஆராயும் அறிவாவது காணப்படும் பொருள்களை நன்கு ஆய்ந்தாய்ந்து உண்மை தெளிதல். தெளிவடைதற்கு அங்கமாக அமைவது ஆராய்ச்சி. இங்ஙனம் ஆராய்ச்சியால் காணப்பட்ட வுடம்பானே காணப்படாத ஆன்மாவையும் பரமான்மாவையும் அறியக் கூடிய நிலை கூடுகிறது. இவ்வாறே உலகத்தின் நிலையறிய முடிகிறது. இவற்றின் இலக்கணங்கள், இவைகளுக்குள்ள தொடர்புகள், பரமான்மாவினிடத்து உயிர்களுக்குள்ள கடமைகள், அவைகளால் சாதிக்கும் பயன்கள், இன்னபிற துணிந்து தெளிய ஆழ்ந்து ஆராயும் அறிவால் இயல்கிறது.

இனி உலகின் நிலையாமையையும், உயிர்களது சிற்றறிவு சிறு தொழில்களையும் உணர்ந்து, இறைவன் திருவருள் துணையின்றி உயிர்கள் பேரின்பநிலையடைய மாட்டா என்பது ஆராய்ச்சியால் தெளிவடைந்தபோது, இறைவனை நாடுகின்ற முயற்சி தோன்றும். அம்முயற்சியே இறை வழிபாடு என்பர். அதுவே தொழுகையென்று ஈண்டு குறிக்கப் படுகிறது. இறையுண்மையையும் அவனதாற்றலையும் உயிர்களது சிறுமையையும் தெளிந்த எச்சமயத்தினரும்,இறைவனைத் தொழுவதனை நியமமாகக் கொண்டுள்ளமை உலகம் அறிந்ததே. அத்தொழுகை உடலாலும், உள்ளத்தாலும், உரையாலும் நிகழ வேண்டுவது.

இவ்வாறு தொழுகை முற்றியவர் தொண்டினைப் பற்றுவர். அத்தொண்டு இறைவனை வழிபடுவதும், இறையடியவர் தமக்குத் தொண்டாற்றுவதும், இறையறியாமக்கட்கு இறையருள் பெறும்படித் தொண்டு செய்வதுமாக விளங்கும். இவ்வாறு தொண்டின் நிலைத்தவர் உயிர்ப்பற்றும், உடற்பற்றும், நீங்கியவராய்ப் பற்றற்றான் பற்றினையே பற்றாகவுடையவர். உலக நிலையில் தன்னலம் நீங்கிப் பிறர் நலம் பேணி இறையருள் பெறும் வாய்ப்புடையவராயிருப்பர்.

இத்தகைய தொண்டின் நிலைத்த பெரியோரது அருள்நிலையைத் தெரிவிப்பதே "தோட்டிமை யுடைய தொண்டர்" என்னும் தலைப்பின் பொருளாகும். இது தொண்டில் நிலைத்து நின்ற திருநாவுக்கரசரது திருவாக்கு. அவர், " பூணியாய்ப்பனி செய், என் கடன் பணிசெய்து கிடப்பதே, தொண்டனுய்த் திரிவாய்" என்ற மூதுரைகளை மொழிந்தவர். தொண்டே அவரது வேட்கையாய் விளங்கியது. தொண்டு சமய வாழ்க்கையின் இறுதி நிலை என்று அகத்தியர் சிவாலய முனிவருக்கு உணர்த்தியது உணரத்தக்கது.

> "குருவுருவும் வெண்ணீ றெழுத்தஞ்சுங் கோயில்
> அரனுருவும் என்தலைமே லாக்கும்—திருவடியும்
> சிட்டான அர்ச்சனையும் தொண்டும் சிவாலயர்க் கென்று
> இட்டா ரகத்தியனு ரெட்டு"

எனவரும் அகத்தியர் தேவாரத்திரட்டின் நுதலிய பொருள் காண்க.

இறையருளை நாடுவானொருவன் முதன் முதலில் குருபரன் திருநோக்கால் அருள் பெற்றும், திருவெண்ணீறும் திருவைந்

தெழுத்தும் சாதனமாகக் கொண்டும், திருக் கோயில்கள் அடைந்தும், ஆங்காங்கு சிவ பரன் உருவங்களைத் தரிசித்தும், அவன் திருவடிஞானம் பெற்றும், அவன்றன்னை நாளும் பூசித்தும் போற்றியும் அவனது மீளாவடிமையாக நின்றும் பேரின்ப வீடாகிய சிவானந்தம் பெறுதலைப் படி முறையாக வகுத்துத் தருவன இவ்வெட்டு என்பது ஒருதலை.

இனி அச்செந்நெறியே மருணீக்கியாரும் திலகவதியாராகும் குரு முதலையடைந்தும், அவர் தம்மிடத்துத் திருவெண்ணீறு திரு வைந் தெழுத்துப் பெற்றும், திருவதிகை யில் திருவீரட்டானப் பெருமான் திருக் கோயிலை வலம் வந்தும், அதிகை நாதன் திருவுருவங்கண்டு வணங்கி மிக நாளும் பூசித்தும், பாடலாற் போற்றியும், திரு நாவுக்கரசெனும் நன்னாமம் பெற்றும், உழ வாரத் தொண்டு புரிந்தும், மீளாவடிமை யாகிச் சிவானந்தத்தே அழுந்தி இன்புற்றி ருந்ததனையும் சான்றாக உய்த்துணர்ந்து தெளியலாம்.

இவ்வாறாகிய தொண்டர் நிலையை அறி விப்பது 'தோட்டிமையுடைய' என்னும் அருஞ்சொற்றொடர். 'தோட்டிமை' என் பதற்கு ஒற்றுமை என்று பொருள் கூறுவர் நச்சினார்க் கினியர். அச் செந்தமிழ்ச் சொல் சீவக சிந்தாமணியில்,

"தண்ணுமை முழவம் வீணை
குழலொடு குயிலைத் தண்பூங்
கண்ணொடு புருவம் கைகால்
கலை அல்குல் நுசுப்புக் காமர்
ஒண்ணுதல் கொண்ட ஆடல்
தோட்டிமை யுருவம் நோக்கி
வெண்ணெய் தீயுற்ற வண்ணம்
ஆடவர் மெலிகின் றாரே"

என்னும் திருவிருத்தத்தில் காணக் கிடக் கின்றது. இதனுள் பரத நாட்டியம் நிகழ்த்தும் ஒரு நங்கை, கண் முதலிய உறுப்புக்களைத் தண்ணுமை முதலிய இசைக்கருவி ஒலிகளுக்கு ஒற்றுமைப் பட நடனம் செய்தமை விளக்கப்படுகின்றது. பரதம் என்பது பாவம், இராகம், தாளம் என்னும் மூன்றும் ஒற்றுமைப்பட நிகழும் பான்மையதாகும். அச்செந்தமிழ் மொழி யை ஒற்றுமை என்ற பொருளிலேயே திரு நாவுக்கரசர் சமய நிலையை யொட்டிப் பயன் படுத்தக் காண்கிறோம். சொற்குறுதியாகும் அவரது தேவாரத்தில்,

"தொழுதகங் குழைய மேவித்
தோட்டிமை யுடைய தொண்டர்
அழுதகம் புகுந்து நின்றார்
அவரவர் போலும் ஆரூர்
எழிலக நடுவெண் முத்தம்
அன்றியும் ஏர்கொள் வேலிப்
பொழிலகம் விளங்கு திங்கட்
புதுமுகிழ் சூடி னாரே"

எனவரும் திருவாரூர்த் திரு நேரிசை காணத்தக்கது. ஈண்டு இறைவனோடு ஒற்றுமை அடையுந்திறம் கூறப்படுகிறது. ஞானத்தால் தெளிந்த ஓர் அடியவர் பாச அறுதியைப் பெற்றவராய்த் தனக்கு முதல் வனாகும் இறைவனிடத்து உடனாய் ஒற்று மைப் பட்டுத் தானென வேறு காணப் படாது ஒடுங்கி அத்துவிதமாய் நின்று அவ் விறைவன் பணியில் வழுவாது விளங்குவர்.

இக்கருத்தினை 'அவனே தானே யாகிய வந்நெறி, ஏகனாகி இறை பணி நிற்க' என்னும் சிவஞான போதத்துப் பத்தாம் சூத்திரப் பகுதி தொகுத்துக் கூறுகின்றது. அவ்வாறு அத்துவிதமாய் நிற்கின்ற தொண்டர் இறைவனைத் தொழுகின்ற தன்மையையும், உள்ளம் அன்பினால் குழைந்ததாய் இறைவனோடு ஒன்றிக் கூடு கின்ற தன்மையையும் விளக்குகின்ற வாகீ சர் 'தொழுதகம் குழைய மேவித் தோட்டி மையுடைய தொண்டர்' என்றார். தொழு கை இறைவனது உபகாரத்தை மறவாமை காரணமாக நிகழப் பெறுவது. அதனால் அன்பு அகத்தின்கண் அதிகரிக்க அது குழைந்து இறைவன் தனக்கு இருப்பிட மாகும். அங்ஙனம் அமர்ந்த ஆண்டவ னோடு அத்துவிதமாய்க் கலந்து நிற்கும் ஒற்றுமை உயிர்கட்கு நிகழ, அவ்வுயிர்கள் இறைபணியில் நிற்பாராய்த் தொண்டில் தலைப்படுவர். அத்தொண்டு உறுதியைத் தரும். இறைவனை நீங்கி நிற்க வருந்தும் மனமுடைய வராதலால் 'அழுதகம்' என்று குறித்தார். சிவபரம்பொருள் அவர்தம் அகத்தையே கோயிலாகவுடையது. "நக மெலாந் தேயக் கையால் நாண்மலர் தொழுதுதூவி, முகமெலாங் கண்ணீர் மல்க முன் பணிந்தேத்துந் தொண்டர், அக மலாற் கோயிலில்லை ஐயனையாறனார்க்கே" என்ற திருநேரிசையால் இது தெளிவாகும்.

தொண்டர் அகங்கள் சிறந்த கோயில் களாக அமைவதால் அவர்களை 'நடமாடுங் கோயில்' என்பர் திருமூலர். திருத் தொண்டர்கள் நடமாடுவதெல்லாம் உயிர் களை உய்யுமாறு செய்யவும் தங்களை

யொத்த அன்பர்களாகப் பிறரையெல்லாம் ஆக்குவித்தற்குமேயாம். இறைவன் தனது திருவருளால் உயிர்களைச் செந்நெறியில் ஏற்றுவித்தலைக் கடமையாகக் கொண்டவன். ''பித்தராம் அடியார்க்கு முத்தி காட்டும் ஏணி'' என்று போற்றுவர் திருநாவுக்கரசர். அக்கடமை அறிவிப்பதற்கே ஆரூர்ப் பெம்மான் தக்கன்சாபத்தால் தாழ்வு பெற்ற சந்திரனைச் சடையிடைச் சூடி ஏற்றுவித்தான் என்று குறிக்கவே 'திங்கட் புதுமுகிழ் சூடினார்' என்றருளினர்.

திருவருட் செயலும் திருத்தொண்டர்கள் செயலும் ஒத்து நிற்கக் காண்கின்றோம். அம்முறையாதல், திருத்தொண்டர்கள் இறைவனோடு அத்துவிதமாக அஃதாவது தோட்டிமையாகக் கலந்து நிற்கும் பெற்றிமையாலேயாம் என்பது தெளிவு. தொண்டர் செயல் இறைவனது செயலே.

''பெருமையால் தம்மை ஒப்பார்
பேணலால் எம்மைப் பெற்றார்
ஒருமையால் உலகை வெல்வார்
ஊனம்மேல் ஒன்றும் இல்லார்
அருமையாம் நிலையில் நின்றார்
அன்பினால் இன்பம் ஆர்வார்
இருமையும் கடந்து நின்றார்
இவரைநீ அடைவாய் என்றார்''

எனச் சிவபரம் பொருள் கூற்றாகத் தெய்வச் சேக்கிழார் உணர்த்தியது உணரத்தக்கது.

மற்றும் தோட்டிமை என்ற சொல் ஒற்றுமை என்று பொருண்மையுடையதாக அறிந்தோம். அஃது எத்தகைய ஒற்றுமை யென்று துணிவோம். ஒற்றுமை பலவகையாயது. நையாயிகர் சமவாய ஒற்றுமை முதலாகப் பல குறிக்கின்றனர். இங்குணர்த்தப்படும் சம்பந்தம் இருவகைத் தாதான்மியச் சம்பந்தத்துள், இருவகைப் பொருள்களின் சம்பந்தமாகிய அத்துவிதம் எனப்படும். இதனை மெய்கண்டார் சிவஞான போதத்துள் பதினொராஞ் சூத்திரத்தில் விளக்கியுள்ளனர். அச்சூத்திரம், ''காணுங் கண்ணுக்குக் காட்டும் உளம் போற்காணவுள்ளத்தைக் கண்டு காட்டலின் அயரா அன்பின் அரன் கழல் செலுமே'' எனவரும். அறிவிலாத சடமாகும் கண்ணிற்கு, அறிவுடைப் பொருளாகிய உயிர், பொருளைக் காட்டித்தானும் அக்கண்ணோடியைந்து ஒன்றி நின்று, அப்பொருளை யுணர்த்துவதாகும். அதுபோல இறைவன் முதலில் உயிர்க்குக் காட்டி அதனோடியைந்து அத்துவிதமாய் நின்று தான் உணரும். உயிர் பெத்தநிலையிலுள்ள முனைப்பின்றி, இம்முத்திநிலையில் தானொடுங்கி இறைநிலை மீதூரப் பணியில் நிற்கும் என்பது புலனாம். இந்நிலையான அத்துவிதந்தான் தோட்டிமைக்குப் பொருளாவது.

தோட்டிமை, தொட்டிமை எனும் இரு மொழிகள் ஒரு பொருண்மையவாய்ச் சிந்தாமணியில் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆதலால் தோட்டிமை யென்பது பிழைபட்ட பாடமாகக் கருதுதற்கிடனில்லை.

இனி இங்ஙனமாக அத்துவிதமாய்க் கலந்து நின்றவுயிர், இறைவனை மறவாததால் அயரா என்றுணர்த்தப்பட்டது. அதனைத் 'தொழுது' என்றதனால் விளக்கினர். மறவாமையால் நிகழ்வது அன்பின் பெருக்கு. அதனை 'அகங்குழைய' என்றது விளக்கியதாகும். அன்பு பெருக ஆனந்த விளக்கமாகிய சிவானந்தானுபூதியைப் பெற்றமையை 'அரன்கழல் செலுமே' என்று சூத்திரம் குறித்தது. அந்நிலையை 'மேவி' என்றது அறிவித்ததாகும். அவ்வநுபூதியைப் பிரிவாற்றாமைக்காக விரும்பிய உயிர்வருத்தம் என்பதனை 'அழுதகம்' என்றுணர்த்தினர். எனவே அன்பருள்ளத்தே பிரியாது விளங்குவன் இறைவன் என்பார் 'புகுந்து நின்றார்' என்று நுதலினர். இங்ஙனமாகப் பதினொராஞ் சூத்திரப் பொருள் இத் திருநேரிசையில் உணரலாகும்.

மேலும் 'தோட்டிமையுடைய தொண்டர் என்பதனால், தொண்டர் பாசவிடுதியின் பொருட்டு ஒற்றுமையை நாடி இறைவனோடு ஒடுங்கி நிற்பர் என்பது பெறப்படும் இது பெத்தநிலை. அவ்வாறு அத்துவிதமாய் நிற்கும் முயற்சி உயிரிடத்து நிற்றலின் 'உடைய' என்றுணர்த்தினர். முத்திநிலை உடனாகக் கூடுதலின் தொழுகையும் அன்பின் பெருக்கும் கைகூட ஆனந்த விளக்கம் ஏற்படுதலும், பிரிவாற்றாமையால் உயிர்வருந்துவதாகும். அதனைத் தீர்வுகாண உயிரினகத்தே இறைவன் விளக்கமாகவும் உயிரின் நிலை தோன்றாமையாகும். அதனையறிவிக்கவே அழுதகம் புகுந்து நின்றாரென்று இறைவன் செயலாகவுணர்த்தினர். ''தோட்டிமை யுடைய தொண்டர் தொழுதகங் குழைய மேவி அழுதகம் புகுந்து நின்றார்'' என்று முறைப் படுத்திப் பொருள் காண்டல் சிறப்புடையதாம்.

# மாணிக்கவாசகரும் திருக்கழுக்குன்றமும்

அருட்டிரு. அழகர் அடிகளார்,
[திருக்குறள் பீடம், மாம்பாக்கம் குருகுலம், மதுராந்தகம்]

(முற்றொடர்ச்சி)

பூணொ ணாததோர் அன்பு பூண்டு
  பொருந்தி நாள்தொறும் போற்றவும்
நாணொ ணாததோர் நாணம் எய்தி
  நடுக்கடலுள் அழுந்திநான்
பேணொ ணாத பெருந்துறைப்
  பெரும் தோணி பற்றி உகைத்தலும்
காணொ ணாத்திருக் கோலம்நீ வந்து
  காட்டி னாய்கழுக் குன்றிலே

மாணிக்கவாசகர் அன்பும் நாணமும் ஒருங்கே எய்திப் பெருந்துறைத் தோணியைப் பற்றித் திருக்கழுக்குன்றக் கரையில் வந்து கரையேறியதாகத் தம் வாழ்க்கை அடைவை இப்பாடலிற் கூறுகின்றார். கல்வி என்னும் பல்கடலின் எல்லையாகிய, திருமறைப் பதியாம் மறை மலை முகடு ஏறியே, தில்லையாகிய அருள் வெளித்தலத்தை அடைய வேண்டுவது முறைபோலும்!

**அன்பு :**

அன்பு என்பது நம்மிடமுள்ள ஓர் ஒப்பற்ற செல்வம், உயிர்ச்சொத்து. 'அன்பின் வழியது உயிர் நிலை' என்கிறார் வள்ளுவர். அது உள்ளத்தில் எங்கோ புதைந்து கையாள முடியாதபடி இருக்கிறது. சிற்சில நேரங்களில் சிலரிடம் சிறந்து வெளிப்படுகிறது. மிகச் சிலரிடத்தில் பெரிதும் வெளிப்படுகிறது. அடிகள் போன்றாரிடத்தில் அது முழுதும் வெளிப்படுகிறது.

உடம்பு நம்மிடம் உள்ள கண்ணுக்குத் தெரிகிற சொத்து. இது பெற்றோர் தந்தது என்று எண்ணுகிறோம். உடம்பு இல்லையேல் ஒன்றுமே இல்லை. அதைச் சார்ந்த வீடு, வாசல், மாடு, மனை எல்லாம் கூட சொத்துதான். அவை எல்லாம் புறச் சொத்துகள். நம் நண்பர்கள் உறவினர் முதலியோர், பொருள்கள் எல்லாம் புறப் புறச் சொத்துக்கள்; உடம்பு அகப்புறச் சொத்து. மனம் முதலிய கருவி கரணங் கள், நம் அகத்தே பெருகும் அறிவு, அன்பு முதலியன அகச்சொத்துக்கள். புறச் சொத்துக்களைப் போற்றவும் பாதுகாக்கவும், அகச் சொத்து வேண்டும்' அகச் சொத்தைச் செம்மையாகப் பெருதவர்கள், புறச்சொத்தையும் செம்மையாகச் சேர்க்கவோ, காப்பாற்றவோ முடியாது. ஏற்ற அறிவு, அன்பு முயற்சிகள் இல்லாத சோம்பேறிகளால் பொருள் சேர்க்கமுடியுமா?

**சைவசமயம் :**

உடம்பின்உள்ளேஉயிர்எனஒருபொருள் இருக்கிறது என்று தெரியாதவர் பலர்; மனம் என்று ஒன்று உண்டா? உண்டாயின், அஃது எங்கே? என்று கேட்பவர் பலர். பலர் என்றால் உலகாயதர் முதலிய சமயவாதிகள். உடம்பே உயிர் என்று சொல்லும் மதங்களும், உடம்பு வேறு உயிர் வேறு என்று கூறும் மதங்களும் உண்டு. புத்த மதத்தினர் உயிர் தனியே இல்லை என்பர். சமணர் 'உயிர்' தனியே உண்டு என்பர். சைவம் உயிரிலேயே ஆண் பெண் உண்டு; தக்க இரு ஆண் பெண் உயிர்கள் தமக்குள் ஒன்றுபட்டால் உயிர் நலங்களில் மிகுந்து பிறவி நீங்கி வீடு பேறெய்தும்; இயற்கையிலேயே அதற்குரிய அன்பு என்னும் கவர்ச்சி நிலைகள், அவற்றின் உயிரில் அமைந்துள்ளன என்றெல்லாம் கூறுகிறது. விரிவு ஈண்டுத் தேவையில்லை. இவ்வாறு பல்வேறு பட்ட கொள்கையுடைய சமயங்களில் உயிர்

வேறு உடல் வேறு என்றும், உயிரின் அன்பு நிலை இது என்றும், எளிதாக அறிந்துகொள்ளுகிற நிலையில் உள்ள, சைவ சமயத்தில் நாம் பிறந்திருப்பதே ஒரு பெரிய பேருகும்.

**உயிரின் தன்மை :**

உயிரின் தன்மை அறிவு. அது சிறிதாக இருப்பதால் பல வகையிலும் வளரத் தக்கது. அறிவு வளர்ந்து நயப்பட்டால், அதுவே அன்பு என்னும் உணர்ச்சியாகும் அன்பு தான் உயிரின் பெருகிய சொத்து; அகப்பொருள். திருவள்ளுவர் பொருட் பாலில் கல்வியால் வளர்ந்த அறிவு, இன் பத்துப் பாலில் கலையாகி வளர்ந்து மென் பதமுற்று, அறத்துப்பாலில் மிகவும் நய முற்று அன்பாய்க்கனிந்து உருவாகிறது என்கிருர். அது வளர்வதற்கு உலகப் பொருள்கள் உதவியாக இருக்கின்றன. அவற்றைக் கையாண்டும் வழங்கியும் அன்பை நாம் மிகுவிக்கவேண்டும்.

கல் உயிரற்றது. அதற்கு அறி வில்லை; அதனுல் அதற்கு உணர்ச்சியும் இல்லை. அறிவுள்ள உயிர்களுக்கெல்லாம் உணர்ச்சி யிருக்கும். அறிவு வலிவானது; அது நயப்பட்டால் உணர்ச்சி என்று பெயர் பெறும். அதுவே அன்பு. அறிவு வேறு அன்பு வேறு என்பது, பண்படாத தன்மையையும், பண்பட்ட தன்மையையும் எண்ணியே ஆகும். அறிவு நன்மை தீமை அறியும், அறிந்து தீமையை நீக்கி நன்மையிற் செல்லமுயலும். எதிரில் வரப் போவதை ஓரளவு உய்த்துணரும். அவ் வளவே அறிவினுல் ஆவது. அன்பு நம் உடம்பில் ஒரு மின்னுற்றலை, அமிழ்த நிலையை உண்டாக்கும். பலவற்றையும் பலரையும் அருளையும் நம்மில் ஒற்றுமைப் படுத்திப் பயன் முகமாக்கும்; நயப்பட்ட அன்பால் மெய்யுணர்வு (ஞானம்) அரும் பும்; அருள் அம்மலரில் மணக்கும். அறி வினுல் அளந்தறிய முடியாதவைகளை எல்லாம் உணர்ந்து கொள்ளுகிற நிலை, மெய்யுணர்வு நிலையில் உண்டாகும்.

**இறைத் தன்மை :**

அன்பு உயிரின் தன்மை என்று மேலே கண்டோம். அருள் இறைமைத்தன்மை. அன்பு தன் முழு வளர்ச்சியை அடைந்த பின் அருள் நம்மிடம் பதியும். அறிவு முதிர்ந்தால், நயப்பட்டால் அன்பாகுமே தவிர அருளாகாது. அன்பு தன் முதிர்ந்த நிலையில் அருளைப் பெறும்; ஒரு பெண் வளரவேண்டிய அளவு பெண்மைத் தன் மையில் வளர்ந்தால், பின்பு தாய்மைத் தன்மை பெறுவதைப் போன்றது இது. தாய்மைத்தன்மை குழந்தையோடு கூடி யது; அத்தயை தாய்மை ஒரு பெண்மை யால் மட்டும் பெறக் கூடிய தன்று; மற் ருெருவர் கூட்டுறவால் அடைவதொன்று. அதுபோல, உயிரின் பண்பாகிய அன்பு தானே முதிர்ந்து முதிர்ந்து அருளாவ தில்லை; இறைவன் பண்பாகிற அருட்பதி வைப்பெற்றே அருளாய்த் தழைக்கின்றது. "அருளென்னும் அன்பீன் குழவி" என்ருர் திருவள்ளுவர்.

**அருளின் முதிர்ச்சி :**

அருளின் முதிர்ச்சியில் அவா அற்றுத் தன்னலம் இழந்து, பிறர் நலமே கருதும் பெரும் பண்பாகிய (தியாகம்) துறவுள்ளம் தோன்றும். அதனுல்தான் அன்புடை மையை இல்லறத்திலும், அருளுடைமை யைத் துறவறத்திலும் வைத்தார் திரு வள்ளுவர். அன்பே, பரிவு நல்லுணர்வு அடக்கம் ஒப்புரவு ஈகை என்னும் பல் வகைக் கோலங்களாக, மக்கள்பால் நிகழ் கின்றது. விரிவு திருக்குறள் இல்லற வியலில் காண்க. அருளின் விரிவு, துற வறவியலில் இருக்கின்றது.

அன்பை அகச் சொத்து என்று கண்டு, வாழ்வில் அதற்கு முதன்மை கொடுத்து அதனை 'அகப் பொருள்' என்றே பெய ரிட்டு, இலக்கண இலக்கியங்கள் செய்த தமிழ் மொழியையும் நாட்டையும் போன்ற வேறு மொழியும், நாடும் உலகத்தில் உண்டா? இப்படிக் கேட்பதனுல் பிறநாடும் பிறமொழியும் மதிப்பற்றவையென்பதன்று. ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு வகை மதிப் புண்டு. அவற்றில் தமிழ்க்கு உள்ள சிறப்பை எடுத்துக் காட்டுவதாகவே, இதனைக் கொள்ள வேண்டும். தமிழில் தான் பொருளிலக்கணம் இருக்கிறது. வேற்றுமொழியில் இல்லை.

**அகவினத்தார் :**

அன்பை அகம் என்றும், பொருளைப் புறம் என்றும் வழங்கி, அன்பை வளர்க்கும் காதல் ஒழுக்கத்தினை அகத்திணை என்றும், பொருள் முதலியவற்றைப் பெருக்கும் பிற முயற்சிகளைப் புறத்திணை என்றும், தமிழ் நூலார் வழங்குவர். சங்க இலக்கியங்கள் எல்லாம் இவ்வகைப் புறப் பொருள் பற்றிய வாழ்க்கை நூல்களாகவே இருக்கின்றன. அகப் பொருளாகிய அன்பை வளர்ப்பார் அகவினத்தார் என்றும், அன்பை வளர்க்காதவர் எல்லாம் புற வினத்தார் என்றும் கூறப்பெறுவர். இவ்வழக்கைப் புலப்படுத்தியவர்கள் வடலூர் இராமலிங்க அடிகள் ஆவர்.

**பிணக்கற்ற பெருமை :**

தேவைகளினால் உயிர்களுக்குள் தொடர்பும் அன்பும் ஏற்படுவது போலவே, பிணக்கும் ஏற்படும். ஆகவே, தேவைகள் உள்ள வரையில் அவை எவ்வளவு சிறிய தேவையானாலும், எவரிடமேனும் சிறிதாவது கருத்து வேறுபாடும் பிணக்கும் இருந்தே தீரும். தேவைகள் குறையக் குறையக் கருத்து வேறுபாடும் பிணக்கும் நீங்கும். பிணக்கில்லாதவன் இறைவன் ஒருவனே. காரணம் அவன் தேவையற்றவன். பிறப்பறுக்கும் நோக்கமுடைய துறவிகளுக்கு உடம்பும் மிகை ஆதலின், அவர்களுக்குத் தேவைகள் மிக மிகக் குறைவாக இருக்கும். ஆகவே, அவர்கள் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்னும் பிணக்கற்ற பெரு நிலையில் நின்று உலகுக்கு அருளால் நன்னெறி காட்டிவருவர்.

**அன்பும் நாணமும் :**

பிறவிச் சொத்தாக இருந்தாலும் 'அன்பு' என்பது அறியாமையினாலும், தேவை வேட்கையினாலும், எங்கோ புதைந்து கொண்டு எளிதில் வெளிப்படாததாய் இருக்கிறது. ஆகவே, தான் அதைப் **'பூணுணாத அன்பு'** என்றும், பூண்டு விட்டால் அதுவே ஒப்பற்ற செல்வமாய் நம்மை உயர்த்துமாதலின் **'ஓர் அன்பு'** என்றும் சிறப்பிக்கிறார் அடிகள். கண்ணைப் பொருத்திப் போற்றுகின்ற கண்ணப்பர் போன்றார் அன்பு, எவ்வளவு பெரியதாய் எல்லையற்றதாய் இருக்கவேண்டும். அது இறைவனையே நேரில் இழுத்து வரும் ஆற்றல் உடையது. அருள் நிலையே போல்வது அது. அன்பு முற்றிய நிலையில் அருள் இயல்பாய் இடங்கொள்ளும். அறிவு நிலையில் இறைவனைத் தெளிந்தால் போதாது; அது பொருந்துவதாகாது. அன்பு நிலையில் பொருந்தி (பக்தி செய்து) நாள் தோறும் போற்றவேண்டும். 'பொருந்தி' என்ற சொல்லும் 'நாடோறும்' என்ற சொல்லும் எண்ணத்தக்கவை. மறந்து மறந்து நினைக்காமல் தொடர்பாக இறைவனை நினைத்துப் பக்தி செய்யவேண்டும்.

கெட்டதிலே போகாதபடி தடுக்கும் நிலையில் நம்மிடத்திலே உள்ள ஒரு நல்லியல்புக்கு **'நாணம்'** என்று பெயர். இருக்க வேண்டிய தன்மைகளில் ஒன்று அது. இறைவன் அருளால் அது நம்பால் அமைந்திருக்கின்றது. பெண்களிடம் சிறப்பாக இருக்கவேண்டிய நல்ல தன்மைகளில் அதுவும் ஒன்று.

அன்பு முதிர முதிர நாணம் குறைந்து கொண்டே வரும். அன்பு கெட்ட வழிகளிலே போகவிடாது. ஆதலின், அன்பின் முன்பு தனக்கு வேலையற்ற நாணம் மறைந்து விடுகிறது. காதலர்களின் நிலையில், நாணத்தின் மறைவு நிலையை நன்கு காணலாம். முதல் நிலையில் தமக்குள் அன்பிருப்பினும், காதலர் ஒருவரை ஒருவர் கண்டு நாணமுறுவர். அன்பு முதிர முதிரத் தமது ஒற்றுமை இன்றியமையாதது என்ற நிலை வரவர, நாணம் குறைந்து அடிக்கடி காணவும் பேசவும் தலைப்படுவர். அன்பு பெருகப் பெருக நாணம் அகன்று விடும்.

**அருள் நிலை:**

இதே நிலை அருளிலும் உண்டு. அன்பு தொடர்புடையோரிடம் நிகழ்வதாகலின், அந்நிலையில் இரண்டு என்னும் உணர்வு இருக்கும். அதன் முதிர்ச்சி நிலையில் இரண்டு என்கிற உணர்வு அழியும். அந்த நிலை, அருள் கால் கொள்ளுகிற நிலை. இரண்டென்கிற (துவைத) நிலைமாறி, ஒன்றென்கிற நிலை (அத்துவைத பாவனை) வருகிறபோது, அந்தத் **'துவைத'** உணர்ச்சி நீங்கி ஒழியும்.

(தொடரும்)